பக்கங்கள்: இருபத்தெட்டு + II

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 17 சனிக்கிழமை (02.07.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 218



09
பிரச்சினைக்கு சரியான தீர்வை உருவாக்க முடியும்



16
நீதிமன்றில் தமிழ்மொழி; கையாளவரையறை



21
ஈழத்தமிழரை இனியும் ஏமாற்றாதீர்கள்



25
சாதனை படைக்கும் இந்தியா

# யுத்தக்குற்ற விசாரணை நடத்தத் தவறின் சர்வதேசம் இலங்கை விடயத்தில் தலையிடும்

## எச்சரிக்கிறார் நவநீதம்பிள்ளை



கொழும்பு, ஜூலை 2

யுத்தக்குற்ற விசாரணை மற்றும் இனப் பிரச்சினைக்குப் பொருத்தமான - நிலைத்து நிற்கக்கூடிய - தீர்வு போன்ற விடயங்கள் குறித்து சர்வதேசம் குறிப்பாக அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தி வரும் சூழ்நிலையில் -

இலங்கை மீதான யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை நடத்த இலங்கை அரசு நீண்டகாலம் எடுத்துக்கொள்ளக்கூடாது. நம்பகமான விசாரணையை நடத்தத் தவறினால், இந்த விடயத்தில் சர்வதேசம் தலையிட வேண்டிவரும்.

- இவ்வாறு எச்சரிக்கிறார் ஐ.நா. சபையின் மனித உரிமைகள் பேரவையின் தலைவி நவநீதம்பிள்ளை.

(27ஆம் பக்கம் பார்க்க)

# 429 தடவைகள் நீதிமன்றில் ஆஜர்; ஆனால் இன்னும் இல்லை விடுதலை

## 15 வருடங்களாக சிறையில் வாடும் மட்டு. வாசிகள்

கொழும்பு, ஜூலை 02

429 தடவைகள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டும் இதுவரை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாததால் 15 வருடங்களாக மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஐவர். இவர்கள் பற்றிய மனதை உருக்கும் கதை இது.

கர்ப்பிணியாக கைதுசெய்யப்பட்ட திருமகள் என்பவரும் இவர்களில் ஒருவர். சிறையில் பெற்றெடுத்த தனது குழந்தை இப்போது எங்கே, எப்படி இருக்கிறார் எனத் தெரியாமல் பித்துப் பிடித்த நிலையில் உள்ளார் என்று 'நாம் இலங்கையர்' அமைப்பின் நிறைவேற்று குழு உறுப்பினர் உதுல் பிரேமரட்ன நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் பிறந்து கொழும்பு, தெமட்டகொடையில் வசித்துவந்த திருமகளும், அவரது கணவரும் கடந்த 1996 ஆம் ஆண்டு தெமட்டகொடவில் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இவர்களுடன் மேலும் மூவர் கைதாகினர்.

கைதுசெய்யப்படும்போது திருமகள் கர்ப்பிணியாக இருந்தார். இந்த நிலையில், கைது செய்யப்பட்ட ஐவரும் இன்று வரை மகஸின் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள்.

(27ஆம் பக்கம் பார்க்க)

## நயினை நாகபூஷணிக்கு நேற்றுக் கொடி



நயினை நாகபூஷணி அம்மனின் கொடியேற்றம் நேற்று வெகு சிறப்பாக - பக்தி பூர்வமாக, அடியார்களின் அரோஹரா கோஷங்களுடன் நடைபெற்றது.

## பான் கீ மூனை இன்று சந்திக்கிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 02

அமெரிக்கா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இன்று நியூயோர்க்கில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூனை சந்தித்துப் பேசுவார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலக

(27ஆம் பக்கம் பார்க்க)

### 15 வருடங்களின் பின் நேற்று யாழ்.வந்த

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லாஹ், அவரது அமைச்சின் பல்வேறு செயற்றிட்டங்களை ஆரம்பித்து வைத்தார்.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதி அனுசரணையுடன் நடத்தப்படும் சிறுவர் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம் நல்லூர் பிரதேச செயலகத்தில் குறித்த அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்கினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை இடம்பெற்ற நிகழ்ச்சிகளில் பிரதி அமைச்சர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சுயதொழில் உதவித் திட்டங்களுக்கான நிதி உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து கோண்டாவில் நாராயண முன்பள்ளிக்கு விளை

(27ஆம் பக்கம் பார்க்க)

# அமெரிக்காவும் இந்தியாவும் இணைந்து மஹிந்தவின் அரசை வீட்டுக்கு அனுப்பும்

## விக்கிரமபாகு கருணாரட்ன கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 2

அமெரிக்கா மற்றும் இந்திய அரசுகள் விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க இலங்கை அரசு விரைவில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை வழங்க முன்வரவேண்டும். இல்லையேல், அமெரிக்காவும், இந்தியாவும் இணைந்து மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் நாள் வெகு தொலைவில் இல்லை.

- இவ்வாறு புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. அத்துடன், தாம் அங்கம் வகிக்கப் போவதில்லை என்றும் திட்டவட்டமாக கூறியுள்ளன. எனினும், அரசு நாடாளுமன்ற தெரிவுக் குழுவை அமைக்கும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

தெரிவுக்குழுவை அமைப்பதற்கான பிரேரணையை அரசு 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது. இந்தக் குழுவில் 31 உறுப்பினர்களை உள்ளடக்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

அரசிடம் அரசியல்

(27ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.மாவட்ட அமைப்பாளர் இ.அங்கஜனின்
ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி
யாழ்.மாவட்ட தலைமைச் செயலகமும்
ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்க அலுவலகமும் திறப்பு விழா
03.07.2011 ஞாயிற்றுக்கிழமை 2.30 மணி
இடம் : கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (#80 Temple Road, Jaffna)
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

**உதயன்**
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வெப்பமான காலநிலை காணப்படுவதுடன் மாலை வேளை மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை ப யாழ்ப்பாணம்
ஆடி 01. 2011
பங்குச்சந்தைச்சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6844.51↑
மிலங்கா(MPI) 6344.43↑
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1.3Bn
பங்குகளின் அளவு(No.) 54.53Mn
வியாபாரம்(No.) 17600
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
ஏம்எப் பினான்ஸ் 200.00
பைன்லேஸ் 318.70
கஸ்ரெர்னர் 259.90
இன்டஸ்றியல் அஸ்பர்ஸ் 448.00
சிங்கபுத்திரா 115.00
குறைவு(Top 5 losers) - விலை Rs.
சிலோன கோல்ட் ஸ்ரோர்ஸ் 449.80
சதோசா மோட்டர்ஸ் 246.00
கொமர்ஸல் டிவலொப்மன்ர 115.00
கெப்பிட்டல் டெவலப்பெண்ர் 339.00
சிலோன லெதர் 15.00
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# பக்தர்களின் அரோஹரா கோஷத்துடன் நயினையில் நேற்றுக் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சரித்திரப் பிரசித்திபெற்ற நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமானது.

பிரதம சிவாச்சாரியார் சிவ ஸ்ரீ பா. முத்துக்குமாரசாமி குருக்கள் நண்பகல் 12 மணிக்கு பக்தர்கள் அரோஹரா கோஷமிட கொடியை ஏற்றி வைத்தார்.

முன்னதாக அதிகாலை பூசைகள் வசந்த மண்டப பூசை கொடிச் சீலைக்கான அபிஷேகம் என்பன இடம்பெற்றன.

திருவிழா ஆரம்பமான நேற்றையதினம் வழமையான கொடியேற்றல் உற்சவங்களிலும் பார்க்க இம்முறை மிகவும் பெரும் எண்ணிக்கையில் மக்கள் கலந்து கொண்டனர்.

திருவிழாவில் தென் பகுதியைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

கொடியேற்றம் இடம்பெற்ற சமயம் தென்னிலங்கையைச் சேர்ந்த பௌத்த துறவிகள் சிலரும் கடற்படை அதிகாரிகளும் பக்தர்களுடன் இணைந்து வழிபாடுகள் செய்தனர்.

திருவிழாக்காலங்களில் பெண்கள் கூடுதலான நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்வது அவசியம் என்று அறங்காவல் சபைத் தலைவர் ஆ.தியாகராசா கேட்டுள்ளார்.

நயினாதீவுக்கு வரும் அனைத்து அடியார்களுக்கும் போதிய உணவை வழங்க அமுதசுரபி அன்னதான சபை அனைத்து வசதிகளையும் செய்துள்ளதாக சபையின் முக்கிய உறுப்பினரான எஸ். அம்பிகைபாகன் தெரிவித்தார். (ம-7)

# பரிசளிப்பு விழா

பருத்தித்துறை, ஜூலை 2

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரியின் திறந்த வெளி அரங்கில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் க.தருமலிங்கம், தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்வார். மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி ஜமுனா நந்தகுமார் வழங்கி கௌரவிக்கவுள்ளார். (ற-190)

# 20 வருடங்களின் பின்னர் கேணியடி வைரவருக்கு நாளை பொங்கல் விழா

மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசமான வீமன்காமம், கேணியடி ஞான வைரவர் ஆலயத்தில் 20 வருடங்களுக்குப் பின்னர் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்குப் பொங்கல் விழா நடைபெறவுள்ளது. அன்றைய தினம் விசேட அபிஷேகம் இடம்பெற்று பொங்கல் இடம்பெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பொங்கல் விழாவுக்கு வருகை தரும் பக்தர்களின் போக்குவரத்து வசதிக்காக டச்சு வீதி துரிதமாக புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. அந்த வீதி ஊடாகவும் பக்தர்கள் ஆலயத்துக்குச் செல்ல முடியும். (ற)



இலங்கைத் திருச்சபையின் புதிய பேராயர் மேதகு டிலோறாஜ் கனகசபை நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்குத் தமது முதலாவது விஜயத்தை மேற்கொண்டார். இதன் போது அவருக்கு யாழ். குருமுதல்வர் எஸ்.பி.நேசகுமார் தலைமையில் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

# நாடக விழா

நெல்லயடி, ஜூலை 2

கோவில் கடவை சித்தி விநாயகர் ஆலயத்தின் அண்ணாவியார் பபூன் சிதம்பரப்பிள்ளை நினைவாக நடைபெறும் நாடக விழா நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணிக்கு ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மகேஸ்வர பூசையுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தினால் நடத்தப்படும் வள்ளி திருமணம், அல்வாய் மனோகரா கான நாடக சபா வழங்கும் சத்தியவான் சாவித்திரி, யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியல் கழகத்தின் பவளக் கொடி ஆகிய நாடகங்கள் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக பேராசிரியர் எஸ்.சிவலிங்க ராஜா கலந்துகொள்வார். (ற-319)

# சுதந்திரக்கட்சி தலைமைச் செயலகம் நாளை யாழ்ப்பாணத்தில் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் இராமநாதன் அங்கஜனின் யாழ். மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைச் செயலகமும் ஸ்ரீலங்கா சுதந்திர தொழிற்சங்க அலுவலகமும், நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம், நல்லூர் கோயில் வீதியில் (இல. 80 இல்) திறந்து வைக்கப்படவுள்ளது.

குடாநாட்டிலுள்ள அரச மற்றும் தனியார்துறை அதிகாரிகள், ஊழியர்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர்சங்க உறுப்பினர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், பல்கலைக்கழக, தொழில்நுட்ப கல்லூரி மாணவர்கள், வங்கி அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்துப் பொதுமக்களையும் இதில் கலந்துகொள்ளுமாறு கட்சியின் யாழ். மாவட்ட பிரதான அமைப்பாளர் இ. அங்கஜன் கேட்டுள்ளார். (ஒ-ஐ)

# ஆன்மீக சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூலை 2

கிளிநொச்சி உருத்திர புரம் சிவன் கோயிலில் இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு ''இந்து சமயத்தின் பெருமை'' எனும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. இந்தச் சொற்பொழிவை யாழ். சின்மயா மிஷன் நிறுவனத்தைச் சேர்ந்த பிரம்மசாரிய ஜாக்கிரத் சைத்தன்ய நிகழ்த்துவார். (ற-313)

# உள்ளூர் வாசிகளின் ஆர்ப்பாட்டத்தால் பாணமையில் யாத்திரிகர்கள் இக்கட்டு

## கதிர்காமம் சென்றவர்கள் இடைவழியில் அவதி

அம்பாறை, ஜூலை 2

பொத்துவில், பாணமைப் பகுதியில் உள்ளூர் வாசிகளால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் காரணமாக உகந்தை முருகன் ஆலய உற்சவம் மற்றும் கதிர்காமம் உற்சவத்துக்கென பயணம் செய்த பக்தர்கள் நேற்று பாணமையில் பெரும் சிரமத்துக்குள்ளாகினர்.

பாணமையில் பலமணி நேரம் பக்தர்கள் பயணத்தைத் தொடர முடியாது தடுக்கப்பட்டதுடன், பக்தர்களை ஏற்றிச் சென்ற பெருந்தொகையான வாகனங்களும் அங்கு தரித்து நிற்க வேண்டியும் ஏற்பட்டது.

பாணமைப் பிரதேச மக்களின் உள்ளூர் பிரச்சினையொன்று தொடர்பாக அங்கு மக்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் ஒன்று காரணமாகவே போக்குவரத்து முழுமையாகப் பாதிக்கப்பட்டது.

அங்கு பக்தர்களுக்கு ஏற்பட்ட அவலம் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் செயலாளருமான மாவை. சேனாதிராசா ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக கவனம் கொண்ட தலைவர் சம்பந்தன் பொலிஸ் உயர் மட்டங்களுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொண்டார்.

இதனை அடுத்து குறிப்பிட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை அப்புறப்படுத்தி போக்குவரத்துக்கு ஆவனசெய்தனர். பாதயாத்திரையாக சென்ற பெரும் எண்ணிக்கையானோர் பல மணிநேர தாமதத்தின் பின் பயணித்தனர். (ஒ-30)

# நிகழ்வுகள்

## ஆங்கில இலக்கிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.இந்துக்கல்லூரியின் ஆங்கில இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் தரம் 11 மாணவர்களுக்கான ஆங்கில இலக்கிய கருத்தமர்வு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பாடசாலையின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ற-313)

## செஞ்சிலுவைத் தொண்டர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி. கிழக்கு கிளைப் பிரிவுத் தொண்டர்களின் சேவைக்கு கௌரவிப்பு வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி கிழக்குப் பிரிவுத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் அருட்தந்தை கலாநிதி ஈ.ஜெ.ஜெயரட்ணம், இருபாலை வீரபத்திரன் ஆலய பிரணதார்த்திஹர குருக்கள் ஆகியோர் ஆசியுரையை நிகழ்த்துவர்.

முதன்மை விருந்தினர்களாக பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம், பிரதேச செயலர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொள்வர். (ற-302)

## அமெ. மிஷன் இல்ல அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நவாலி அமெரிக்கன் மிஷன் இல்ல அங்குரார்ப்பண நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் என்று வண.பி. தேவதாஸ் அறிவித்துள்ளார். இலங்கை அமெரிக்கன் மிஷன் தலைவர் வண. அன்னப்பா ஜெயகுமாரன் மிஷன் இல்லத்தைத் திறந்து வைப்பதோடு வண. வி. இராஜ்குமார் விசேட ஆராதனையை நிகழ்த்துவார். (ற-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜ் ராஜரட்ணத்தின் தண்டனை ஒத்திவைப்பு

அமெரிக்க கோடீஸ்வரரான ராஜ் ராஜரட்ணம் மீதான குற்றச்சாட்டுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அவருக்கான தண்டனை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோதமான முறையில் வர்த்தகம் மேற்கொண்ட குற்றச்சாட்டின் கீழ் அவருக்கெதிராக தொடுக்கப்பட்ட வழக்கில் அமெரிக்காவில் குற்றவாளியாகக் காணப்பட்டிருக்கும் கோடீஸ்வரரும், இலங்கை வம்சாவளித் தமிழருமான ராஜ் ராஜரட்ணத்துக்கான தண்டனை அடுத்த மாதம் 27 ஆம் திகதி அறிவிக்கப்பட உள்ளது.

சட்டவிரோதமான முறையில் வர்த்தகம் நடத்த சதித்திட்டம் தீட்டியமை மற்றும் சட்டவிரோதமான முறையில் வர்த்தகம் நடத்தியமை ஆகியன சம்பந்தமாக 14 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டன. வழக்கு விசாரணையின் போது அவர்மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டன.

இவர் குற்றவாளிதான் என்று மன்ஹட்டான் நீதிமன்றம் கடந்த மே 11 ஆம் திகதி தெரிவித்திருந்தது. இவருக்கான தண்டனை இந்த மாதம் 29 ஆம் திகதி அறிவிக்கப்படுவதாக இருந்தது. ஆனால் தற்போது தண்டனைத் தீர்ப்பு அடுத்த மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டு உள்ளது. (10)

# தமிழ் இளையோர் போராட்டம் நாளை லண்டன் லோர்ட்ஸில்

இலங்கை கிரிக்கெட்டை புறக்கணிப்போம் என்கிற மகுடத்தில் பிரிட்டனில் தமிழ் இளையோர் அமைப்பால் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொடர் போராட்டத்தின் இறுதி ஆர்ப்பாட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு லண்டன் லோர்ட்ஸ் மைதானத்தில் இடம்பெற உள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏராளமான தமிழர்களைத் திரட்ட தமிழ் இளையோர் பகீரத முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இணையங்கள் மூலமாகவும் அவர்கள் பிரசாரங்களை முடுக்கிவிட்டு உள்ளார்கள். (10)



வவுனியா மாவட்டத்திலுள்ள 100 இந்து ஆலயங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாபடி ஒருகோடி ரூபாவை பிரதமர் டி.எம்.ஜயரட்ண வவுனியா மாவட்ட அரச அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் நேற்று வழங்கினார்.


# புலம்பெயர் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் கையெழுத்து வேட்டை

## திருமாவளவன் அறிவிப்பு

இந்தியாவின் வெளியுறவு கொள்கையை மாற்றாத வரை இலங்கை தமிழர் பிரச்சினை தீராது என்று விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், இது சர்வதேச சிக்கல் என்பதால் அமெரிக்கா, பிரிட்டனுடன் இணைந்து இந்தியா, இலங்கைத் தலைவரை யுத்த குற்றவாளியாக அறிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை, புலம்பெயர்ந்த தமிழர்கள், இலங்கைத் தலைவரை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டிக்க முயல்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிலையில், அவர்களது நடவடிக்கைக்கு ஆதரவாக விடுதலை சிறுத்தைகள் சார்பில் 10 இலட்சம் கையெழுத்து வேட்டை இயக்கம் ஆரம்பிக்கப்படும் என்று கூறினார் திருமாவளவன்.



இணையச் செய்திகள்

# சனல் - 4 பயன்படுத்திய அசல் வீடியோ பதிவுகள் கிடைத்துள்ளன - பஸில்

எமது நாட்டுக்கும் யுத்த வீரர்களுக்கும் அவமதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் 'இலங்கையின் கொலைக்களங்கள்' என்ற தலைப்பில் பிரிட்டனின் சனல் - 4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட படத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட உண்மையான, மாற்றம் எதுவும் செய்யப்படாத வீடியோ பதிவுகள் கிடைத்திருக்கின்றன என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொலன்னாவையில் நேற்று நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டுக்கு எதிரான சில வெளிநாட்டுச் சக்திகளுக்கு இந்நாட்டிலுள்ள சிலர் உதவுவதாக கூறிய அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, டொலர்களுக்கும், யூரோக்களுக்கும் அடிமையாக வேண்டாம் என தான் அவர்களை கோருவதாகவும் தெரிவித்தார்.

பிரிட்டனின் சனல் - 4 தொலைக்காட்சியால் வெளியிடப்பட்ட 'இலங்கையின் கொலைக்களம்' வீடியோவில் அரச படையினரால் போர்க் குற்றங்கள் நடத்தப்பட்டன என்பதற்கு கண் கண்ட சாட்சியாக காட்டப்பட்டு இருப்பவர்களில் ஒருவர் வாணி குமார்.

இவர் குறித்த செய்தித் தொகுப்பு ஒன்று இலங்கை அரச சார்பான பொஸ்ரன் லங்கா செய்திச் சேவையில் வெளியாகி உள்ளது. இவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைமைப்பீடத்துக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார் என்று அந்த வீடியோ செய்தி கூறுகிறது. (10)

# உடையார்கட்டு, சுதந்திரபுரத்தில் செவ்வாயன்று மீள் குடியமர்வு

முல்லைத்தீவு, ஜூலை 2

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சுதந்திரபுரம் மற்றும் உடையார்கட்டு வடக்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர விரும்புபவர்கள் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 9 மணிக்கு உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ. பத்திநாதன் அறிவித்துள்ளார்.

பதிவுகளை மேற்கொள்ள வருவோர் இதுவரை காலமும் தங்கியிருந்த கிராமசேவைப் பிரிவு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தல் கடிதம் மற்றும் அந்தப் பகுதி உதவி அரச அதிபரினால் ஒப்பமிடப்பட்ட விடுவிப்புக் கடிதம் ஆகியவற்றுடன் மீளக்குடியமர்வதற்கான ஆயத்தங்களுடன் வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-323)

# தேர்தல் வன்முறை முறைப்பாட்டுக்கு யாழ்.செயலகத்திலும் விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தேர்தல் வன்முறைகள் குறித்து முறைப்பாடு செய்ய யாழ். மாவட்ட செயலகத்திலும் விசேட கருமபீடம் இன்றுமுதல் இயங்கவுள்ளது.

அனைத்து முறைப்பாடுகளுக்கும் உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் யாழ். தேர்தல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தேர்தல் வன்முறைகள் குறித்து வேட்பாளர்கள், கட்சிகள், பொதுமக்கள் தமது முறைப்பாட்டைச் செய்துகொள்ள வசதியாக யாழ். செயலகத்தில் விசேட கருமபீடம் ஒன்று இன்றுமுதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதேவேளை-

தேர்தல் வன்முறைகள் குறித்து முறைப்பாட்டைச் செய்துகொள்ள தேர்தல் திணைக்களத்தால் இராஜகிரியவில் முறைப்பாட்டு மத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-9)

# பல்கலைகளுக்கு வெளிநாட்டு மாணவர் ஏன்? பண நெருக்கடியே என்கின்றது ஜே.வி.பி.

பல்கலைக்கழகங்களுக்கென திறைசேரியில் இருந்து பெருந்தொகைப் பணம் செலவிடுவதைக் கட்டுப்படுத்தவே பல்கலைக்கழகங்களில் ஐந்து சதவீத வெளிநாட்டு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜே.வி.பி. நாடாளுமன்றக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திசாநாயக்க எம்.பி. இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வெளிநாட்டு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதால் பல்கலைக்கழகங்களுக்குத் தகுதி பெற்றுள்ள உள்ளூர் மாணவர்களின் உயர்கல்வி மறுக்கப்படுகிறது. தேசப்பற்றாளர்கள் எனக் கூறிக் கொள்ளும் அரச தலைவரும் அமைச்சர்களும் நம் நாட்டு மாணவ சமூகத்துக்கு இதன் மூலம் அநீதி இழைக்கின்றனர்.

பல்கலைக்கழகப் பட்டங்களை இதன் மூலம் வெளிநாட்டு மாணவர்களுக்கு விற்பனை செய்கின்றனர். ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் 3 ஏ சித்திகளைப் பெற்ற மாணவ, மாணவிகள் கூட பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்குத் தெரிவு செய்யப்படாத நிலைமை இருக்கிறது. இந்த மாணவர்களின் இடத்துக்கே வெளிநாட்டு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் - என்றார் அநுர குமார. (ஒ-வி)

# மடுத் தேவாலய திருவிழா இன்று

மன்னார் மடுமாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா இன்று காலை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட உள்ளது.

நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட யாத்திரிகர்கள் இந்த முறை திருவிழாவில் கலந்து கொள்வர் என மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் அதி வண. விக்டர் சூசை அடிகளார் தெரிவித்தார்.

திருவிழாவில் சிறப்பு அதிதிகளாக மறை மாவட்ட ஆயர் வண. வெலன்ஸ் மெண்டிஸ் ஆண்டகை மற்றும் யாழ். மறை மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆகியோர் கலந்துகொள்வர். (ஓ-சி)

# தபால்மூல வாக்குச் சீட்டுகள் உரிய திணைக்களங்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுக்கள் உரிய திணைக்களங்களுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 12ஆம் திகதி தபால் மூல வாக்களிப்பு இடம் பெறவுள்ளது.

இதன் முன் ஏற்பாடாக வாக்குச் சீட்டுக்கள் யாவும் நேற்றுத் திணைக்களங்களில் உள்ள அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களிடம் அனுப்பப்பட்டுள்ளன என்று தேர்தல் உதவித் தேர்தல் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்தார்.

வாக்குச் சீட்டுக்கள் யாவும் உரிய ஆவணங்களுடன் பொதி செய்யப்பட்டு அத்தாட்சிப் படுத்தும் அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இம்முறை நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலின்போது யாழ். மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க 5ஆயிரத்து 176பேர் தகுதி பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுவில் பகுதியைச் சேர்ந்த 11 பேருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு

வலி.தெற்கு உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வதியும் பதினொருபேருக்கு வடமாகாண சமூக சேவைகள் அமைச்சால் தலா பத்தாயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் ரூபா தற்செயல் நிவாரணக் கொடுப்பனவுக்காக வழங்கப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த தே.கிறிஸ்தோப்பர் (உடுவில்), சூ.ஜெயராணி (தாவடி தெற்கு), மா.ஜெயக்குமார் (சுன்னாகம்), இ.வசீகரகுலம் (உடுவில் கிழக்கு), ஜெ.ரதிமலர் (தவாடி தெற்கு), ச.சுதர்ஜினி (இணுவில் மேற்கு), இ.புவனேஸ்வரி (தாவடிதெற்கு), சி.பாக்கியநாதன் (கந்தரோடை), ந.சிவபாலன்(சுன்னாகம்), க.காண்டீபன் (சுன்னாகம்), ந.அழகரெட்ணம் (உடுவில் மேற்கு).

மேற்படி கொடுப்பனவுகள் யாவும் உடுவில் பிரதேச செயலக சமூக சேவை அலுவலர்களால் உரியவர்களுக்குப் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

(ம-86)

## யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு கணினி, பியானோ கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட கணினி மற்றும் பியானோ ஆகியவை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு வலயத்திலும் கணினி மற்றும் பியானோ ஆகியவை வழங்கப்பட்ட பாடசாலைகளில் 10 பாடசாலைகள் தமக்கு வழங்கப்பட்ட கணினி மற்றும் பியானோவை இன்று காலை 9 மணிக்கு நிகழ்வு நடைபெறும் பாடசாலையில் கையளிக்குமாறு கல்வி அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார். (ம-207)

## நயினாதீவில் 35 அடி உயரமான கோபுரம் அமைப்பு

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தென்பகுதியில் பிரதான வீதியில் உள்ள ஆலய நுழைவாயில் பல்லவர் கால கட்டட அமைப்பில் கட்டப்படுகிறது. 35 அடி உயரமான இந்த நுழைவாயில் கோபுரத்துடன் திருக்குளமும் கைலைக் காட்சிகளை உள்ளடக்கியதாக 35 அடி உயரத்துக்கு அமைக்கப்படுகிறது.தமிழகம் சீர்காழி கொள்ளிடத்தைச் சேர்ந்த கலிய பெருமாள் புருஷோத்தமன் தலைமையில் அறுபது பேர் கொண்ட சிற்பக்கலைஞர்கள் இந்தப் பணிகளை மேற்கொள்கின்றனர்.(ம-7)

## குவலயம் மலர வைத்த கனகராசா

கடவுள் நமக்களித்த மானுட ஜோதியே
'கனகராசா' என்ற காந்திய வாதியேயென
குடதிசையிலெழு சூரியன் போல - எம்மைக்
கும்பிட வைத்தார் குவலயம் மலரவைத்தார்.

எளிய உடை நடையும், இனிய உரை நடையும்
ஏற்றமிகு அறிவுரைகளை இலவசமாக வழங்கியும்,
ஒளிரும் பனைவளத்தை ஏற்ற கற்பகதருவாக்கி
ஓங்கியே வளரச் செய்தார் கிராமங்கள் உயிர்த்தன.

பள்ளிகள்தோறும் ஆன்மீகப் பாங்கினை வளர்த்து,
பாலகர் மனதில் நீதிநூல்களை உபகாரம் செய்து,
தெள்ளிய பால்போலத் தேக உடைகளைப் பேறாக்க
திவ்விய சுகம்தரும் பவ்வியப் பொருள்தனையீந்தார்.

மூலிகை வளத்தினை மூலை முடுக்கெலாம் வளர்த்து
முந்தைய வைத்திய முறையினை உயிர்ப்பித்தார்
தாலியின் தருமமே தமிழ்ப் பண்பாட்டின் சிகரமென
தமிழ்த்தாயினை வெல்ல வைத்தார் தாய்மை குளிர்ந்தது.

-கே.எஸ்.சிவஞானராஜா.

*('மில்க்வைற்' அதிபர் அமரர் கலாநிதி கனகராசாவின் நினைவு தினம் இன்றாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது)*

**உடனடி வேலைவாய்ப்பு**

**RECOVERY OFFICER**

ஹொங்ஹொங்கைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் எமது கல்விசார் நிறுவனத்துக்கு RECOVERY OFFICER பதவிக்கு ஆள்கள் தேவை.

தகைமைகள்
* யாழ். பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்.
* G.C.E. A/L சித்தி
* மோட்டார் சைக்கிள் சொந்தமாக வைத்திருப்பவர்.

Salary + Incentive + Fuel + Other facilities.

தொடர்பு:- (சி/1236)

Pioneer House,
186, 1st Floor,Kasthuriar Road, Jaffna.
T.P:- 0115749374.

## சுழலும் சொல்லாடுகளம் நெல்லியடியில் செவ்வாயன்று

யாழ்ப்பாணம், ஜூலை 2

கம்பராமாயணத்தில் மந்தரை சூழ்ச்சியால் பெரிதும் துன்பத்துக்கு ஆளான பாத்திரம் கைகேயியா? தசரதனா? இராமனா? பரதனா? இலக்குவனா? மந்தரையா? என்னும் தலைப்பில் அமைந்த சுழலும் சொல்லாடுகளம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வு வித்தியாலயத்தின் உயர்தர மாணவர் மன்றத்தினால் நடத்தப்படுகிறது.

தொடக்கவுரையை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ. சேதுராஜாவும் அறிமுக உரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், தமிழ் முதுதத்துவமானி ஆய்வு மாணவன் த.அஜந்தகுமார், யாழ். பல்கலைக்கழகக் கணக்கியல் துறைத் தலைவர் தி.வேல்நம்பி, முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி ஆசிரியர் வேல். நந்தகுமார், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஆசிரியர் த.ஜீவராஜா, சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல் ஆகியோர் வாதிடவுள்ளனர்.

நோக்குநர்களாக யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த் துறைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் நா.குழந்தைவேலு ஆகியோருடன் நடுவராக யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோர் கடமையாற்றுவர். (த-55-319)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

வலி.வடக்கு, ஜூலை 2

மல்லாகம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந் தப் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் மகாதேவா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-86)

**இடமாற்றம்**

**விருதலைப் பெருவிழா**

**இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களினால் கடந்த நாள்களில் சகோ.மோகன், சி.லாசரஸ் அவர்களினால் நடத்தப்பட்ட கூட்டத்தின் மீள் சந்திப்பு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற விருந்தது.**

**தவிர்க்க முடியாத காரணத்தினால் இராசாவின் தோட்டம் A.O.G சபையில் 03.07.2011 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.**

யாழ்.கிறிஸ்தவ சபைகள்
ஸ்தாபனங்களின் ஐக்கியம்.
(சி/5385)

**நீங்காத நினைவுகளில் மூன்று ஆண்டுகள்**

பிறப்பு 04 ★ 05 ★ 1992 — இறப்பு 02 ★ 07 ★ 2008



பிறப்பு 02 ★ 10 ★ 1985 — இறப்பு 01 ★ 08 ★ 2008



*சிவகுமாரன் சிந்துஜா* *சாந்தலிங்கம் சந்திரகாந்தன்*

*(ஊரியான், முரசுமோட்டை)*

**உங்களின் பிரிவு ஓடிவிட்டது மூன்று ஆண்டுகள்
ஓயவில்லை எங்கள் இதயத்தின் ஓலம்
ஆறிவிட்டது உங்கள் உடல்களின் ஈரம்
ஆனால் ஆறவில்லை எங்கள் இதயத்தின் - பாரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

(சி/1304) குடும்பத்தினர்.



**ஜயோதா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 763 திகதி 30-06-2011

வெற்றி எண்கள்

11 15 19 24 N (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 16,140,670/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 16,140,670/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 13 | 50,000/= | 650,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 321 | 1,000/= | 321,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 577 | 1,000/= | 577,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 14477 | 60/= | 868,620/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7632 | 40/= | 305,280/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 189652 | 20/= | 3,793,040/= |
| ஆங்கில எழுத்து | 27601 | 20/= | 552,020/= |
| | | மொத்தம் ரூ. 7,866,960/= | |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| பதுளை | 700285917-5-35 |
| கண்டி | 700285466-7-47 |
| மொனராகலை | 700286579-6-36 |
| காலி | 700292137-0-40 |
| யாழ்ப்பாணம் | 700286179-4-24 |
| கண்டி | 700283631-2-22 |
| இரத்தினபுரி | 700289732-4-04 |
| திருகோணமலை | 700299149-3-23 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,266,960/=

எதிர்வரும் திங்கட்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 16,511,830/=

மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஜூலை 04 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY

**வாசனா சம்பத**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 875 திகதி: 30.06.2011

ஆங்கில எழுத்து: Z — வெற்றி இலக்கங்கள்: 21 37 39 49 — போனஸ் இல: 41

| | கூட்டு | பரிசுத் தொகை | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்தும் 4 இலக்கங்களும் சரியாயின் | 11,657,974.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | 1,000,000.00 | 1 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாயின் | 100,000.00 | 04 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 2,000.00 | 323 |
| 4ம் பரிசு | 2 இலக்கங்கள் மட்டும் சரியாயின் | 100.00 | 15920 |
| 5ம் பரிசு | 1 இலக்கம் மட்டும் சரியாயின் | 20.00 | 221332 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்து மட்டும் சரியாயின் | 20.00 | 33036 |

இவ்வாரம் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 8,725,360.00

சுப்பர் பரிசுத்தொகை அடுத்த வியாழக்கிழமை 12,053,291.50

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663
அவசர தேவைக்கு: 2473360, 2433631
இணையம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மல்வத்த பீடத்துக்கும் மசியாத .....

வடக்கில் வாழும் மக்கள் குறித்து விசேட கவனம் செலுத்தி அவர்களுக்கு உரிய தீர்வு ஒன்றை வழங்குமாறு ஜனாதிபதிக்கு நாம் எடுத்துரைத்து உள்ளோம். எமது யோசனையைக் கேட்டு அவர் செயற்படாவிட்டால் மேலும் பிரச்சின்னைகள் உண்டாகும். எமது புத்திமதிகளுக்கு அரசு செவிமடுக்காது தனது போக்கில் செயற்பட்டால், வடக்கில் முன்னைய சூழல் மீண்டும் உருவாகும்.

இவ்வாறு எச்சரிக்கைத் தொனியிலும் மனம் நொந்தும் கருத்து வெளியிட்டுள்ளார், முதன்மையான பௌத்த பீடங்களில் ஒன்றான மல்வத்த பீடத்தின் பீடாதிபதி வண. திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர்.

இலங்கையின் பிரதான சமயமாகவும், அரசாங்க மதமாகவும் விளங்குவது போதி சத்துவர் புத்தபெருமான் போதித்த பௌத்த மதமே. மல்வத்த பீடம், அஸ்கிரிய பீடம், இராமநாயக்க நிக்காய* ஆகியன இலங்கையின் மூன்று பிரதான பௌத்த பீடங்கள்.

அன்பு, அஹிம்சை, சகோதரத்துவம், மற்றும் மாண்பு ஆகிய மனிதத்துவங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சிரிய வாழ்க்கைக்கு வழிகாட்டும் நோக்கத்தைக் கொண்டவை - அவற்றை மக்கள் மத்தியில் பரப்பும் பணியைக் கொண்டவை - பிரதான பௌத்த பீடங்கள்.

இவற்றின் மீது, பௌத்த மக்கள் வைத்திருக்கும் அளவிலா அபிமானமும் பற்றும் மரியாதையும் காரணமாக அவை பெரும் செல்வாக்குப் பெற்றவையாக விளங்குகின்றன. அதன் பாற்பட்டு, மூன்று பௌத்த மத பீடங்களும் அரசியல் கட்சிகளின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கும் சக்திகளாகவும் விளங்குகின்றன.

இதனால், தேர்தல் காலங்களில் மேற்குறிப்பிட்ட பௌத்த மத பீடங்களின், அவற்றின் பீடாதிபதிகளின் ஆதரவையும் ஆசியையும் பெறுவதற்கு அரசியல் கட்சிகள் துடியாய் துடிப்பதும், அவற்றின் தலைவர்கள் பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசி பெறுவதும் தென்னிலங்கை அரசியலின் தவறாது இடம்பெறும் நிகழ்ச்சிகளாகும்.

இத்தகைய பின்னணியில், மூன்று பிரதான பௌத்த பீடங்கள், அவற்றின் பீடாதிபதிகள் ஒருவருக்கு மற்றவர் பிரதான அரசியல் கட்சிகளில் நேருக்கு நேர் போட்டியிடும் கட்சிகளுக்குக் கன்னை பிரிந்து (மறைமுக) ஆதரவு வழங்குவதும் சர்வ சாதாரணம்.

எவ்வாறெனினும், ஆட்சிபீடம் ஏறும் கட்சிகளின் பிரதானிகள் மூன்று பிரதான பௌத்த பீடாதிபதிகளையும் சந்தித்து, ஆசி பெறுவது நடைமுறை இயல்பாகிவிட்டது. ஆயினும் தமக்குப் பிடித்தமான பீடாதிபதிகளின் ஆலோசனைகளை மட்டுமே மனதில் ஊன்றிச் செயற்படுத்துபவர்கள், அடுத்தவர்கள் தெரிவிக்கும் மக்கள் நலன் நாடிய, நாட்டின் நலன் நாடிய புத்திமதிகளை பெரிய அளவில் காதில் போட்டுக் கொள்வதில்லை.

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்கவேண்டும் என்று தாம் தெரிவித்த கருத்துக்களை ஜனாதிபதி கருத்தில் கொள்ளவில்லை என்று மல்வத்த பீடாதிபதி, மலைய மக்கள் முன்னணியின் தலைவர் பி. இராதாகிருஷ்ணனிடம் கவலை தெரிவித்திருப்பது, மேற்காட்டிய சமன்பாடுகளில் ஒன்றே.

எவ்வாறெனினும், அவரது அறிவுரை அர்த்தபுஷ்டியானது, யதார்த்தம் நிறைந்தது, நாட்டின் நலன் நாடியது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். இந்த நாட்டின் சகல பிரதேசங்களும் சிங்களப் பிரதேசங்களாக்கப்பட்டு, பௌத்த மதம் மட்டுமே கோலோச்ச வேண்டும் என்று, மதவாதம் நிரம்பிய ஜாதிக ஹெல உறுமய போன்ற அமைப்புக்களும் இந்த நாட்டின் ஆட்சியின் அங்கங்களாக உள்ளதை மறந்து விடுவதற்கில்லை.

வடக்கைப் பொறுத்தவரை அந்த மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை. எனக்கும் வடபகுதிக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவர்களது பிரச்சினைகள் பற்றி அறிந்துள்ளேன். -

வடக்கின் பிரச்சினை பற்றி நாம் தொடர்ச்சியாக அரசுக்கு அறிவுறுத்தி வருகிறோம். எமது கருத்துக்கள் எதையும் அரச தரப்பினர் கேட்பதாக இல்லை. -

வடக்கு மக்கள் மீது விசேட அக்கறை செலுத்தி அந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குமாறு நாம் ஜனாதிபதியிடமும் வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு செயற்படாமல் விட்டால் எதிர்காலத்தில் மேலும் பிரச்சினைகள் உருவாக இடமுள்ளது. வடக்கில் முன்னைய சூழல் மீண்டும் உருவாகும் - என்று மல்வத்த மகாநாயக்க தேரர் அறிவுறுத்தியிருப்பது அர்த்தமுள்ளது என்பதனை அதனாலேயே குறிப்பிட்டோம்.

உயர் பௌத்த பீடத்தின் அதிபதி, மேற்கண்டவாறு மனம் நொந்து தெரிவித்திருக்கும் தகவல், தமிழர்களின் நியாயமான அரசியல் உரிமைகளை வழங்கும் மனச்சுத்தியுடனான உள்ளார்ந்த விருப்பம் இந்த அரசுக்கும் அதன் தலைமைத்துவத்துக்கும் அறவே இல்லை என்பதையே வெளிப்படுத்துகிறது!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அரசு கைக்கொள்ளும் தந்திரம், இந்தியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் - சர்வதேசத்தின் - காதில் பூச்சுற்றும் ஏற்பாடு என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகத் தெரிகிறது.

தெரிவுக்குழுவின் மூலமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்ற புதிய கோல் ஒன்றை, அரசு கையில் எடுத்திருப்பதன் முழு நோக்கமும் காலத்தை வாங்கி, தமிழ் மக்கள் மீது அர்த்தமற்ற தீர்வு ஒன்றைத் திணிப்பதற்கே என்பதும் -

மல்வத்த பீடாதிபதியின் அர்த்தம் நிறைந்த எதிர்வு கூறலைக் கூட உதாசீனம் செய்வதும் -

இலங்கை அரச தலைமைத்துவம் எவர் சொற் கேளாமலும் தனது "அரசியல் கோது" ஒன்றை தமிழர் தலை மீது போட்டு, பிரச்சினைகளைப் புதுப்பித்துப் பெருக்குவதற்காகவா?

அரசு எமது அறிவுரைகளை உதாசீனம் செய்தால்

# வடக்கில் பழைய மோசமான நிலை மீண்டும் தலையெடுக்கும் வாய்ப்பு

## எச்சரிக்கிறார் மல்வத்த மகாநாயக்கர்

கொழும்பு, ஜூலை 02

வடக்கில் வாழும் மக்கள் குறித்து விசேட அக்கறை செலுத்தி அவர்களுக்குத் தீர்வு ஒன்றை வழங்குமாறு நாம் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்துள்ளோம். அவர் அவ்வாறு செயற்படாமல் விட்டால் எதிர்காலத்தில் மேலும் பிரச்சினைகள் உருவாகும். எமது புத்திமதிகளை அரசு செவிமடுக்காமல் விட்டால் வடக்கில் முன்னைய சூழல் மீண்டும் உருவாகக் கூடும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மல்வத்தைப் பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீசித்தார்த்த சுமங்கல தேரர்.

கடந்த 28 ஆம் திகதி, மலையக மக்கள் முன்னணியின் மூத்த தலைவரான பீ. ராதாகிருஷ்ணண் மல்வத்த பீடாதியைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ராதாகிருஷ்ணனுடனான சந்திப்பின் போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் பல்கலைக்கழகங்களை இன்று இழுத்து மூடும் நிலையே உருவாகியுள்ளது. நாட்டின் பல்கலைக்கழகங்களைப் பேணிப் பாதுக்காக்கத் திராணியற்றவர்கள் இன்று கட்டணம் செலுத்தி அங்கு வெளிநாட்டு மாணவர்கள் பயில்வதற்கு வாய்ப்புக்களை உருவாக்க முனைந்துள்ளனர்.

மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றியும் நான் நன்கறிவேன். அவர்களுக்காக நானும் தலையிட்டுச் செயற்பட்டுள்ளேன். ஹந்தானைப் பிரதேசத்தில் அவர்களுக்குத் தோட்ட வீடுகளைக் கட்டிக்கொடுக்க நான் உதவியுள்ளேன்.

வடக்கைப் பொறுத்தவரை அந்த மக்களின் பிரச்சினைகள் இன்னமும் தீர்த்து வைக்கப்படவில்லை. எனக்கும் வட பகுதிக்குச் செல்லச் சந்தர்ப்பம் கிடைத்தது. நான் அவர்களது பிரச்சினைகள் பற்றி அறிந்துள்ளேன்.

வடக்கின் பிரச்சினை பற்றி நாம் தொடர்ச்சியாக அரசுக்கு அறிவுறுத்தி வருகிறோம். எமது கருத்துக்கள் எதையும் அரச தரப்பினர் கேட்பதாக இல்லை.

வடக்கு மக்கள் மீது விசேட அக்கறை செலுத்தி அந்த மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்குமாறு நாம் ஜனாதிபதியிடமும் வலியுறுத்தியுள்ளோம். அவ்வாறு செயற்படாமல் விட்டால் எதிர்காலத்தில் மேலும் பிரச்சினைகள் உருவாக இடமுள்ளது. வடக்கில் முன்னைய சூழல் மீண்டும் உருவாகும் - என்றார். (த-22)

# மும்மொழிகளிலும் இனிமேல் அமைச்சரவைப் பத்திரங்கள்

கொழும்பு, ஜூலை 2

சகல அமைச்சரவைப் பத்திரங்களையும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் சமர்ப்பிக்கும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் அமைச்சரவைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமைச்சரவைக்கு அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பது தொடர்பான வழிகாட்டல் கோவை ஒன்றை அமைச்சரவையில் சமர்ப்பிச்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்[illegible]

அமை[illegible] பத்திரங்களுடன் சமர்ப்பிக்கும் இணை[illegible] ட மூலங்கள், [illegible] அறிந்து கொள்[illegible]தற்காக வெளியிட[illegible] ஆவணங்கள், சுற்று நிருபங்கள், நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தங்கள் போன்றவை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் முன்வைக்கப்பட வேண்டும் என வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருந்தும், பெரும் சிரமங்களுக்கு மத்தியில் மொழிபெயர்க்கப்படும் சில ஆவணங்கள் குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம் பயன்படுமானால் அவற்றை மொழி பெயர்க்கத் தேவையில்லை எனவும் அவற்றைத் தயாரிக்கப்பட்ட மொழியிலேயே முன்வை[illegible]கலாம் எனவும் அந்த வழிகாட்டலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-சி)

# புலிகளால் வெளியேற்றப்பட்டோர் விவரம் நல்லிணக்க ஆணைக்குழுவால் திரட்டப்படும்

கொழும்பு, ஜூலை 2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து புலிகளால் வெளியேற்றப்பட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் குறித்த விவரங்களைத் திரட்ட நல்லிணக்க ஆணைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நல்லிணக்க ஆணைக்குழுவின் ஊடக இணைப்பாளர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க உதயனுக்குத் தெரிவித்தார்.

இவ்வாறு திரட்டப்படவுள்ள விவரங்கள் நல்லிணக்க ஆணைக்குழுவினால் தயாரிக்கப்பட்டுவரும் இறுதி அறிக்கையில் சேர்க்கப்படும் என்றும் அவர் கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்த காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் வெளியேற்றபட்ட தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களின் விவரங்களைத் திரட்ட நல்லிணக்க ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இவர்களது விவரங்கள் திரட்டப்பட்டு அவற்றை ஜனாதிபதிக்கு சமர்பிக்கப்படவுள்ள நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சேர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களின் விவரங்களை அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் மற்றும் கிராம சேவகர்களிடம் இருந்து பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, வவுனியா - மெனிக்பாம் மற்றும் கொடிகாமம் - இராமாவில் ஆகிய நலன்புரி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்று மீள்குடியேற்ற அமைச்சினால் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் குறித்த இரண்டு முகாம்களிலும் 30 ஆயிரத்து 580பேர் மீள்குடியேற்றப்படாமல் இன்னும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. அந்த விவரங்களும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையில் சேர்த்துக்கொள்ளப்படும்- என்றார்.

(ஒ-சி)

# புலிகளின் பணத்தைத்தேடி சூரங்கல் பகுதியில் தேடுதல் வேட்டை

கொழும்பு, ஜூலை 2

புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த திருகோணமலை சூரங்கல் பிரதேசத்தில் புலிகளால் புதைத்து வைக்கப்பட்டன எனக் [illegible]வைத் தேடி இராணுவத்தினரும் [illegible]ம் களத்தில் இறங்கியுள்ளனர்.

புலிகள் கிழக்கு மாகாண மக்களிடம் சேகரித்த பணம் இவ்வாறு புதைத்து வைக்கப்பட்டுள்ளதாம். இந்தப் பணம் பிளாஸ்ரிக் பெரல்களில் போடப்பட்டுக் குழி தோண்டிப் புதைத்து வைக்கப்பட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கான உரிமை மறுக்கப்பட்டமையே போராட்டம் வெடித்ததற்குக் காரணம்

## தந்தை செல்வா அதனை ஆரம்பித்து வைத்தார் என்கிறார் ஹிஸ்புல்லாஹ்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தமிழர்களுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டமையே போராட்டம் வெடித்தமைக்குக் காரணம், இந்தப் போராட்டத்தை அஹிம்சை வழியில் தந்தை செல்வா தொடக்கி வைத்தார்.

இவ்வாறு சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.



சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் நிதி அனுசரணையுடன் நடத்தப்படும் சிறுவர் பெண்களுக்கான வலுவூட்டல் நிகழ்ச்சித் திட்டம், நல்லூர் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

30 வருடகால யுத்தத்தால் நீங்களும் நாங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்றோம். எனது மட்டக்களப்பு மாவட்டத்தைக் காட்டிலும் நீங்கள் தான் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். நாம் பேசுகின்ற மொழிக்கான உரிமைகள் மறுக்கப்பட்டதைத் தொடர்ந்தே தந்தை செல்வாவினால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அந்தப் போராட்டம் தற்போது இந்த நிலையில் இருக்கின்றது.

தற்போது தற்காலிகமான நிம்மதியான சூழல் நாடளாவிய ரீதியில் ஏற்பட்டிருக்கின்றது. இந்தச் சூழலை நாம் நிரந்தரமாக்கப் பாடுபட வேண்டும். எதிர்ப்பு அரசியல் மூலமாக எதையும் சாதிக்க முடியாது.

உலகில் எந்தவொரு இயக்கமும் இல்லாத அளவில் மிகவும் பலமான விமானப்படையுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இருந்தார்கள். அவர்களாலும் இராணுவப் போராட்டம் மூலமாக அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

மேலும் யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வடக்கில் தான் அதிகளவிலான விதவைகள் இருக்கின்றனர்.

அவர்களது எதிர்காலத்தை மாற்றியமைப்பதற்கான பல்வேறு வேலைத் திட்டங்கள் ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது-என்றார்.

இந்த நிகழ்வில் வைத்து சமூக சேவைகள் திணைக்களத்தினால் 31 பயனாளிகளுக்கு தலா 3 ஆயிரம் ரூபா கொடுப்பனவையும், 6 பயனாளிகளுக்கு தையல் இயந்திரமும், 4 பேருக்கு மூக்குக் கண்ணாடிகளும், 2 பேருக்கு சக்கர நாற்காலிகளும், சுயதொழில் உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் 26 பயனாளிகளுக்குத் தலா 7 ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சினால் பெண் தலைமைத்துவ குடும்பங்களைச் சேர்ந்த 10 பயனாளிகளுக்கும், 30 பயனாளிகளுக்கும் வீட்டுத் திட்ட உபகரணங்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (த-15)

# நவபாரதம் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் நவபாரதம் நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள பண்டிதமணி இல்லத்தில் நடைபெறும்.

பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை பண்டிதை பொன்.பாக்கியம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையைக் கொட்டடி நமசிவாயம் மகாவித்தியாலய அதிபர் பஞ்சாட்சரம் கணேசன் நிகழ்த்துவார். வெளியீட்டுரையைப் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபைப் போஷகர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.

முதற்பிரதியை பிரசித்த நொத்தாரிசு ச.தங்கமயிலோனிடமிருந்து தனங்கிளப்பு முன்னாள் விதானையார் பொன்னையா நமசிவாயம் பெற்றுக் கொள்வார். பண்டித மணி நூல் வெளியீட்டுச் சபைச் செயலாளர் தம்பையா ஸ்ரீஸ்கந்தராஜா நன்றியுரை வழங்குவார். (த-55)

# றெமிடியஸுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை

## மாநகர முதல்வர் சபையில் உறுதி

யாழ்ப்பாணம், ஜூலை 2

சக உறுப்பினரான பரஞ்சோதிமீது தண்ணீர்ப் போத்தலை வீசித்தாக்கியதுடன் அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டித் தீர்த்த மாநகர சபை உறுப்பினர் மு.றெமிடியஸுக்கு எதிராக சபை ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என உறுதியளித்தார் சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா.

யாழ்.மாநகர சபையின் ஆறாவது மாதாந்த பொதுச் சபைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் இடம்பெற்ற வாக்குவாதத்தில் எதிர்க் கட்சி உறுப்பினர் மு.றெமீடியஸ், சக உறுப்பினர் எஸ்.பரஞ்சோதியைத் தண்ணீர்ப் போத்தலை வீசித் தாக்கினார்.

அத்துடன் அவரைத் தகாத வார்த்தைகளால் திட்டித் தீர்த்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் நிஷாந்தன் ஆகியோர் வன்மையாகக் கண்டித்துக் கருத்து வெளியிட்டனர்.

எதிர்க் கட்சி உறுப்பினர் பரஞ்சோதி, றெமீடியஸின் அடாவடித்தனத்துக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அது தொடர்பான தெளிவான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். இல்லையேல் நான் இனிவரும் கூட்டங்களுக்கு சமுகமளிக்கமாட்டேன் என சபை முதல்வரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் தெரிவிக்கையில்:

சம்பந்தன் ஐயாவையும் மாவை ஐயாவையும் தாக்கிப் பேசியுள்ளார் அடாவடித்தனத்தில் ஈடுபட்ட றெமீடியஸ். எதிர்காலத்தில் சக உறுப்பினர்களைத் தாக்கவுள்ளதாகவும் அச்சுறுத்துகிறார். அவரது அராஜகத்தை இனியும் பொறுக்க முடியாது. எனவே ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இவர்களது கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் போதே சபை முதல்வர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார். (த-14)

# குடாநாட்டில் சூழல் வெப்பநிலை 33 பாகை செல்சியஸாக உயர்வு

## பருவப் பெயர்ச்சிக் காற்று குறைந்தமையே காரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசுவது குறைவடைந்துள்ளமையால் கடந்த சில நாளகளாக சூழல் வெப்பநிலை33 பாகை செல்சியஸாக உயர்வடைந்துள்ளதென வளிமண்டலவியல் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனால் ஒருவகை வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளதோடு இதன் மூலமாக கண்நோய், பொக்குளிப்பான் உள்ளிட்ட தொற்று நோய்கள் ஏற்படும் எனவும், அவற்றிலிருந்து அனைவரும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளுமாறும் வைத்திய வட்டாரங்கள் அறிவுறுத்தியுள்ளன.

முக்கியமாக கண்ணோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வைத்தியரின் அனுமதியின்படி தெரிவு செய்யப்பட்ட கறுப்பு நிறக்கண்ணாடிகளை அணிந்து வெளியில் செல்லுமாறும், அதுமட்டுமன்றி சுகாதார முறைகளைப் பின்பற்றுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்கள யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி வி.புஸ்பநாதனிடம் கேட்டபோது,

வழமையாக ஜூன், ஜூலை மாதங்களில் வெப்பநிலை உயர்வாக இருக்கும். மழைவீழ்ச்சி மிகக்குறைவாக இருக்கும். கடந்த சில நாள்களாக வெப்பநிலை 33பாகை செல்சியஸாக அதிகரித்துள்ளது. கடந்த ஜூன் மாதம் மழை இருக்கவில்லை. கடந்த வருடம் ஜூன்மாதம் ஒருநாள் மட்டும் சிறிதளவு மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது.

இந்த மாதம் நிறைவடையும் வரை வெப்பமான சூழ்நிலை நிலவக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இந்த நிலையில் போதிய தண்ணீர் அருந்துதல் வேண்டும். பழவகைகள் உணவில் அதிகம் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். பருத்தி உடைகளை அணிதல் வேண்டும். இதன்மூலம் உடல் வெப்பநிலையைப் பேணுதல் வேண்டும் என்றார் - அவர். (த-4)

# தப்பிய சிறைக் கைதி மீண்டும் பிடிபட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 2

சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்ட யாழ்.சிறைச்சாலைக் கைதியொருவர் வைத்தியசாலையிலிருந்து தப்பி ஓடியுள்ளார்.

அவரைத் துரத்திச் சென்ற யாழ்.சிறைச்சாலை உத்தியோகத்தர்களும், வைத்தியசாலைக் காவலாளிகளும் வைத்தியசாலையின் பழைய வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் வைத்து அவரைப் பிடித்தனர்.

பின்னர் அவர் உடனடியாகச் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் முற்பகல் இடம்பெற்றது.

பிரஸ்தாப கைதியுடன் மேலும் பல சிறைக் கைதிகள் சிகிச்சைக்கென நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இதன் போதே இந்தக் கைதி தப்பியோடியுள்ளார்.

பிரஸ்தாப கைதி கடந்த பல வருடங்களாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பிலுள்ள சிறைச்சாலை ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர். பின்னர் யாழ். உயர்நீதிமன்ற விசாரணைக்காக ஒரு வாரத்துக்கு முன்னர் யாழ். சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் சுகவீனம் காரணமாக அவர் வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்கெனக் கொண்டு செல்லப்பட்ட போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கைதியைப் பிடித்தபோது அவர் மீண்டும் தப்பிக்க முயற்சித்த வேளை வைத்தியசாலைக் காவலாளி ஒருவருக்கு கையில் சிறுகாயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

# நயினாதீவுக்குப் புதிய பஸ்

யாழ்ப்பாணம்,ஜூலை 2

நயினாதீவுக்குப் புதிய பஸ் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கடற் பாதைச் சேவை மூலம் இந்த பஸ் நயினாதீவுக்குக் கொண்டு செல்லப்பட்டதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே நயினாதீவில் சேவையில் ஈடுபட்ட இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் பழுதடைந்துள்ளதை அடுத்தே தற்போது இரட்டைக் கதவு கொண்ட பஸ் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வருகிறது மக்கள் வங்கி

## பொன் விழா வைபவத்தில் பிராந்திய முகாமையாளர்

யாழ்ப்பாணம், ஜூலை 2

நாட்டின் உள்ளூர் உற்பத்தித் துறைகள் மற்றும் சுய தொழில் முயற்சிகளுக்கு மக்கள் வங்கி முதன்மையான பங்களிப்பை வழங்கி வருகிறது எனத் தெரிவித்தார் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன்.

வங்கியின் அடகுச் சேவை மூலம் கிராமங்களையும் நகரங்களையும் இணைப்பதற்கும் கொள்ளை வட்டியிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு பொன் விழாக் கொண்டாட்டம் நேற்று வங்கியின் யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போது ' வெற்றிப் பாதையில் மக்கள் வங்கியின் வரலாற்றுப் பாதை' என்ற தலைப்பில் பிராந்திய முகாமையாளர் எஸ். பத்மநாதன் நீண்ட உரை நிகழ்த்தினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கூட்டுறவுத் துறையை வளர்ச்சி பெற செய்து கிராமியப் பொருளாதாரம் மற்றும் கிராமிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதே மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டதன் முக்கிய நோக்கமாகும்.

1961 இல் மக்கள் வங்கி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நாட்டின் வங்கித் துறை மற்றும் நிதித் துறை ஒரு புரட்சிகர மாற்றம் ஏற்பட்டது. தாய் மொழிகளில் மக்கள் பணியாற்றக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது.

வாடிக்கையாளர்கள் தேவைகளை அறிந்து தியாக மனப்பான்மையுடன் சிறந்த சேவையைப் பெற்றுக்கொடுக்க மக்கள் வங்கிப் பணியாளர்கள் என்றும் தயாராக இருக்கின்றனர். ஏனைய போட்டி வங்கிகளுடன் ஒப்பிடுகையில் வேறுபடுத்திக் காட்டக்கூடியதாக 'இது எங்களின் வங்கி' என்ற மனப்பாங்கில் மக்கள் வங்கி செயற்படுகின்றது.

மனிதாபிமான அதிகூடிய பணியாளர்கள் உள்ள வங்கியாகவும், 13 மில்லியன் வாடிக்கையாளர்கள் விசுவாசத்துடன் இணைந்துள்ள நிதி நிறுவனமாகவும் வெற்றியின் உச்சியை அடைய மக்கள் வங்கியால் முடிந்துள்ளது - என்றார்.

மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய தலைமையகத்தில் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி கேக் வெட்டும் நிகழ்வு இடம்பெற்றது. பிராந்திய முகா மையாளர் எஸ்.பத்மநாதன் சம்பிரதாய பூர்வமாகக் கேக்கை வெட்டினார்.

இந்த நிகழ்வின் போது விருந்தினர்களாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, இராணுவ அதிகாரிகளான பிரிகேடியர் பிராங்கிளின் றொட்றிக்கோ, பிரிகேடியர் விஜய விக்கிரம, மத்திய வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் எஸ். சிறிதரன், யாழ். மாவட்டத் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன்சிகேரா. யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரம் மற்றும் அரச திணைக்களத் தலைவர்கள், வாடிக் கையாளர்கள், பாடசாலை அதிபர்கள், வங்கி முகாமையாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (த-14-207)

# 'கல்வளையான் கழல் போற்றி' இசைத்தட்டு வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

வரலாற்றுப் பிரசித்திபெற்ற சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் மீது பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய 'கல்வளையான் கழல் போற்றி' இசைத்தட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

கல்வளையூர் கிருஷ்ணராசா சுகந்தனின் தயாரிப்பில் ஈழத்தின் முன்னணி இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையில் ஈழத்தின் முன்னணி பாடகர்களான எஸ்.ஜி.சாந்தன், ஜெயாசு குமார், சந்திரமோகன், திருமதி ஜெயபாரதி ஆகியோரின் குரலில் இந்த இசைத்தட்டு வெளிவந்துள்ளது.

இதன் வெளியீட்டு விழா ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தின் 5 ஆம் திருவிழாவான எதிர்வரும் 9 ஆம் திகதி இரவு 8 மணிக்கு நடைபெறும். (த-9)

# தேர்த்திருவிழாவில் சங்கிலி அபகரிப்பு ஆனைக்கோட்டையில் 4 பெண்கள் கைது

## மற்றொரு ஆண் தப்பிவிட்டார்

நவாலி, ஜூலை 2

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத் தேர்த்திருவிழாவில் இடம்பெற்ற இரண்டு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 4 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றொருவர் ஓடித்தப்பியுள்ளார். நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இவ்வாலயத்தில் இடம்பெற்ற மகோற்சவத்தில் பெண் ஒருவர் திடீரென மற்றொரு பெண்ணின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடவே அந்த இடத்தில் நின்ற பக்தர்கள் அப் பெண்ணை மடக்கிப் பிடித்து வைத்திருந்தனர். கேள்வி மேல் கேள்வி கேட்டும் அவர் உண்மையைக் கூறாததினால் பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மல்கம் பேத் தலைமையில் அங்கு வந்த பொலிஸார் நடத்திய விசாரணையின் போதே இவருடன் வந்த மேலும் 3 பெண்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தாம் கொட்டடியில் வசிப்பதாகத் தெரிவித்தனர். மேலதிக விசாரணைக்காக இவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் அன்றைய தினம் அன்னதான மடத்துக்குள் செல்வதற்காகக் கைக்குழந்தையுடன் நின்ற பெண்ணுக்கு அருகில் நின்ற ஆண் ஒருவர் அந்தக் குழந்தை யின் கையிலிருந்த காப்புகளைக் உருவிக் கழற்றிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார். (த-100)

## மகத்தான சேவைக்கு...



*மனநிறைவுடன்: மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு பொன்விழா கொண்டாட்டம் நேற்றுக் காலை யாழ். கன்னாதிட்டிச் சந்தியில் உள்ள வங்கியின் பிராந்தியத் தலைமையகத்தில் சிறப்பாக இடம்பெற்றது. இதில் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன், அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து கேக் வெட்டுகின்றனர். (த-23-14)*

# பனம் பொருள்களை சந்தைப்படுத்த குருநாகலில் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

பனை வளத்தில் பெறப்படும் உற்பத்திப் பொருள்களை தென் பகுதியில் சந்தைப்படுத்துவதற்கு வசதியாக குருநாகல் மாவட்டத்தில் செயற்பாட்டு நிலையம் ஒன்றை வெகு விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பனை வளத்தின் மூலம் பெறப்படும் உற்பத்திப் பொருள்களைத் தென் பகுதியில் சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக இலாபத்தைப் பெறமுடியும்.

தென்பகுதியில் இந்தச் சந்தைப்படுத்தலை ஊக்கப்படுத்தும் நோக்கில் பனை அபிவிருத்திச் சபையினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் செயற்பாட்டு மையம் குருநாகல் மாவட்டத்தில் அம்பேகமுவ, கனேவத்த ஆகிய பிரதேசங்களில் பொருத்தமான இடத்தில் அமைக்கப்படவுள்ளது. இதில் அலுவலகம், கொள்வனவு மையம், பணியாளர்களுக்கான விடுதி போன்றன உள்ளக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# ஒலி பெருக்கிகள் அலறல்; மாணவர் சிரமம்

தென்மராட்சி,ஜூலை 2

ஒலிபெருக்கி பாவனையால் மாணவர்களின் கல்வி நிலை பாதிப்படைவதாக பெற்றோர் கவலை தெரிவித்தனர். ஆலய உற்சவங்கள் ஆரம்பமானதைத் தொடர்ந்து ஆலயங்களில் நடைபெறும் நிகழ்வுகளிலும் மற்றும் வீடுகளில் நடைபெறும் நிகழ்வுகளிலும் ஒலிபெருக்கிகள் பாவிக்கப்பட்டு வருகின்றன.

ஒலிபெருக்கிப் பாவனைக்கென கால நேரம் உள்ளபோதிலும் 24 மணி நேரமும் ஒலிபெருக்கி பயன்படுத்தப்படுகிறது. இதனால் சுமார் ஒரு மைல் தூரம் வரையான பகுதிகளில் உள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது கல்வியை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், கிராமப்புறங்களிலேயே இவ்வாறான ஒலிபெருக்கி பாவனை அதிகரித்துள்ளதால் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து மாணவர்களின் கல்விக்கு வழிசமைக்குமாறும் கேட்டுள்ளனர்.(த-207)

# புலமைப்பரிசில் மாணவர்களுக்கு இருநாள் வதிவிடச் செயலமர்வு

பருத்தித்துறை, ஜூலை 2

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களின் வலய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் இருநாள் வதிவிடச் செயலமர்வு நடத்தப்படவுள்ளது.

இவ்வதிவிடச் செயலமர்வுக்கு தெரிவு செய்யப்பட்டோர் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு சமூகமளித்திருத்தல் வேண்டும். செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமையும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் முழு நாள்களும் நடைபெறவுள்ளது. 18 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு செயலமர்வில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு வீடு திரும்புவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒரு கல்வி வலயத்தில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற 5 மாணவர்கள் வீதம் வட மாகாணத்திலுள்ள 12 கல்வி வலயங்களிலிருந்து 60 மாணவர்கள் இந்தச் செயலமர்வுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (த-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குவைத்துக்கான தொழிலாளர் தேர்வில் இலங்கையர்களுக்குத்தான் முன்னுரிமை

குவைத்திற்கு பணிப்பெண்கள் மற்றும் தொழிலாளர்களைத் தேர்ந்தெடுக்கப்படும்போது இலங்கையர்களுக்கு குவைத் அரசு முன்னுரிமையளிப்பதாக கொழும்பிலுள்ள குவைத் தூதரகம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை தெரிவித்தது.

இதற்கான பிரதான காரணம் குவைத்தில் குற்றச்செயல்களில் ஈடுபட்டு சிறைச்சாலையில் உள்ளவர்களில் குறைந்த எண்ணிக்கையானவர்கள் இலங்கையர்களே என்று இலங்கைக்கான குவைத் தூதுவர் யாகூப் யூசுப் அல்அதீக் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

## குவைத் தூதரகம் அறிவிப்பு

குவைத்தில் தற்போது 110,000 இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். இந்த எண்ணிக்கையை எதிர்காலத்தில் 200,000 வரை அதிகரிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தற்போது தினமும் சுமார் 250 இலங்கையர்களுக்கு குவைத்தில் தொழில் புரிவதற்கான விஸா கொழும்பிலுள்ள குவைத் தூதரகத்தால் வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கைக்கு சுற்றுலாவுக்காக வரும் குவைத் நாட்டவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவுள்ளதாகவும் இதனடிப்படையில் இவ்வருட இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 15,000 முதல் 20,000 வரை அதிகரிக்கும் என அவர் தெரிவித்தார்.

குவைத் கம்பனிகள் பல இலங்கையில் முதலீடு செய்யவுள்ளதாக குறிப்பிட்ட அவர், இதற்காக பல தூதுக்குழுக்கள் இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கையில் தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தி, வீடமைப்புத் திட்டங்கள், பாலங்களின் நிர்மாணங்கள் போன்றவற்றுக்கு குவைத் அரசு குவைத் நிதியத்தின் ஊடாக உதவியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## இலங்கை - இந்திய ராணுவ உறவைப் பலப்படுத்த டில்லியில் ஆலோசனை

இலங்கை மற்றும் இந்திய ராணுவ உறவைப் பலப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன் கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகியது. இந்தக் கலந்துரையாடலில் இருநாட்டு ராணுவ உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்திய ராணுவக் குழுவுக்கு சர்வதேச ராணுவ ஒத்துழைப்பு தொடர்பான அதிகாரி மேஜர் ஜெனரல் ஐ.பி.சிங்கும், இலங்கை ராணுவக்குழுவுக்கு ராணுவ அமைச்சகச் செயலாளர் மேஜர் ஜெனரல் எச்.சி.பி.குணதிலக்கவும் தலைமை வகிக்கின்றனர்.

இருநாட்டு ராணுவ அதிகாரிகளுக்கு இடையிலான இந்த பேச்சு இரு நாடுகளினதும் ராணுவ அமைப்புகளுக்கு இடையி லான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் என்று இந்திய உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வ)

# இலங்கை எதிர்கொள்ளும் பிரச்சினைகளை உன்னிப்பாக அவதானிக்கிறது வியட்நாம்

இலங்கை தற்போது எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் குறித்து வியட்நாம் அவதானித்து வருவதாக இலங்கைக்கான வியட்நாம் தூதுவர் டொன் சின்டா தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கைக்கு சர்வதேச அழுத்தங்கள் ஏற்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இலங்கையுடன் ஒன்றிணைந்து செயற்பட வுள்ளதாகவும் வியட்நாம் அறிவித்துள்ளது.

பிரதமர் டி.மு.ஜயரட்னவை நேற்று முன்தினம் மாலை அவரது இல்லத்தில் சந்தித்தபோதே வியட்நாம் பிரதமர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை வியட்நாம் வர்த்தகர்கள் பல துறைகளில் இலங்கையில் முதலீடு செய்யக் காத்திருப்பதாக வியட்நாம் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வியட்நாமுக்கும் இலங்கைக்கும் இடையே நேரடி விமான சேவையை ஆரம்பிப்பது குறித்தும் இந்தச் சந்திப்பின்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (வ)

# சனல் - 4 வீடியோக் காட்சிகளை பார்த்த நிமிடங்கள் மிக மோசமானவை

## மனமுருகிய மலேசிய எழுத்தாளர்

இலங்கையின் கொலைக்களம் தொடர்பான சனல் 4 காணொளியைப் பார்த்த நிமிடங்கள் மிகவும் வேதனை அளிக்கின்றன என்று மலேசியாவின் பிரபல எழுத்தாளர்களில் ஒருவரான பிரீதா சமரசன் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படையினரால் போர்க் குற்றங்கள் புரியப்பட்டன என்று குற்றஞ் சாட்டி பிரிட்டனின் சனல் 4 தொலைக் காட்சியால் வெளியிடப்பட்ட போர்க் குற்ற ஆதார காணொளியைப் பார்த்த அனுபவத்தை இவர் பத்தி ஒன்றில் எழுதியுள் ளார்.

மேலும் காணொளியைப் பார்த்த அந்த 55 நிமிடங்கள் மிகவும் உருக்கமானவை, முன்பு ஒரு போதும் இவ்வளவு வேதனையைத் தரக்கூடிய காணொளியை இதுவரைக்கும் பார்த்ததே கிடையாது என்று அவர் எழுதிய பத்தியில் குறிப்பிட்டுள்ளார். (வ)

## கண்ணீர் அஞ்சலி



அரியாலை 92ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழா நிர்வாக உறுப்பினர்
திருமதி சிவம் விமலராணி
அவர்களின் அன்புக் கணவர்
**நவரத்தினம் சிவம்**

அவர்கள் 04.6.2011 சிவபதமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது நிர்வாகத்தின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்,
அரியாலை 92ஆவது சுதேசிய
திருநாள் கொண்டாட்ட விழா-2011

(49,21,23)

# சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியிருந்த இலங்கைக்குழு கைது

அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையொன்றின் போது இலங்கையைச் சேர்ந்த குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தங்கியிருப்பதற்கான விசா அனுமதியின்றி சட்ட விரோதமாகத் தங்கியிருந்த குற்றச்சாட்டிலேயே பிரஸ்தாப இலங்கையர்கள் அமெரிக்க குடிவரவுப் பிரிவின் அதிகாரிகளால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் முக்கிய மாநிலங்களில் ஒன்றான டெக்ஸாஸ் மாநிலத்தின் ஒதுக்குப்புறமான வீடொன்றில் மறைவாகத் தங்கியிருந்த நிலையிலேயே அவர்கள் குடிவரவுப் பிரிவினரிடம் சிக்கியுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது.

குடிவரவுப் பிரிவினருக்குக்கிடைத்திருந்த இரகசியத் தகவலொன்றையடுத்தே பிரஸ்தாப தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தேடுதலின் போது அங்கு மொத்தமாக பதினாறு பேர் சட்ட விரோதமாகத் தங்கியிருந்துள்ளதுடன், அவர்களில் ஏனைய நாட்டவர்கள் சிலரும் உள்ளடங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (வ)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



மண்ணில்: 1938.01.22
விண்ணில்: 2011.06.03

கடந்த 03.06.2011 இல் அமரரான
எமது குடும்பத் தலைவர்
**அமரர் சின்னக்குட்டி பாலசுந்தரம்**
(யாழ்.போதனா வைத்தியசாலை ஓய்வுபெற்ற கட்டட ஊழியர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (01.07.2011) வெள்ளிக்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் வருகைதந்து இவ் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்தும்தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் கண்ணீர் அஞ்சலி பிரசுரித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

மனைவி: தவமணி,
பிள்ளைகள்: பகீரதன் 0776161706
பாஸ்கரன்: 0779013061, ரமேஸ்: 0770525199
சுரேஸ்: 0779473804

ஸ்ரேசன் வீதி, கோண்டாவில்.
நந்தாவில் அம்மன் கோயிலடி, கோண்டாவில்.

(48,19,25)

## பெண்களுக்கான ஆயுள் வேத மசாஜ்



பெண்களுக்கான ஆயுள் வேத மசாஜ்
சிறப்பு தேர்ச்சி பெற்ற தாதியரினால்
இப்போது யாழ்ப்பாணம், வவுனியா,
மன்னார் பிரதேசங்களில் உங்கள்
வீடுகளுக்கே/ விடுதிகளுக்கே வந்து
மேற்கொள்ளப்படுகின்றன.

★ உடல் மசாஜ் ★ ஆயுள் வேத எண்ணெய் மசாஜ்
★ தலை மசாஜ் ★ அழகு பராமரிப்பு
★ பாத மசாஜ் ★ தாய் மசாஜ்

(49,23,24)

பெண்கள் மட்டும்.

தொடர்பு:- ரேணுகா- 0724309060

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
04 ★ 04 ★ 1952



மறைவு
04 ★ 06 ★ 2011

**அமரர் கனகராசா வரதராஜா**
(மில் உரிமையாளரும், பிரபல மெக்கானிக்கும்)

கடந்த 04.06.2011 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.
(5356) (19-22-45)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிக்கு ரூ.900 கோடி

## ஐ.தே.கட்சி ஆதரவு மாணவர் அமைப்பு கூறுகிறது

கொழும்பு, ஜூலை 2

பல்கலைக்கழக மாணவர்களுக்காக அரசு நடத்திய தலைமைத்துவப் பயிற்சிக்காக 900 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த அமைப்பின் முக்கியஸ்தர் புத்திக எதிரிசிங்க இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் பிரச்சினைகளுக்கு அரசு இன்னும் ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது. பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு மாணவர்களைச் சேர்ப்பதில்தான் அரசு கவனம் செலுத்தி வருகிறது.

அரசின் இந்தத் திட்டத்தால் எமது நாட்டு ஏழை மாணவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். இத்திட்டத்தை உடன்நிறுத்தவேண்டும். இல்லையென்றால் இதற்கு எதிராக நாம் கடும் நடவடிக்கை எடுப்போம்.

பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியை வழங்கி அரசு மக்களின் பணத்தை வீண் விரயம் செய்கின்றது. இந்தப் பயிற்சிக்காக 900 கோடி ரூபாவை அரசு செலவிட்டுள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு பல்கலைக்கழக மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்திருக்கலாம்.

இந்தப் பயிற்சியால் மாணவர்கள் எந்த நன்மையையும் அடையவில்லை. பணம் விரயமாகியதுதான் மிச்சம். அரசு இந்த மாதிரித் திட்டங்களை நிறுத்தி மாணவர்களின் கல்விக்கு உதவவேண்டும்.

அத்தோடு விரிவுரையாளர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார் (ஒ-சி)



கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பொதுநலவாய விளையாட்டு மதிப்பீட்டுக்குழுவின் தலைவி லூயிஸ் மார்ட்டின், பொதுநலவாய விளையாட்டுச் சம்மேளனத்தின் தலைவர் மைக் ஹூப்பர் ,விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, மத்திய வங்கி ஆளுநர்அஜித் நிவாட் கப்ரால், நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# வடக்கு, கிழக்கு பிரச்சினைகளுக்கு சரியான தீர்வை உருவாக்க முடியும்

## அனுர பிரியதர்ஷன யாப்பா கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 2



வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு சரியான தீர்வை உருவாக்க முடியும் என அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அரச திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

யுத்தம் நடைபெற்ற காலத்தை விட தற்போது, நாட்டில் முற்றாக மாறுப்பட்ட நிலைமை காணப்படுகின்றது. இதனால், சரியான தேசிய பிரச்சினைகள் குறித்து, பல கட்சிகளைக் கொண்டுள்ள நிலைப்பாடுகள் மற்றும் கருத்துக்கள் தொடர்பாக கலந்துரையாடி அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றை உருவாக்க முடியும்.

தற்போது தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் நாடாளுமன்றத்தில் உள்ளன. இதனால், சகல கட்சிகளுடனும் கலந்துரையாடி உண்மையான தீர்வை நாடாளுமன்றத்தில் தயாரித்து, அதனை மக்களிடம் சமர்ப்பிக்க முடியும் - என்றார். (ச)

# இலங்கையில் மந்தபோஷாக்கு அதிகரிப்பு என்கிறார் அமைச்சர்

கொழும்பு, ஜூலை 2

இலங்கையில் மந்த போஷாக்கு நிலை அதிகரித்து வருகிறது எனவும் இதனால் இலங்கையர்களின் உணவுப் பழக்கத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆச்சரியமளிக்கத் தக்க வகையில் கொழும்பு மாவட்டமும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அவர் இதுகுறித்து மேலும் கூறியதாவது:

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மேற்கொண்ட ஆய்வொன்றின் மூலம், கோதுமை மா உணவுப் பொருள்களை அதிகமாக உட்கொள்வதால் நுவரெலியாவிலும் கொழும்பிலும் மந்தபோஷாக்கு அதிகரித்திருப்பது தெரிய வந்துள்ளது.

நுவரெலியாவில் நீண்ட கால மந்த போஷாக்கு 41 சதவீதமாகவும் குறுகியகால மந்த போஷாக்கு 11 சதவீதமாகவும் உள்ளது. கொழும்பில்இவை முறையே 29மற்றும் 8 சதவீதமாக உள்ளன.



அரிசி, பாசிப் பயறு, கௌப்பி போன்ற போஷாக்கான, ஆரோக்கியமான உணவுப் பொருள்களை தவிர்த்துவிட்டு கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பொருள்களை உண்ணப் பிள்ளைகளைப் பெற்றோர் நிர்ப்பந்திப்பதே இதற்குக் காரணம் என மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது.

பாடசாலை மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்ல வேண்டியிருப்பதால் அவர்களுக்கு ஆரோக்கியமான மதிய உணவைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை என்பது ஆபத்தானதாகும்- என்றார். (ச)

### வெள்ளிக்கிழமைகளில் மக்கள் சந்திப்பு

அரச விடுமுறை தினம் தவிர்ந்த ஏனைய வெள்ளிக்கிழமை நாள்கள் தோறும் பொலிஸ் தலைமையகத்தில் மக்கள் சந்திப்பு நடைபெறும் என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பொலிஸ் மா அதிபர் தலைமையில் மக்கள் சந்திப்பு பொலிஸ் தலைமையகத்தில் நடைபெறுவது வழமை.

இச் சந்திப்பின்போது மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். இந்தப் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# அமெ. உயர் அதிகாரிகளை சந்தித்து வருகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 2

அமெரிக்காவுக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்கள முக்கியஸ்தர்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணையொன்று அவசியம் என்று அமெரிக்கா இலங்கையை எச்சரித்துள்ள நிலையில் இராஜாங்கத் திணைக்கள முக்கியஸ்தர்களுடான எதிர்க்கட்சித் தலைவரின் இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் மிக்கதாகக் கருதப்படுகின்றது.

இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியா விவகாரங்களுக்கான வெளிவிவகாரச் செயலாளர் அலீஷா அயர்ஸ் உடனும் ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவுள்ளார் என அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

# மின்சாரம் இல்லை; வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 2

அங்குலான இரட்டைக் கொலை தொடர்பான வழக்கு விசாரணை, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மின்சார விநியோகம் துண்டிக்கப்பட்டதன் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. இந்த வழக்கின் ட்றையல் அட்பார் விசாரணைக்காக நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிமன்றம் கூடியபோது, நீதிமன்றத்தில் மின்சார விநியோகம் இல்லையென்பது கண்டறியப்பட்டது.

இதனால் இந்த வழக்கை நீதிபதிகள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர். நீதிமன்ற கட்டடத் தொகுதியில் தொடர்ச்சியான மின்சார துண்டிப்பின் காரணமாக வழக்கில் சம்பந்தப்பட்டவர்களும் நீதிமன்ற உத்தியோகத்தர்களும் அசௌகரியமான நிலைக்குள்ளாகுவதாக நீதிபதி டபிள்யு.எம்.பி.பீ. வராவெவ தெரிவித்துள்ளார். (ச)

### குழந்தையை விற்பனை செய்த தாய் கைது

மாத்தளை, இறத்தோட்டை பிரதேசத்தில் நான்கு மாதக் குழந்தையொன்றை 5,000 ரூபாவுக்கு விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின்பேரில் அந்தக் குழந்தையின் தாய் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குழந்தையை வாங்கியவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் இறத்தோட்டைப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச)

# தாய்லாந்து செல்ல முயன்ற இலங்கையர் இந்தியாவில் கைது

கொழும்பு,ஜூலை 2

சட்டவிரோதமான முறையில் தாய்லாந்து செல்ல முயற்சி செய்த இலங்கையர் இருவர் இந்தியாவின் கொல்கத்தாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள இலங்கையர் இருவரும் சென்னையிலிருந்து கொல்கத்தா சென்று, அங்கு தங்கியிருந்தபோதே சந்தேகத்தின் பேரில் இந்தியப் பொலிஸாரினால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொல்கத்தாவிலிருந்து தாய்லாந்துக்கு சட்ட விரோதமாகப் பயணிக்கும் நோக்குடன் கொல்கத்தாவில் தங்கியிருந்ததாக அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (ச)

# கலபொடவில் காட்டுத் தீ; வனப்பகுதி எரிந்தது

கொழும்பு, ஜூலை 2

வலப்பனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கலபொட வனத்தில் கடந்த புதன்கிழமை மாலை முதல் காட்டுத்தீ தொடர்ந்து தீவிரமாகப் பரவிவருவதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வெயில் மற்றும் காற்று என்பன அதிகம் காணப்படுவதால் தீ வேகமாகப் பரவி வருகின்றது எனவும், இதுவரையில் சுமார் 50 ஏக்கர் வனப்பகுதி முற்றாக எரிந்துள்ளது என அந்த நிலையத்தின் இணைப்பாளர் எரந்தன ஹேமவர்தன தெரிவித்தார்.

தீ ஏற்பட்டமைக்கான காரணம் இதுவரை சரியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், இது விசமிகளின் செயலாக இருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் துரித மீட்சித் திட்டங்களில் மூன்று மாவட்டங்களில் கட்டுமானங்கள்

கிளிநொச்சி, ஜூலை 2

வடக்கின் துரித மீட்சித் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பலவித கட்டுமானங்களை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கை அரசு சர்வதேச அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து இதற்கான கடனைப் பெற்றுள்ளது.

தேசிய போட்டிக் கேள்வி முறைமையின் கீழ் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை இவற்றுக்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமென திட்டப் பணிப்பாளர் எந்திரி ச.சு.சிவகுமார் அறிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நில அளவைத் திணைக்களக் கட்டடம் மீள் நிர்மாணம் செய்தல், உமையாள்புரத்தில் கிராமிய் சுகாதார நிலையத்தை மீள் கட்டுமானம் செய்தல், பளைப் பிரதேச செயலகக் கட்டட மீள் நிர்மாணவேலைகள் ஆகியவை நடைபெறவுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் கட்டடங்க்ள் திணைக்களத்தின் நிறைவேற்றுப் பொறியியலாளர் கட்டடத்தின் மீள்நிர்மாண வேலை, முசலி பிரதேச சபையின் கட்டட மீள்நிர்மாணம் ஆகிய கட்டுமானங்கள் நடைபெறவுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் இராசேந்திரன் குளத்தின் புனரமைப்பு வேலைகளும் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகமும், பிராந்திய பணிப்பாளர் அலுவலகக் கட்டுமான வேலைகளும் நடைபெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், விவசாய அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஆகியவை மீள்கட்டுமானம் செய்யப்படவுள்ளன. மாந்தை கிழக்கில் உள்ளக வீதிகளின் புனரமைப்பும், புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் மீள் கட்டுமானம் என்பனவும் நடைபெறவுள்ளன. (க-எ-121)

# கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள்

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பெரியகுளம் பகுதியில் ஜப்பானிய அரசின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்ணி வெடிகள் அகற்றும் பணிகளை ஜப்பானிய பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

கண்டாவளை, பெரியகுளம் பிரதேசத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் ஒரு மில்லியன் சதுர மீற்றர் நிலப்பரப்பில் வெடி பொருள்களும் நிலக் கண்ணி வெடிகளும் இனம் காணப்பட்டுள்ளன. அதில் முப்பது வீதமான வெடி பொருள்களை அகற்றும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக டாஷ் நிறுவனப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் 10 ஆம் திகதி முதற்கட்டமாக வெடி பொருள்களை அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் ஆண் பணியாளர்களைக் கொண்டு ஆரம்பித்து அதன் பின்னர் தற்போது பெண்கள் அணியையும் இணைத்துப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-6)

# தென்னை அபிவிருத்திச் சபையால் மீள் நடுகைத் திட்டம் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜூலை 2

தென்னை அபிவிருத்திச் சபையால் மீள் நடுகை, புதிய நடுகை ஆகிய திட்டங்களின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 11 ஆயிரத்து நானூற்று நான்கு தென்னை நாற்றுக்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

யுத்தம் காரணமாகக் கிளிநொச்சி மாவட்டத்தில் தென்னைப் பயிர்கள் அதிகளவில் அழிவடைந்துள்ளன. இதனால் தேங்காயின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் தென்னை அபிவிருத்திச் சபையால் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் புதிய தென்னை நடுகைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன, அதேநேரம் ஏற்கனவே தென்னை அபிவிருத்திச் சபையின் தென்னந்தோட்டங்களில் மீள்நடுகைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 21 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ,நடைபெற்ற விவசாயக் குழுக் கூட்டத்தில் தென்னை அபிவிருத்திச் சபையால் இந்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (க-6)

# மரம் கடத்தியவர் கைது

மன்னார், ஜூலை 2

மன்னார் மடு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னபண்டி விரிச்சான் பிரதேசத்தில் சட்ட விரோதமாக வெட்டப்பட்ட மரங்கள் மற்றும் அறுக்கப்பட்ட பலகை என்பவற்றைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

உழவு இயந்திரம் மூலம் குறித்த மரம் மற்றும் பலகை என்பவை ஏற்றிச் செல்லப்பட்டபோது பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக மடு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறிய மடு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-எ-601)

## உரியவர்களின் வருகை...



மீட்சி கிடைக்குமா?: கிளிநொச்சிக்கு வருகை தந்த கொரிய நாட்டுப் பிரதிநிதிகள் குழுவினர் புனித திரேசா பெண்கள் கல்லூரிக்குச் சென்று கல்லூரி முதல்வர் திருமதி ஜெயந்தி தனபாலசிங்கத்துடன் உரையாடுகின்றனர். (6)

# புதுக்குடியிருப்பில் மேலும் இரு பாடசாலைகள் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 2

முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்புக் கல்விக் கோட்டத்தில் அடுத்த வாரம் மேலும் இரண்டு பாடசாலைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 4 ஆம் திகதி திங்கட்கிழமை முல்லைத்தீவு வள்ளிபுனம் கனிஷ்ட உயர் வித்தியாலயமும் தொடர்ந்து புதன்கிழமை முல்லைத்தீவு உடையார்கட்டு மகா வித்தியாலயமும் திறந்து வைக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதுடன் குறிப்பிட்ட பாடசாலைகளில் இணைந்து கொள்ளுமாறு இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்துள்ள மாணவர்களைப் புதுக்குடியிருப்புக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-23)

# ஒட்டுசுட்டானில் 50 வீடுகள்

ஒட்டுசுட்டான் , ஜூலை 2

அரசின் 10 லட்சம் வீட்டுத் திட்டத்தின் கீழ் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான சகல ஒழுங்குகளையும் முல்லை. மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் விஜித கமகே மேற்கொண்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தற்பொழுது படிப்படியாக மீள் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். மீள் குடியமரும் மக்களுக்கு வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன் வந்துள்ள அரசு ஒவ்வொரு பிரதேச ரீதியாகவும் வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பனிச்சங்குளம் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களுக்காக 50 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். வீடுகளை அமைப்பதற்கு பயனாளி ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா மானியமாகவும் இரண்டு லட்சம் ரூபா கடனாகவும் வழங்கப்படவுள்ளன. இந்தப் பணம் கட்டம் கட்டமாக இவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்த வீட்டுத்திட்டத்துக்கான சகல ஒழுங்குகளையும் முல்லை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் மேற்கொண்டுள்ளார். (க-115)

# கட்டாக்காலி மாடுகளும் கழுதைகளும் மன்னார் வீதிகள், சந்தையில் அட்டகாசம்





மன்னார் , ஜூலை 2

மன்னார் நகர சபைக்குட்பட்ட மன்னார் பொதுச் சந்தைப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் மாடுகள் மற்றும் கழுதைகளின் அட்டகாசத்தால் பொது மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சந்தையில் அதிகளவான மரக்கறி வகைகளை விற்கும் கடைகள் உள்ளன. இந்தக் கட்டாக்காலிகள் மரக்கறிகளைப் பலவந்தமாக இழுத்து உண்ணுகின்றன. இதனால் மரக்கறிகள் வீதியில் சிதறிக் கிடக்கின்றன. இதன் காரணமாக மரக்கறி வியாபாரிகள் அதிக நட்டத்தை எதிர்கொள்கின்றனர்.

மேலும் இவை கூட்டம் கூட்டமாக வீதிகளில் தாறுமாறாகச் செல்வதால் பாதசாரிகளும், வாகன ஓட்டுநர்களும் அதிக பாதிப்புகளுக்கு ஆளாகி வருகின்றனர். சில வேளைகளில் விபத்துக்களும் ஏற்படுகின்றன.

அத்துடன் இவற்றின் சாணி சந்தைப் பகுதியெங்கும் சிதறிக் காணப்படுகின்றது. இது அங்கு வருபவர்களுக்கு அருவருப்பை ஏற்படுத்துவதுடன் சில வேளைகளில் சிலர் இதில் கால் பதித்து வழுக்கி விழும் நிலையும் நாளாந்தம் அவதானிக்க முடிகிறது.

மன்னார் நகரசபையைப் புதிய நிர்வாகிகள் பொறுப்பேற்ற பின்னரும் இந்தக் கட்டாக்காலிகளின் அட்டகாசம் தொடர்வதால் பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

மன்னார் நகரசபையினர் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டுமென்பதே பொதுமக்களின் வேண்டுகோளாகும். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தப்பட்டது பஸ் சேவை; பொதுமக்கள் பாடு திண்டாட்டம்

கண்டாவளை, ஜூலை 2

கண்டாவளைக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் சேவையில் ஈடுபட்டு வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவை திடீரென்று நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இந்தப் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் குறிப்பாக மாணவர்கள், நோயாளர்கள் போன்றோர் தமது தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகிறார்கள்.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் நோயாளர்களின் நலன்கருதியும் நிறுத்திவைக்கப்பட்டுள்ள இந்த பஸ்சேவையை விரைவாக ஆரம்பிக்குமாறு இப்பகுதி மக்கள் உரியவர்களைக் கோரியுள்ளார்கள்.

கண்டாவளைக் கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுமார் 360 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்தப் பகுதியில் மீள்குடியமர்ந்த மக்களின் நலன் கருதி அடிப்படை வசதிகளில் ஒன்றான போக்குவரத்து வசதி அரசினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கிளிநொச்சிக்கும், கண்டாவளைக்கும் இடையில் காலையும் மாலையும் இரு தடவைகள் மட்டும் பஸ்சேவை நடைபெற்று வந்தது. போதிய பஸ் சேவை இல்லாத போதிலும் மக்கள் தங்கள் தேவைகளை ஒருவாறு பூர்த்திசெய்து வந்தனர்.

ஆனால் தற்போது இந்த பஸ்சேவை ஒருவாரமாக நிறுத்தப்பட்டுள்ளதால் இந்தப் பகுதி மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். கண்டாவளையில் போதிய வைத்தியசாலை இல்லாததால் நோயாளர்கள் கிளிநொச்சிக்குச் செல்வது வழக்கம்.

அதேபோன்று குறிப்பிட்ட சில பாடங்களைக் கற்கும் மாணவர்களும் முரசுமோட்டையில் உள்ள பாடசாலைக்குச் செல்கிறார்கள்.

இந்த நிலையில் பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பொது மக்கள், குறிப்பாக மாணவர்கள், நோயாளர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகிவருகின்றனர். (க-115)

# மாணவர்கள் 27 பேருக்கு உயர் கல்விக்கான நிதியுதவிகள்



மன்னார், ஜூலை 2

மன்னார் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கமநல மேம்பாட்டு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

மன்னார் நகரசபை மண்டபத்தில் மு.ப. 10 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்வின் போது மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வசதி குறைந்த விவசாயிகளின் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

க.பொ.த. உயர்தரப் பிரிவில் கல்வி கற்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 27 பேருக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இந்தப் புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் மன்னார் மாவட்ட அரச அதிபர் என். வேதநாயகன், மன்னார் மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சௌந்தரநாயகம், மடு உதவி அரச அதிபர் தினேஸ்குமார், கமநல உதவி ஆணையாளர் சிவலிங்கம், உதவி மாவட்டச் செயலாளர் பரமதாஸ், இலுப்பைக் கடவை விவசாய அமைப்பின் தலைவர் வி.எஸ்.சிவகரன் மற்றும் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-601)

# மின்சாரம் கிடைக்காத கிராமங்கள்

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சி, பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத்தீவு செல்லும் ஏ - 35 வீதிப்பக்கமாக அமைந்துள்ள முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, தருமபுரம் ஆகிய கிராமங்களுக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லையெனத் தெரியவருகின்றது.

இந்தப் பகுதியில் இராணுவத்தினர் ஆங்காங்கு சிறு கம்பங்களை நட்டு அவற்றினூடாக இராணுவ முகாம்களுக்குத் தேவையான மின்சாரத்தைப் பெற்று வருகின்றனர். ஆனால் பொதுமக்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

கிளிநொச்சியில் மின்சாரம் வழங்கப்பட்டு வரும் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் தமக்கும் மின்சாரம் வழங்கப்படவேண்டுமென இந்தப் பகுதி மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (க-426)

## சாதனைகள் தொடரட்டும்...



பாராட்டுக்குரிய வெற்றி: தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் கோட்ட, மாகாண மட்டங்களில் முதலிடத்தைப் பெற்ற முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியால்ய மாணவி அபிஷிகா கருணானந்தன், அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியை ஆகியோருடன் காணப்படுகின்றார்.

# பனம் விதை நடுகைத் திட்டம்

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சி மாவட்டத்தில் இவ்வாண்டு ஒரு லட்சம் பனம் விதைகள் நடுகை செய்யப்படவுள்ளதாகப் பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மாவட்டத்தில் பனை வளம் அழிவடைந்துள்ள நிலையில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இந்த ஆண்டு கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரிவுகளில் ஒரு லட்சம் பனம் விதைகளை நடுகை செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்டமாக இடங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பனை அபிவிருத்திச் சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

# டெங்கு நோய் விழிப்புணர்வு செயற்பாடு கிளிநொச்சியில்

கிளிநொச்சி, ஜூலை 2

கிளிநொச்சிப் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் இணைந்து கிளிநொச்சியின் அனைத்துப் பகுதிகளிலும் டெங்கு விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

தற்போது டெங்குநோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக பல இடங்களிலும் உள்ள வணிக நிலையங்கள், உணவகங்கள், பொது இடங்கள், வீடுகள் என்பவற்றில் உள்ள கழிவுப்பொருள்கள் அகற்றப்படுவதுடன் விழிப்புணர்வுக் கருத்தூட்டல்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

மிகவும் பின்தங்கிய பகுதிகளில் பல்வேறு சிரமங்களின் மத்தியில் இவ்வாறான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# மன்னார் உப்பளத்தில் அறுவடை



மன்னார், ஜூலை 2

மன்னார், மாந்தை உப்பளத்தின் இந்த ஆண்டுக்கான பெரும்போக உப்பு அறுவடையின் ஆரம்ப நிகழ்வு நேற்றையதினம் வெள்ளிக்கிழமை வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் வர்த்தக அமைச்சர் றிஸாத் பதியுதீனின் மன்னார் மாவட்ட இணைப்புச் செயலாளர் என்.எம்.முனவ்பர், மன்னார் உப்பளத்தின் பிராந்திய முகாமையாளர் எம்.நாகமுத்து மற்றும் நூற்றுக்கணக்கான உப்பளப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சின் இணைப்புச் செயலாளர் முனவ்பர் உப்பு அறுவடையை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்த முறை மன்னார் உப்பளத்தில் ஆயிரத்து ஐநூறு மெற்றிக்தொன் உப்பு உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்ப்பதாகவும் அதனை 6 ஆயிரம் மெற்றிக்தொன்னாக அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் பிராந்திய முகாமையாளர் நாகமுத்து தெரிவித்தார். (க-601)

# தென்பகுதிக்கு மரக்கறி வகைகள் மன்னாரிலிருந்து அனுப்பி வைப்பு

மன்னார், ஜூலை 2

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் இருந்து தென்பகுதிக்கு மரக்கறி வகைகள் அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூறாய், தேத்தாவாடி, பாலியாறு, வெள்ளாங்குளம் ஆகிய கிராமங்களிலிருந்தே இவ்வாறு மரக்கறி வகைகள் அனுப்பி வைக்கப்படுகின்றன. பயிற்றங்காய், கறிமிளகாய், பச்சை மிளகாய், பீற்றூட், பாகற்காய், பெரிய வெங்காயம், சின்ன வெங்காயம் என்பனவே இந்தக் கிராமங்களில் பயிரிடப்பட்டு அமோக விளைச்சலைக் கொடுத்துள்ளன.

இதனால் தென்பகுதியில் உள்ள தம்புள்ளைச் சந்தைக்கு இவை மிக்க் குறைந்த விலையில் அனுப்பி வைக்கப்படுவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதைவழிக் கூத்து என அழைக்கப்பட்ட பாரம்பரிய சிந்துநடைக் கூத்து வடிவம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

அரிய கலையூர் சி.சிவதாசன்

காத்தவராயன்கூத்தை மிக நீண்ட காலமாக ஆடிவருபவர்கள் வடமராட்சி, மாதனை, அல்வாய் தெற்கு, இருபாலை, இயக்கச்சி, அரியாலை மேற்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த கலைஞர்களே ஆவர். அல்வாய் தெற்கில் வாழும் கலைஞர்கள் ரூபவாஹினிக் கலையகத்திலும் இந்தக் காத்தவராயன் கூத்தை நடித்துள்ளனர்.

ஐம்பது ஆண்டு காலப்பகுதியோடு நவீன நாடகங்களின் வருகையால் சற்று ஒய்ந்து போன இந்தக் கூத்துக் கலைவடிவமானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப் பட்ட பின்னர் புத்தூக்கம் பெற்று எம்மண்ணில் ஆடப்பெற்று வருகின்றது. சிந்து இசை நடைக்கூத்தானது அதன் யாப்புப் பிசகாமல் சமூகக் கதைகளை மையமாக வைத்தும் எழுதப்பட்டதோடு ஆடப்பட்டதையும் நாம் அறிவோம். யாழ்ப்பாணச் சமூகப் பிரச்சினையை முன்வைத்து என்.கே.இரகுநாதனால் எழுதப்பெற்று அம்பலத்தாடிகள் என்ற கலைஞர்களால் ஆடப்பெற்ற ''கந்தன் கருணை'', அதனைத் தொடர்ந்து ''வள்ளல் ஏழூர்'' என்ற சமூகப்பிரச்சினையை மையமாகக் கொண்டு தெல்லியூர் கலாபூஷணம், சைவப்புலவர், சு.செல்லத்துரை அவர்களும் சிந்துநடைக் கூத்தை எழுதி மேடையேற்றியுள்ளார். சிந்து நடைக்கூத்தின் இக்கதையானது நாவலர் வழியில் ஏழைத்தமிழ்ச் சிரார்களுக்குப் பாகுபாடற்ற கல்வியை வழங்கப் பாடுபட்ட இந்து போட் இராசரத்தினம் அவர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது ஆகும். பாரம்பரிய கலைவடிவமாக இவை இல்லாத போதும் சிந்து நடைக்கூத்தின் வடிவத்தை மக்கள் முன்நிலை நிறுத்தத் தவறவில்லை.

இது தவிர கலாபூஷணம் நவாலியூர் நா.செல்லத்துரை விவிலிய நூலில் கூறப்பட்ட ''டேவிற்றும் கொலாயத்தும்'' என்னும் கதையைச் ''சின்னவனா! பெரியவனா?'' என்னும் பெயரில் சிந்து நடைக் கூத்தாக எழுதி அதனைப் பல தடவை அரங்கேற்றியுள்ளார். அத்துடன் நூலாகவும் வெளியிட்டார். மேலும் ''சூழ்ச்சியின் வீழ்ச்சி'' என்னும் பெயரில் ''ஏகலைவன்'' என்னும் இதிகாசக் கதையைச் சிந்து நடைக் கூத்தாக எழுதி நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் விழாவில் அரங்கேற்றினார். நாட்டுக்கூத்தில் கையாளப்படும் ''ப'' வடிவம், ''எட்டு'' வடிவம், வட்ட வடிவம் ஆகிய வடிவங்களைச் சிந்து நடைக்கூத்திலும் புகுத்தலாம் என்பதை அவர் இந்தக் கூத்தில் செயற்படுத்தி வெற்றியும் கண்டார். கூத்துக்கள் பாரம்பரிய வடிவில் இருக்க வேண்டுமென்ற நிலை மாறி கூத்துக்களின் வடிவங்கள் மாறாது கால மாற்றத்துக்கேற்றவாறு புதிய வடிவங்களில் அவை வெளிவர வேண்டும். அதற்கான முயற்சிகளில் ''நாடகமும் அரங்கியலும்'' கற்கும் பல்கலைக்கழக மாணவர்கள், அங்கு கற்பிக்கும் பேராசான்கள் முயற்சித்து எம் பாரம்பரிய கலை வடிவங்களுக்குப் புத்துயிர் அளிக்க முன்வரவேண்டும். இதுவே காலத்தின் கட்டாய தேவையாகும்.

(முற்றும்)

## தாயெனும் தெய்வம்

தாயே.....
உன் சிருஷ்டியின்
பிரசவமே
பிரபஞ்சத்தின் படைப்பு
உன் தாய்மையின்
தத்தெடுப்பே
தரணியின் உயிர்த்துடிப்பு
உன் நாமத்தின்
உச்சரிப்பே
தியாகத்தின் சுடர்விளக்கு
உன் சுவாசமே - நம்
சுவாசத்தின் நிலைப்பு
நீ - இன்றேல் ஏது உலகம்?
உன் கருணை மழையில் - நிதம்
நனைகிறதே நம் இதயம்



க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.

## சிந்தனை செய்

மனிதா! மதம் என்ற
மதத்தை ஒயவிடு - உன்
தேசம் என்றும் மலர் மேல்
தூங்கிவிடு
வடிகின்ற கண்ணீரில்
நிறம் இல்லையேல் - உன்
வாழ்க்கையில் மட்டும் ஏன்
பல நிறங்கள் - அனைவர்
உதிரத்தின் நிறம் இங்கு
வேறில்லையே ? மனிதா
மனதோடு மனத்தை
இணைத்துவிடு - உன்
தடைகளை மெல்ல
தகர்த்திவிடு

ஆர். கீதா,
மாவிட்டபுரம்.

# தொன்மைத் தமிழும் அண்மைத் தமிழும் இன்மைத் தமிழும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

கி.பி முதல் நூற்றாண்டு முதல் 4 ஆம் நூற்றாண்டு வரையுள்ள கால
சிற்றரசுகள் அழிந்தன. மூவரசுகளும் வலிமைபெற்றன. பெரிய அணை
கட்டப்பட்டன. தானிய விளைச்சல் மிகுதியாயிற்று. ஆற்றங்கரை ஓரங்
மக்கள் கூடினர். நகரங்கள் தோன்றின, வாணிபம் வளர்ச்சியுற்றது.
நூற்றாண்டு முதலே அந்நியநாட்டு வாணிபம் தொடங்கி வளர்ந்தது
நிலையைப் பட்டினப் பாலையில் காணலாம். அதற்கும் மே
சிலப்பதிகாரமும் கூறுகிறது.

அந்தக் காலத்தில் வணிக வர்க்கம் பெருஞ்செல்வாக்குப்பெ
மூவரசர்களது நாடுகளிலும் அதற்கு வெளியிலும், கடல்க
கீழ்நாடுகளிலும் அவர்களது வியாபாரம் பெருகியது. மூவரசு நிலங்க
தங்கு தடையற்ற வாணிபம் செய்ய ஒன்றுபட்ட தமிழ்நாடு வேண்டு
வணிகர்கள் விரும்பினர். வாணிபத்துக்கு இடையூறான பாண்
ஆட்சியைக் கண்ணகி அழித்தாள். அந்தக் காலம் தமிழ் உணர்வும், த
பிரதேச உணர்வும் மிகத் தெளிவாகத் தோன்றின.

இந்த உணர்வைச் சிலப்பதிகாரம் பல வகையில் புலப்படுத்து
கதையில் மூன்று காண்டங்களும் முடியரசர் மூவருடைய தலை நகரங்
திகழும் நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. புகார்க் காண்டம் சோழ நா
நடைபெறும் கதையையும், மதுரைக்காண்டம் பாண்டிய நா
நடைபெறும் கதையையும் நிகழ்ச்சிகளையும் வஞ்சிக்காண்டம் சேர நா
நடைபெறும் நிகழ்ச்சிகளையும் விவரிக்கின்றன. ஒவ்வொரு காண்
அந்தந்த நாட்டின் கலை வளர்ச்சியையும் பண்பாட்டை
புலப்படுத்துகின்றன. வாழ்த்துக்காதையில் மூன்று மன்னர்
வாழ்த்தப்பெறுகிறார்கள்.

''வாழியரோ வாழி
வருபுனல் நீர்ப்பொருநை
சூழும் மதுரையார்
கோமான்றன் தொல் குலமே''

'வாழியரோ வாழி
வருபுனல் நீர்த்தன் பொருநை

---

இந்த விடயத்தை உங்களுடன் சொல்லிக் கொள்ளத்தான் வேண்டும் என்று மனது பரபரக்கின்றது. இருந்தும் ஒரு மனமோ இது கலாசாரத்தோடு பின்னிப்பிணைந்த சமாச்சாரம். இது அவர்களுக்கு உரிமையானது. நீ ஏன் இதை நினைத்து கடுமையாக யோசிக்கிறாய் என்கிறது. இன்னொரு மனமோ பேனாவை கையில் எடுக்கச் சொல்கின்றது. கடைசியில் எனது ''சூப்பர் ஹீரோ மனமோ நீ கடுமையாக யோசிக்காதே உனக்கொரு கடமை இருக்கிறது. இதில் ஆணென்ன, பெண்ணென்ன பார்க்கத் தேவையில்லை எங்கு அநீதி, அறியாமை நடக்கிறதோ அதனை நீ எதிர்கொள். நீதியை நிலை நாட்டு, அறியாமையைப் போக்கு.

மண்டையோட்டின் முன் சபதம் செய்யும் வேதாளம் முகமூடி மாயாவி போல் மாயாவி சித்திரக் கதை இள வயதில் படித்திருப்பீர்களே -நானும் மாயாவி போல் சபதம் செய்து விடயத்தைச் சொல்கின்றேன். இப்போது எங்கே திரும்பினாலும் ''திருட்டுப் பற்றிய கதைதான். அதுவும் ''நகைத்திருட்டுப் பற்றித் தினமும் பத்திரிகைகளில் செய்திகள் வராத நாள்களே இல்லை எனலாம், ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக விடயங்கள் வந்த வண்ணம் உள்ளன. வீட்டிலோ, தெருவிலோ மக்கள் சந்திக்கும் இடங்களிலோ, திருவிழாக்களிலோ நகை என்பது கண்ணுக்குத் தெரிந்தால் அடுத்து நிகழ்வது அபகரிப்புத் தான்.

நகைகளை மனிதர்கள் போட்ட ''குற்றத்துக்காக'' சாமியையும் புரட்டிப் போட்டுவிட்டெல்லோ திருடிக் கொண்டு போகிறார்கள். என்ன செய்வது பல தடவைகள் பத்திரிகைகளில் நகைக் களவோடு தொடர்பான களவு பற்றிய அறிவுறுத்தல்கள், தற்காப்பு நடவடிக்கைகள், திருடர்கள் பற்றிய எச்சரிக்கைகள், பொலிஸாரின் விழிப்புணர்வு, எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் எல்லாம் மக்கள் பார்த்துப் படிக்கும் வண்ணம் பிரசுரமாகின்றன. கூடியளவு ''நகையை அணிவதைத் தவிருங்கள் என்பதை நாசுக்காகவும், நேரடியாகவும் சொல்லிக் கொள்கிறார்கள். இருந்தும் என்ன? யார் அதைக் காதில் போட்டுக் கொள்கிறார்கள்?

காலையில் பத்திரிகைகளை வாங்கிப் புரட்டினால் ''தண்ணீர் எடுக்கச் சென்ற'' வயோதிப மாதுவின் எட்டுப் பவுண் தாலிக்கொடி அபகரிப்பு .

''கடையில் பொருள்கள் வாங்கி வீடுதிரும்பிக்

கொண்டிருந்த
கிளில் வந்த
உரிமையாளர்
திருடர்கள், பே
திருட்டிக் கொ
நாகரிக உடை

இவ்வாறு எ
கொண்டு இரு
நடந்தது என
ஆக்கள் எப்
சொல்லிக் க
வந்தான் என்
நானும் மனை
பிள்ளைகள் ப
துச் சொந்தக்
கள்வனுக்கு
னால் இரவில்
என்ன செய்வ

நாம் இவ்வ
விட்டோமா?
உயிருக்கு அ
பத்தை அழி
நகைகளை
டில் ''சும்மா''
யுமா? சொல்லு
அணியாமல்
எவ்வளவு நகை
ஆண்மகனுக்
சொல்ல அவ
சங்கிலி போ
இப்பதான் சா
கோயிலில
''கழுத்தில
போட்டிருக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ழும்

ரையுள்ள காலத்தில்
பெரிய அணைகள்
ங்கரை ஓரங்களில்
ர்ச்சியுற்றது. முதல்
கி வளர்ந் தது. இந்த
தற்கும் மேலாகச்

வாக்குப்பெற்றது.
ம், கடல்கடந்த
வரசு நிலங்களிலும்
டு வேண்டுமென
றான பாண்டியன்
உணர்வும், தமிழ்ப்

புலப்படுத்துகிறது.
தலை நகரங்களில்
ம் சோழ நாட்டில்
ண்... நாட்...
ண்ட... சேர நாட்...
வாரு காண்டமும்
பண்பாட்டையும்
று மன்னர்களும்

*சூழ் தரும் வஞ்சியர்*
*கோமான்தன் தொல் குலமே'*

*'எல்லா நாம் '*
*காவிரி நாடனைப் பாடுதும்*
*பூவிரி கூந்தல் புகார்'*

ஒவ்வோர் காண்ட முடிவுக் கட்டுரையிலும், முறையே சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவரும் போற்றிப் பாடப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவான ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் மலையைக் கண்ணாடியிற் காட்டுவது இவை காட்டுவதாக இளங்கோவடிகள் கூறுகிறார். தமிழ் நாட்டை ஒரு நாடாகக் குறிப்பிடும் அடிகள் வருமாறு:

*'குமரி வேங்கடம்*
*குண குட கடலா*
*மண்டிணி மருங்கில்*
*தண் தமிழ் வரைப்பில்*
*செந்தமிழ் கொடுந்தமிழ்*
*என்றிரு பகுதியில்'*

7 ஆம் நூற்றாண்டு முதல் 13 ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் இந்தப் பிணைப்பு இறுகி வந்ததென்றே சொல்லலாம். ஆழ்வார் , நாயன்மார்களது பக்திப்பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பரவின. தமிழிசை வளமடைந்தது. கடவுளைத் தமிழாசானாகச் சமய குரவர்கள் பாடினர். பக்திப்பாடல்களில் தமிழுணர்வும் கலந்தன. பக்தி வெள்ளத்தோடு தமிழுணர்வும் வெள்ளமாகப் பாய்ந்தது. இந்தக் கால முடிவில் கம்பன் தோன்றினான். வால்மீகியின் காவியத்தைத் தமிழ்க் காவியமாக்கினான். அவனும் தமிழுணர்வை வளர்த்தான். நாட்டுப்பற்றையும் வளர்த்தான். இராமனை 'தென்மொழி கடந்தான், வடமொழிக் கெல்லை தீர்ந்தான்'' என்று அழைக்கின்றான். ''தமிழெனும் அளப்பரும் சலதி'' என்று தமிழைக் கடக்க முடியாத கடலுக்கு ஒப்பிடுகிறான். தமிழ்நாட்டுக்குத் தேவர் நாடு ஒப்பாகாது என்று காரணத்தோடு கூறுகிறான்.

நாயக்கர் காலம் தொடங்கி அவர்கள் காலம் முடியும் வரை சிறு பிரபந்தங்களில் தமிழுணர்வு குறையாமல் நிலவி வூரக் காண்கிறோம். பள்ளுப் பாடல்களும், குறவஞ்சிகளும், இந்தக் காலக் கவிஞர்கள் படைப்புகளே.

ஆங்கில ஆட்சிக் காலமே தமிழுணர்வு மங்கிய காலம் ஏன்? அடிமைக்கு மொழிப்பற்று ஏது? ஆங்கில மொழியும் பண்பாடும் மனிதப் போலிகளைப் படைத்தது. நாட்டிலேயே அயல்நாட்டு ஆன்மாவுடன் நடமாடிய மனிதரைச் சிருஷ்டித்தது. இதனால் இலக்கிய ஊற்று உள்சுரந்தது. பண்பாடு உறங்கிப் போயிற்று.

பண்பாட்டின் ஒருமையையும் உணர்தல் அவசியம் எனப் பாரதி கண்டார்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே,
'சொல்லில் உயர்வு தமிழச் சொல்லே,
இதைத் தொழுது படித்திடடி பாப்பா'
'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்'


புதிய மறுமலர்ச்சி சுந்தரம்பிள்ளையின் தமிழ் வாழ்த்துப் பாடல் தோன்றிய காலத்திலிருந்து துவங்குவதாக அடிகள் கூறுகிறார். 'கன்னடம்,தெலுங்கு, மலையாளம், துளு முதலிய தென்னிந்திய மொழிகளுக்குத் தமிழ்தான் தாய். இத்தனை மொழிகளைப் பெற்றெடுத்தும், தமிழ் ஆரியம் போல் முதுமையடைந்து அழிந்தொழிந்து போகாமல் இளமையோடு நிலவுகிறது.

(தொடரும்)

# நீங்கள் மீண்டும் கீழே போகாதீர்கள் தாமதியாது மேலே ஏறி வாருங்கள்

## சுரங்கத் தொழிலாளருக்கு ஷா அறிவுரை

(சென்றவாரத் தொடர்ச்சி)



''பெண்களுக்கு எத்தனை வயசுக்கு மேல் காதல் உணர்வு வருவதில்லை?'' அதற்கு அந்த அம்மையார் பதற்றமில்லாது வெகு எளிதாகப் பதில் கூறினார். அது இதுதான். அன்புள்ள ஷா இதைப்பற்றி என்னைவிடப் பெரியவரிடம் கேட்டால்தான் தெரியும் என்று மாமி கூறியதும் ஷா வுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை. சுரங்கத் தொழிலாளர் கூட்டம் ஒன்று நடந்தது. பெர்னாட்ஷாவும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வேண்டிக்கொண் டார்கள். ஷா கூட்டத்துக்கு வருவதற்கு ஒப்புக்கொண்டு விட்டார்.

கூட்டம் நடந்து கொண்டு இருந்தது. ஏதாவது பேசுமாறு ஷாவுக்கு அழைப்பு வந்தது.

ஷா எழுந்து பேசினார்.

''சுரங்கத் தொழிலாளராகிய உங்களுக்கு நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஒன்றே ஒன்றுதான் கூறப்போகின்றேன். அதை மட்டும் அவர்கள் நினைவில் வைத்துக்கொண்டு நடந்தால் போதும்.

அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் ''நீங்கள் மீண்டும் கீழே போகாதீர்கள் மேலே ஏறி வாருங்கள்'' என்பதுதான்.

பெர்னாட்ஷாவை ஒரு சமயம் அம்மையார் ஒருவர் விருந்துக்கு அழைத்திருந்தார். ''கண்டிப்பாக வரமுடியாது என்னுடைய உணவுப்பழக்கத்துக்குக் குழி பறிக்கும்படி உங்களுக்கு நான் என்ன கொடுமை செய்தேன்?'' என்று ஷா தந்தி அடித்தார்.

''உங்கள் உணவுப்பழக்கம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் உங்களது நடத்தையைப் போல் அவ்வளவு மோசமாக இராது என்று நம்புகிறேன்'' என்று அம்மையாரிடம் இருந்து பதில் தந்தி கிடைத்தது.

பெர்னாட் ஷா ஒரு விருந்துக்குச் சென்றிருந்தார். விருந்து முடிந்ததும் வயலின் வித்துவான் ஒருவரின் கச்சேரி நடந்தது. அதனை ஷா ஒரு ஓரமாக அமர்ந்து கேட்டுக்கொண்டு இருந்தார். சற்று நேரத்தில் விருந்து வைத்த பெண்மணி அவர் பக்கம் வந்து ''வித்துவானைப்பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

''இவர் கச்சேரியைக் கேட்கும் போது எனக்கு வின்சன்ட் சேர்ச்சிலின் ஞாபகம்தான் வருகிறது'' என்றார். இதைக்கேட்ட அந்தப் பெண்மணி திடுக்கிட்டார்.

''என்ன சொல்கிறீர்கள் வின்சன்ட் சேர்ச்சிலில் ஒரு வயலின் வித்துவான் இல்லையே?''

''இவர் மட்டும் என்னவாம்?'' என்று கேட்டார் ஷா ஒரு கணமும் தாமதியாமல்.

ஷா வை தமது வீட்டில் விருந்து சாப்பிட வரும்படி வேறு ஒரு ஸ்திரி அழைத்தார். திங்கட்கிழமை அன்று உங்களால் வரமுடியுமா?'' என்று கேட்டார் அந்த ஸ்திரி.

''மன்னிக்க வேண்டும் அன்று என் டாக்டரைப் பார்க்கப்போகிறேன்'' என்றார் ஷா.

''அப்படியானால் விருந்தைச் செவ்வாய்க்கிழமை வைத்துக் கொள்ளலாமே?''

''இல்லை என் நண்பரொருவர் உடம்பு சுகமில்லாமல் இருக்கிறார். அன்று அவரைப் பார்க்கப் போகவேண்டும்''.

அப்படியானால் கட்டாயம் புதன்கிழமை வருவீர்கள் இல்லையா? அடடா அன்று நான் கிராமத்துக்கு வருவதாக வாக்களித் திருக்கிறேன். அந்த அம்மாள் அப்படியும் விடுகிற வழியாக இல்லை. ''சரி அப்போது வியாழக்கிழமை விருந்தை வைத்துக் கொள்ளலாம்'' அன்று சில சிநேகிதர்களுடன் படகில் யாத்திரை போகப் போகின்றேன். ''வெள்ளிக்கிழமை உங்களுக்கு சௌகரியமா?''

''அன்று என் நாடகம் ஒத்திகை நடக்கின்றது அதற்குப் போகவேண்டும்'' ''சனிக்கிழமை?''

''ஐயோ அன்று நான் ஒரு கலியாணத்துக்குப் போகவேண்டும்''

''அப்படியானால் கட்டாயம் ஞாயிற்றுக்கிழமை வைத்துக் கொள்வோம்''

பெர்னாட் ஷாவினால் பொறுக்க முடியவில்லை. ஞாயிற்றுக் கிழமை அன்று எனக்கு கிளினிக் தினம் அதற்குப் போக வேண்டும் என்றார்.

பெர்னாட் ஷா தன் வீட்டுக்கு வந்த விருந்தினருடன் பல விடயங்கள் பற்றி நீண்டநேரம் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் அவரது மனைவி தையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

அதற்கான காரணத்தைப் பேச்சின் இறுதியில் அவர் மனைவியிடம் விருந்தினர் கேட்க, அவர் மனைவி நான் இவருடைய பேச்சை ஆயிரம் தடவை கேட்டுவிட்டேன். இன்று அவர் பேச்சைக் கேட்காமல் என் கைகள் தையல் வேலையில் ஈடுபட்டு இருக்காவிட்டால் அவை அவர் கழுத்தை தாமாகவே சென்று நெரித்திருக்கும் என்றார் ஏளனமாக. இனி அவரது பொன்மொழிகள் சிலவற்றைப் பார்ப்போம். எதிர், எதிர்க் கட்சிகளில் வாதாடும் சட்டத்தரணிகள் கத்தரிக்கோலின் இரு பக்கங் களைப் போன்றவர்கள். அவர்கள் ஒருவரை ஒருவர் வெட்டிக் கொள்ள மாட்டார்கள். ஆனால் நடுவில் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் இரண்டு பக்கக்கட்சிக்காரர்களையும் வெட்டி விடுவார்கள்.

விருப்பம் இல்லாதவைகளைத் திணித்துப்புகட்டும் கல்விமுறை மரத்தூளை வற்புறுத்தி உண்ணச் சொல்வது போலொன்றுதான்.

சீஸர், நெப்போலியன், ஹிட்லர் போன்றவர்கள் புகழ்வதற் குரியவர்கள் அல்லர். இவர்களை உலகத்தை அழிக்க வந்த கடுமையான தொற்று நோய்கள் என்று கூறலாம்.

இறுதியாக ஷாவின் மறைவு பற்றிப் பார்ப்போமெனின் அவர் ஆயிரத்துதொள்ளாயிரத்து ஐம்பதாம் ஆண்டு தனது தொண்ணூற்று ஐந்தாவது வயதில் காலமானதாக வரலாறு இயம்புகிறது.

(முற்றும்)

அருணா தருமலிங்கம், கோப்பாய்.

# காதில் போட்டுக் கொள்வீர்களா?

...காண்டிருந்த பெண்ணின் சங்கிலியை மோட்டார்சைக் ...ளில் வந்த நபர்கள் அறுத்துக் கொண்டு ஓட்டம், வீட்டு ...ரிமையாளர் கோயிலுக்குச் சென்றபின் வீட்டில் புகுந்த ...ருடர்கள், வேறு பல லட்சம் பெறுமதியான நகைகளை ...ருட்டிக் கொண்டு சென்றனர். கோயில் திருவிழாவில் நவ ...கரிக உடையணிந்த பெண்களால் நகைகள் அபகரிப்பு.

இவ்வாறு எத்தனை வகையான திருட்டுக்களை கேட்டுக் ...காண்டு இருக்கிறோம். எந்து வீட்டிலும் களவு. பகலில் ...ந்தது எனக்கு களவு போன துயரத்தை விட வந்த ...க்கள் எப்படி நடந்தது என்ற கேளிவிக்குப் பதில் ...சால்லிக் களைச்சுப் போனன் ''ஏன் பகலில் திருடன் ...ந்தான் என்றால் நான் என்ன பதில் சொல்ல முடியும்? ...னும் மனைவியும் வேலைக்குப் போய்விட்டோம், ...ள்ளைகள் பாடசாலைக்கு, வந்த திருடன் எனக்கு தூரத் ...ச் சொந்தக்காரனா சொல்லிவிட்டு வருவதற்கு. பாவம் ...வனுக்கு மாலைக்கண் நோயாக இருக்கலாம் அத ...ால் இரவில் வராமல் பகலில் வந்திருக்கலாம். வேறு ...ன்ன செய்வது?

நாம் இவ்வளவு இன்னல்கள் பட்டும் நகையை கைவிட்டு ...ட்டோமா? அணியாது எங்கேயாவது செல்கின்றோமா? ...யிருக்கு ஆபத்தை உண்டுபண்ணினாலும், குடும் ...த்தை அழிய வைத்தாலும் இவ்வளவு பெறுமதியான ...கைகளை அணியாமல் வீட் ...ல் ''சும்மா'' வைத்திருக்க முடி ...மா? சொல்லுங்கள் பார்ப்போம். ...ணியாமல் போங்கோ என்பது ...வ்வளவு நகைச்சுவையாக இருக்கிறது. இங்கே ஒரு ...ண்மகனுக்கு நகை அணிய வேண்டா மென்று ...சால்ல அவருக்குக் ''கோபம் வருகின்றது'' என்னண்ண ...கிலி போட வேண்டாமென்று சொல்லுறியள். நான் ...ப்பதான் சங்கிலி போடத் தொடங்கினனான். அங்க ...ாயிலில போய்ப்பாருங்கோ எவ்வளவு ஆண்கள் ...ழுத்தில இருந்து தொப்புள் சங்கிலி பெரிசாய்ப் ...ாட்டிருக்கினம்.. யாழ்ப்பாணத்து ஆண்கள் வெளியால போகேக்க ''கழுத்தில எதுவும் போடாமல் போறது மரியாதைக் குறைவாயெல்லோ இருக்கு . அங்கால போங்கோ சொல்ல வந்திட்டார்'' என்று சொல்வான்.

கனபேர் சிரிக்கிற மாதிரி கிடக்கு உவருக்கு வேணும் நல்லா வாங்கிக் கட்டிப் போனார். உது கஷ்டமான விடயம். நீங்கள் என்ன சொன்னாலும் சனங்கள் கேட்கமாட்டினம். நகை ஆசை ஊறிப் போன விடயம். என்ன சொன்னாலும் விடமாட்டினம் இவ்வளவு நடந்த பிறகு தன்னும் யார் நகை போடாமல் போயினம்? சமுதாயத்தை எப்படி மாற்றப் போறியள்?

நான் சொல்லுறது ஏற்றுக் கொள்ளாத விடயமோ? ஒரு சங்கிலிக்காகக் கழுத்து அறுத்து போறது நல்ல விடயமோ? இவ்வளவு காசைக் கொடுத்து வில்லங்கத்தை வாங்கிறது புத்திசாலித்தனமான காரியமோ? நகை நட்டுப் போடாம வாழ முடியாதே? இவையள் இல்லாமல் வெளியால சபை, சந்தி போனால்ள கௌரவம் போய் விடுமோ? கௌரவம் முக்கியமோ? உயிர் முக்கியமோ? சாமி, தெய்வங்கள் எல்லாம் மனிசரை காப்பாற்றுவினம் என்று தான் கோயில் வைத்து திருவிழா எடுத்து கும்பிடுறம். இப்ப மனிதரெல்லாம் தெய்வங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலைமையாய் போட்டுது வாழ்க்கையில் கஷ்டங்கள் வரும் போது பொருளாதாரரீதியாக பிரச்சினைகள் ஏற்படும் வேளையில் மக்களுக்கு உதவும் என்றுதான் இவையை சேமிக்க வேண்டிய நிலை உருவானது.

நாங்கள் எதிர்காலத்தில் அவசரத் தேவைக்கு உதவும் எண்டு நினைத்த ''சொத்து'' இன்று அழகுப் பொருளாக மற்றவர்களை ஆசை காட்டி மோசம் செய்யும் பொருளாக மாற்றி அதற்கு என்னென்ன காரணங்கள் சொல்கின்றோம். மது வுக்கு அடிமையான ஒருவரிடம் ஏன் நீங்கள் குடிக்கிறீங்கள் எனக் கேள்வி கேட்டால் அவர் பல காரணங்கள் சொல்வார். அவையெல்லாம் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணங்களாக இருக்குமா? யோசித்துப் பாருங்கள், நகையும் காணி மாதிரி சொத்தாக நினைத்து - தூர வைக்க வேண்டிய பொருள். ஆனால் நாம் மது மாதிரி நகையையும் கையில் தூக்கினால் பிரச்சினை எங்களுக்கே.

தொல்புரம் சி.கதிர்காமநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 ஜூலை 2011 சனிக்கிழமை

# வெற்றியின் இரகசியம்

வாழ்வில் உயர்வை எட்டுவது மனிதனுக்குத் தரப்பட்டுள்ள சிறப்புரிமை. வெற்றி பெறுவது அவனுக்குப் பழக்கமான ஒன்று. அப்படி இருந்தும் வாழ்க்கையைத் தாறுமாறாக வாழ்வதன் விளைவாகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் தோல்விகளால் துவண்டு துன்புறுவதைக் காண்கிறோம். வெற்றிபெற்ற மனிதன் ஒருவன் இருந்தால் அதற்கு எதிர்மாறாகத் தோல்வியுற்று, மனமொடிந்து, நடைப்பிணங்களாக நடமாடும் பல்லாயிரக்கணக்கானவர்களைத் தற்கால நாகரிக சமுதாயத்தில் காண்கிறோம். உரலில் அகப்பட்டுக்கொண்டு அரைபடுவதுபோல் ஓயாத போட்டிகள் நிறைந்த சந்தை போன்ற இவ்வுலகில் மக்கள் சிக்கி நசுங்குகின்றனர்.

ஆனால் மனிதகுலம் இவ்வாறு சீரழிவதற்காகப் படைக்கப்பட்டதல்ல என்று அனைத்து ஆன்மிக நூல்களும் பறை சாற்றுகின்றன. தனி மனிதன் ஒவ்வொருவரும் தன்னுடைய திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தும் கலையை மட்டும் கற்றிருந்தால் மனித சமுதாயத்தின் எதிர்காலம் துன்பம் நிறைந்த ஒன்றாக மாற வேண்டியதில்லை என்று அவை கூறுகின்றன.

மனிதன் இயற்கையாகவே முழுமையானவன், குறைவற்றவன் என்று வேதாந்தங்கள் கூறுகின்றன. ஆகவே அவனிடம் எல்லையற்ற ஆற்றல்கள் மறைந்து கிடக்கின்றன என்றும் அவை கூறுகின்றன. நம்முடைய வாழ்க்கையை மட்டுமன்றி நம்மைச் சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையையும் உயர்த்துவதற்கு வேண்டிய திறமையும் சக்தியும் ஆற்றலும் மனிதனுக்கு இருக்கின்றது என்று நமது ரிஷிகள் கூறுகின்றனர். நம்முள் புதைந்து கிடக்கும் இந்தச் சக்தியை, திறமையை இனங்கண்டு அதனை முழுமையாகவும், திறமையாகவும் கையாளும் ஆற்றல்தான் நாம் எப்போதும் போற்றி விரும்பத்தக்கது. நம்முள் இருக்கும் திறமை அனைத்தையும் புரிந்து கொண்டு அவற்றை நன்கு பாதுகாத்து, மேலும் மேலும் வளரச் செய்யும் வகையில் வாழும் வாழ்க்கை தான் பயனுள்ள வாழ்க்கையாகும். இந்த முயற்சியில் நாம் எவ்வளவு வெற்றி பெறுகிறோம் என்பது நம் குணத்திலும் நடத்தையிலும் ஆளுமையிலும் நாம் எத்தகைய மாற்றங்களைக் கொண்டு வருகின்றோம் என்பதைப் பொறுத்தது ஆகும். இதில் நமக்கு எத்தனை ஆற்றல்கள் இருக்கின்றன என்பது முக்கியமல்ல. அவற்றில் எத்தனை ஆற்றல்களை நாம் வளர்த்துக்கொள்கின்றோம் என்பது தான் முக்கியம். ஒரு மனிதனுக்குப் பல ஆற்றல்கள் இருப்பினும் வாழ்க்கையில் அவன் தோல்விகளைச் சந்தித்தவனாக இருப்பான். தனக்குள்ள ஆற்றல்களை நடைமுறை வாழ்வில் சரிசரப் பயன்படுத்துபவன்தான் வெற்றிபெறுவான்.

நிகழ்காலத்தில் மட்டுமல்ல எதிர்காலத்திலும் நாம் எவ்வாறு முன்னேற்றம் அடைகிறோம் என்பது நம் கையில்தான் உள்ளது. மற்றவர்களின் உதவியுடனும், ஆதரவுடனும் தான் நம்மால் செம்மையாகச் செயலாற்ற முடியும் என்ற மயக்கத்துக்கு நாம் ஆளாகக்கூடாது. நம்முடைய வெற்றியனைத்தும் நம்கையில்தான் உள்ளது எனும் அடிப்படை உண்மையை நாம் புரிந்து கொண்டே ஆகவேண்டும். நாம் சக்தியற்றவர்கள், திறமையற்றவர்கள், அர்த்தமானவர்கள் என்கிற தவறான அவசரப்பட்டு எடுத்த முடிவே, நாம் சந்திக்கும் தோல்விகளுக்குக் காரணம்.

இறைவனின் படைப்பில் நமக்கும் பெரும்பங்கு உண்டு. நமது ஆற்றல் அளவு கடந்தது, எல்லையற்றது, தியானத்தின் மூலம் இதனை உணர்ந்து, மனதில் நன்றாகப் பதிவு செய்து வேண்டிய சக்தியையும் உறுதியையும் பெற்றுக்கொள்வோம். அநாவசியமான கவலைகளை மனதில் கொள்ளாமல் இருப்போம். மனதில் உறையும் இறைவனுக்கே நம் முயற்சிகள் அனைத்தையும் சமர்ப்பிப்போம். இறைவனின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவோம்.

'இறைவா உன் திருவுளப்படிதான் அனைத்தும் நடக்கும்' என்று மனதுக்கு இதமளிக்கும் மனப்பாங்குடன் செயல்புரிவோம். 'இறைவனின் விருப்பம்' என்பது நம் தனிப்பட்ட விருப்பங்களைவிட மிகப்பெரியது. இதுதான் நம் செயல்கள் அனைத்துக்கும் ஊக்குவிப்புக் காரணியாகத் திகழும். ஓர் உண்மையான ஆன்மிக மனிதனிடம் மகிழ்ச்சி, அமைதி, மென்பண்பு, சீலம், நம்பிக்கை, மனிதாபிமானம், புலனடக்கம், அஞ்சாமை, துன்பங்களைத் தாங்கிக்கொள்ளும் துணிவு என்பன நிறைந்திருக்கும். துடிப்பு நிறைந்த அத்தகைய ஆன்மிக மனிதனைக் கட்டுப்படுத்த எந்தச் சட்டமும் தேவையில்லை. ஏனெனில் அவன் சுயகட்டுப்பாடு உடைய மனிதன்.

அனைத்துச் சட்டங்களுக்கும் தலைவனான இறைவனை வெளிப்படுத்தும் ஒரு கருவியாக அந்த மனிதன் விளங்குவான். இறைவனின் விருப்பம் நம் மூலம் நிறைவேறும் வகையில் இதுவரை கூறிய நற்பண்புகளை நாம் வளர்த்துக் கொண்டே ஆக வேண்டும்.

கவலையை விட்டொழியுங்கள்; கவலை என்பது ஆன்மிகப் பலவீனத்தின் ஒரு வெளிப்பாடு தான். தன்னம்பிக்கையின்மையைத்தான் அது காட்டுகின்றது.

வாழ்வில் சில சந்தர்ப்பங்களில் சோதனைகளை நாம் சந்திக்க நேர்வது இயற்கையே, அப்போது நாம் அஞ்சி நடுங்கக் கூடாது. வாழ்வை முழுமையாக வாழ நாம் எல்லோருக்கும் அளவற்ற மனோதைரியம் தேவை. நாம் இதை வளர்த்துக் கொண்டேயாக வேண்டும்.

எங்கும் நிறைந்துள்ள, எல்லைகளுக்கு அப்பாற்பட்ட, அனைத்துச் சக்திகளையும் தன்னுள் அடக்கியுள்ள இறைவனிடம் நாம் நெருங்கிச் செல்லச் செல்ல நம்முள்ளே அடங்கிக் கிடக்கும் அளப்பரிய ஆற்றல்களை நாம் உணர்வோம்.

இதை நாம் உணர்ந்தேயாக வேண்டும். தன்னம்பிக்கையை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

இறைவனுடன் நம்மை ஒன்றிணைத்துக் கொள்ளும்போது வெற்றிபெறும் பலம் நமக்குக் கிடைக்கும். ஆகவே நம்மை இறைவ னுடன் இணைத்துக் கொண்டேயாக வேண்டும்; நாம் இதனைச் செய்தேயாக வேண்டும்.

**பிரம்மச்சாரி ஜாக்கிரத சைத்தன்ய,**
*சின்மயா மிசன்-யாழ்ப்பாணம்.*

# கருணை வழங்கும் இறைவனால் கொடுக்கப்படும் வரங்கள்

திரண்ட செல்வத்தைத் திரட்டுவதை விட நற்பெயரைத் தெரிந்து வைத்திருப்பதே எமது அன்றாட வாழ்வில் சிறந்தது.

வெள்ளியையும் பொன்னையும் விடப் புகழைப் பெறுவதே எமது ஆயுளில் அர்த்தமுள்ள ஒன்றாகும்.

ஆனால் செல்வருக்கும் வறியவருக்கும் பொதுவான ஒன்று இந்த உலகில் உள்ளது. அதுவே நாம் அனைவரும் கடவுளால் உருவாக்கப்பட்டவர்கள் என்பதாகும்.

செல்வர் ஏழையை அடக்கித் தமது ஆளுமையை நிலைநாட்டிக் கொள்கின்றார். ஆனால் கருணை நிறைந்தவர் தம் உணவை ஏழைகளோடு பகிர்ந்து உண்டு பெற்றவர் ஆகின்றார். ஆண்டவர் தூய உள்ளத்தினரையே விரும்புகிறார்.

ஆனால் இன்சொல் கூறுவோரோ அரசனது நட்பைப் பெறுகின்றனர்.

அது போலவே எதிரில் வரும் இடரைக் கண்டதும் விவேகம் உள்ளவர் மறைந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்கின்றார்.

ஆனால் அறிவிலிகள் அதன் எதிரே சென்று துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

தாழ்மையுள்ளவர்களுக்கும் அச்சம் உடையவர்களுக்கும் கிடைக்கும் பயன் செல்வமும் மேன்மையும் நீடித்த ஆயுளும் மட்டுமே.

ஆனால் நேர்மையற்றவர்கள் வழியில் வெறும் முள்களும் புதர்களுமே இருக்கின்றன. விழிப்புடன் இருப்பவர் அவற்றினருகில் செல்வதைத் தவிர்த்துக் கொண்டு தமது வாழ்க்கையை செவ்வனே நடத்துகின்றனர்.

நல்வழியில் பிள்ளைகளை வளர்க்கும்போது அவர்கள் முதுமை அடைந்த பின்னரும் அந்தப் பழக்கத்திலிருந்து தவறிச் செல்லாது வாழ்கின்றனர். இவ்வாறே அறிவுடையோரைக் காப்பதில் ஆண்டவர் கண்ணாய் இருக்கிறார். அதுமட்டுமன்றி பிள்ளையின் இதயத்தில் மடமை ஒட்டிக் கொண்டிருக்கும்போது கண்டித்து திருத்தும் பொறுப்பு பெற்றோருக்கு இருப்பதுபோல் செல்வராக இருந்து கொண்டு ஏழைகளை ஒடுக்குகிறவனையும் தந்தையாகிய இறைவன் தண்டித்தே ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதா தியானம்

ஏதொரு காரியத்தில் ஈடுபடும்போதும் முதலில் நம் மனதை அதில் நிலைநிறுத்த வேண்டும். இல்லையேல் நம் கவனம் அந்தக் காரியத்தில் செல்லாது. லோக சம்பந்தப்பட்ட காரியமானாலும் சரி, ஆன்மிக விடயமானாலும் சரி, முதலில் இறை வணக்கம் செய்வது முறை.

உலக சம்பந்தப்பட்ட விடயங்களுக்கே இந்த நியதியானால் தெய்வ விடயங்களைக் கேட்க வேண்டுமோ? .

உலக சம்பந்தப்பட்ட விடயங்களில் சிக்கி அலைபாயும் மனதை ஓர் நிலைக்குக் கொண்டுவந்து நாம் செய்யப்போகும் காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். அப்போதுதான் நாம் செய்யும் காரியம் பலிதமாகும். மனம் நிலயில்லாமல் ஒரு காரியமும் செய்ய இயலாது. மனம் தான் முதல் தோழன். அதுதான் முதல் எதிரியும் கூட. ஆகையால் இந்த மனதை நம் வசம் கொண்டு வருவது மிக அவசியம்.

மனதை ஒரு நிலைப்படுத்த அதை ஒரு ஸத் விசாரத்தில் நிலையாக இருத்த வேண்டும். ஏனெனில் விசாரக் கோர்வைதான் மனம். விசாரத்தை நாடியே மனம் இயங்குகிறது. விசாரமில்லையேல் மனமும் இல்லை.

நீங்கள் பாடசாலைப் புத்தகங்களைப் படிப்பதற்கு முன் பகவானை தியானம் செய்யும் பொருட்டு உங்களுக்குத் தெரிந்த நித்திய ஸ்லோகங்களில் சிலவற்றைச் சொல்வீர்களானால், நீங்கள் படிக்கும் புத்தக விடயம் எளிதில் உங்களுக்கு விளங்கும். காரணம், நம்மை இறைவன் அருளுக்குப் பாத்திரமாகச் செய்யவேண்டும். நாம் செய்யப்போகும் விடயத்தில் கருத்தாக இருக்க இறைவனின் அருளும் குருநாதரின் கிருபையும் வேண்டியது அவசியம்.

அதுபோல் இங்கு கீதைசாரத்தை நாம் உணர்வதற்காக இந்த இறை, குரு வணக்க சுலோகங்கள் தரப்பட்டுள்ளன. இதன் பிறகு வரும் சுலோகங்கள் மூலமாதவே நமக்கு கீதை எங்கிருந்து, யாரால், எவருக்காக, எப்போது படைக்கப்பட்டது, அதன் விசேடம் என்ன, அதில் தந்துள்ள தத்துவம் ஏது, அதனால் நமக்கு என்ன பயன் போன்ற விடயங்கள் மிகத் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

இதுவே கவியின் சாமர்த்தியம். கவிகள் தாம் சொல்லப் போகிற விடயத்தைச் சுருக்கமாக முன்னதாகவே வெளியிடுவது வழக்கம். சுலோகங்களைக் கொண்டு கிரந்த கர்த்தா தாம் கையாளப் போகும் விடயத்தைப் பற்றியும் அதற்கு உகந்த தியான சுலோகங்களையும் மிக அழகாகத் தந்துள்ளார். 9 தியான சுலோகங்கள் இதுகுறித்த விளக்கங்களைத் தருகின்றன. கீதையைப் படிப்பதற்கு முன்பு இந்த 9 தியான சுலோகங்களையும் சொல்ல வேண்டியது மிக அவசியம். அப்போதுதான் நம் மனம் அதில் ஈடுபட்டு நம்மால் இந்த கீதோபதேச அமிர்தத்தைத் தடையில்லமல் பருக முடியும்.

# நம் ஜீவிதக் குறிக்கோள் என்ன?

எல்லோரும் உலகில் வாழ்வதற்காகவே பிறந்திருக்கிறோம். இது கூடத் தெரியாதா என்ன? என்று நீங்கள் கேட்கலாம். ஆனால் வாழ்வு என்பது என்ன? நம் ஐம்புலன்கள் உலகிலிருந்து வரும் விடயங்களை உட்கொண்டு அதற்கேற்ப இயங்குகின்றன. நாம் உண்ணும் உணவுப் பொருள்களின் தன்மையைப் பொறுத்து நம் இயக்கம் உள்ளது.

ஸாத்வீக உணவுப் பொருள்களை உட்கொள்வோமானால் நம் இயக்கம் ஸாத்வீகமாக இருக்கும். ராஜஸீக உணவு உட்கொண்டால் நம் இயக்கமும் ராஜஸீகமாக இருக்கும். தாமஸீக உணவு மந்த புத்தியுடன் நம்மை இயங்க வைக்கும். காரணம் நம்முள் ஸத்வ, ரஜஸ், தமோ குணங்கள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு பொழுது நாம் ஒவ்வொரு விதமாக இயங்குகிறோம். எதனால்? இம்மூன்று குணங்களின் சேர்க்கை வீதத்தைப் பொறுத்திருக்கிறது நம் இயக்கத்தின் தன்மை.

இம்மூன்று குணங்கள் நாம் உட்கொள்ளும் உணவுப் பொருள்களின் தன்மையை ஒட்டியுள்ளது. எதற்காக உண்கிறோம்? உயிர் வாழ்வதற்காக அல்லவா? ஆனால் சிலர் உண்ணுவதற்காகவே வாழ்கிறார்கள். உணவு மட்டும்தான் நம் வாழ்வின் நோக்கமா? அல்ல. பின் நம் வாழ்வின் குறிக்கோள் என்ன? நாம் எங்கிருந்து வந்தோம்? எப்படி வந்தோம்? எதற்காக வந்தோம் என்ற கேள்விகளைக் கேட்டுப் பாருங்கள். விடை கிடைக்கிறதா? அம்மாவின் உதிரத்திலிருந்து வந்தோம். உதிரத்தில் கருவாக வந்து வளர்ந்து முழு வளர்ச்சியான பிறகு வெளி வந்தோம். உயிர் வாழ்வாதற்காக வந்தோம். இதுதானே உண்மை? தவறு.

கரு எங்கிருந்து உருவானது? எதற்காக உருவானது? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண வேண்டும். உடல் மூலமாக உலகில் இயங்குகிறோம். உயிர் உள்ளதால் வாழ்கின்றோம். உயிர் நிலைத்து நிற்க உணவு உட்கொள்கிறோம். ஆனால் உயிர் என்பது என்ன? எங்கிருக்கிறது? எங்கிருந்து வந்தது? விடை காண இயலாத ஒரு வினா. உள்நோக்கி நம் கவனத்தைத் திருப்பினால் விடை கிடைக்கும். நம்மை நம்முள் இருந்து இயக்குவது யார்? நான் யார்? என்பன போன்ற வினாக்களுக்கு விடை காண வேண்டும். நான் உடலா? அல்லது மனமா? அல்லது புத்தியா? அல்ல. நான் என்பதன் பொருள் என்ன? இப்படி பகவான் ரமண மஹாரிஷி தந்துள்ள ஆத்ம விசாரத்தைக் கையாண்டால் விடை கிடைக்கும். ஆனால் இதை ஒரு வினாவாகக் கையாளக் கூடாது. ஒரு சாதனையாகக் கொள்ள வேண்டும்.

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவே அரசுக்கு ஆதரவு வழங்குகின்றோம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி.தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 2

அமைச்சுப் பதவிகளுக்காக மலையக மக்கள் முன்னணி அரசை ஆதரிக்கவில்லை. பெருந்தோட்டப் பகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை அரசுடன் பேசித் தீர்த்துக் கொள்ளும் முகமாகவே ஆதரவு வழங்க முடிவு செய்தோம் என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கண்டி, மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பௌத்தபீடங்களின் மகாநாயக்கர்களை சந்தித்த பின் ஊடகங்களுக்குத் கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியதாவது:

அரசு இன்று மலையகப் பகுதிகளில் பாதை அமைப்பு, வீட்டுத்தோட்ட அமைப்பு போன்ற துறைகளில் படிப்படியாக அபிவிருத்திகளை மேற்கொண்ட போதும் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் இருக்கின்றன.

எனவே, நாம் போராட்டம் நடத்தி சாதிப்பதை விட சினேகபூர்வமாகப் பேசி சாதிப்பது இலகு. அந்த அடிப்படையில் தான் நாம் அரசுக்கு ஆதரவு வழங்குகின் றோம். இருப்பினும் அமைச்சுப் பதவிகள் எமக்கு வழங்கப்படும் பட்சத்தில் அதனை மறுக்கவும் மாட்டோம்.

இன்று 13 ஆவது அரசமைப்பு திருத்தம் பற்றியும், அதற்கு மேலதிகமாகவும் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. சிங்களத்துக்கு இணையாகத் தமிழ் மொழியிலும் கருமங்கள் நடைபெற இடமளிக்கப்படவேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டு மல்ல அதற்கு வெளியேயும் தமிழ் மொழிபேசும் மக்கள் உள்ளனர். எனவே, சுமார் 22 வருடங்களுக்கு முன்பு உருவான ஜே.ஆர். -ராஜிவ்காந்தி ஒப்பந்தம் மூலம் மாகாணசபைகள் உருவாகின. அந்த நோக்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

அதேவேளை, பெருந்தோட்டப் பகுதி மக்களின் வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்றும், அதற்கு சமயத் தலைவர்களாக உள்ள மகா சங்கத்தினர் நல்லாசி வழங்குவது டன் அரசுக்கும் வலியுறுத்த வேண்டும் என்றும் மகாநாயக்கர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

உயர் கல்வித்துறையில் இன்று மலையக மக்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, உயர்கல்வி போதிக்கும் வசதிகளும் ஆசிரிய நியமனங்களும் ஏற்படுத்தப்படவேண்டும். இதனை விட மலையகத் தமிழ் மக்களுக்கென தனியான பல்கலைக்கழகம் ஒன்றும் உருவாக்கப்பட வேண்டும் என்றும் மகாநாயக்கர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது - என்றார். (ச)

# எட்டுச் சுற்றுப் பேச்சுக்களிலும் ஏமாற்றம் மட்டுமே மிச்சம்

## அரியநேத்திரன் எம்.பி.கூறுகிறார்



வெல்லாவெளி, ஜூலை 2

இதுவரைக்கும் இலங்கை அரசுடன் எட்டுச் சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன. எனினும், தமிழ் மக்கள் சார்பில் எந்த வித சாதகமான பதிலும் கிடைக்க வில்லை. எட்டுத் தடவைகளும் இலங்கை அரசு தமிழர்களை ஏமாற்றியுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்றுமுன்தினம் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எட்டுச் சுற்றுப் பேச்சுகள் என்று அழைத்து அண்மைக்காலமாக எட்டுத் தடவைகள் ஏமாற்றியுள்ளது. அதேவேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொழும்பில் நடந்த நிகழ் வொன்றில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலம் தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்று கூறியுள்ளார். இதனைவிட இந்தியப் பிரதமர் இலங்கை இனப்பிரச்சினைக்குக் குறுகிய காலத்தில் தீர்வு கண்டுவிட முடியாது என்று கூறியுள்ளார்: ஹெல உறுமைய இனப்பிரச்சினை தொடர்பில் பேச்சுகள் நடத்தத் தேவையில்லை என்று கூறுகின்றது.

நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்றால் பேச்சுகள் எதற்கு? தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் எதற்கு? நாங்கள் குறுகிய காலத்தில் எமது பிரச்சினைக்குத் தீர்வு கேட்கவில்லை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் திருமணப் பேச்சு ஒன்றை நடத்தவில்லை. இது உரிமைக்கான போராட்டமாகும். இந்தநிலையில் தமிழ் மக்களுக்கு, இலங்கை அரசிடமிருந்து எந்த விதமான சாதகமான பதிலையும் காணமுடியாதுள்ளது- என்றார்.(ச)




கிண்ணியர் வலயக் கல்விப் பணிப்பாளர் எல்.எம்.ஹாசீம் தாக்கப்பட்டதைக் கண்டித்து நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை கிண்ணியா எழிலரங்கு மைதானத்திற்கு முன்னால் அதிபர், ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# மட்டக்களப்பு மக்கள் வங்கியில் பணம், தங்க நகைகள் கொள்ளை

## சினிமாப்பாணியில் ஆயுத முனையில் துணிகரம்

மக்கள் வங்கி என பெயர்ப்பலகை பொறிக்கப்பட்ட வானில் வந்த கொள்ளைக் கும்பலொன்று மக்கள் வங்கிக்குள் நுழைந்து சினிமாப் பாணியில் ஆயுதமுனையில் 37 லட்சம் ரூபா பெறுமதியான பணம் மற்றும் கோடி ரூபா பெறுமதியுடைய தங்க நகைகளையும் கொள்ளையிட்டுத் தப்பியோடிய சம்பவமொன்று நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு திமிலைத்தீவு, புதூர் பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையொன்றிலேயே நேற்றுமுன்தினம் இந்தத் துணிகர கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கள் வங்கி என பெயர் பலகை பொருத்தப்பட்ட வாகனத்தில் வந்த ஆறு கொள்ளையர்களே வங்கிக்குள் ஆயுதங்களுடன் நுழைந்து வங்கியிலிருந்த 3 பெண் ஊழியர்களை அச்சுறுத்தி ஒரு அறைக்குள் வைத்து பூட்டிவிட்டு நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்து தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு பொலிஸார் பல்வேறு கோணங்களில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-21)

# கொடி விற்பனையில் சமுர்த்தி அதிகாரசபை சாதனை

சமுர்த்தி அதிகாரசபை சர்வதேச புகைத்தல் தினத்தையொட்டி, மட்டக்களப்பு மாவட்டத்தில் கொடி விற்பனையில் சாதனை படைத்துள்ளது என மாவட்ட சமுர்த்தி பிரதி ஆணையாளர் பி.குணரத் தினம் தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள 29 சமுர்த்தி வங்கிச்சங்கங்களினூடாக 45லட்சத்து 30 ஆயிரத்து 390 ரூபாவுக்கு கொடி விற்பனை செய்யப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். இதில் அதிகபட்சமாக வெல்லாவெளி சமுர்த்தி சங்கத்தினுடாக 40 லட்சத்து 6 ஆயிரத்து 252ரூபாவுக்கு கொடிவிற்பனை செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-21)

# புற்றுநோய்- ஓர் அறிமுகம்


## புற்றுநோய் விழிப்புணர்வுத் தொடர் 2

வடபகுதியில் மக்களிடையே புற்றுநோய் இப்போது வெகுவேகமாகப் பரவி வருகிறது. இந்த உயிர்க்கொல்லி நோயைக் குணமாக்குவதற்கான பல நவீன சிகிச்சை முறைகள் இப்போது அறிமுகமாகியுள்ளன. ஆனால் புற்றுநோயால் பாதிக்கப்படுவோர் பிந்திய நிலையிலேயே சிகிச்சைக்குச் செல்வதால், அதனைக் குணமாக்குவதில் வைத்தியப் பகுதியினர் பல சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகிறது. குடாநாட்டில் புற்றுநோய்க்கு நவீன சிகிச்சை முறைகளை அறிமுகப்படுத்தும் திட்டங்களுக்கு வேண்டிய இருநூறு (200) மில்லியன் ரூபாவைத் திரட்டும் இலக்குடன் காலி, தேவேந்திர முனையிலிருந்து பருத்தித்துறை வரை "(TRAIL) அடிச்சுவடு பாதை நடை பயணம்" ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்தக் காலப்பகுதியில் மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் பெருநோக்குடன் உதயனில் இக்கட்டுரைத் தொடர் வெளியிடப்படுகிறது.

★ புற்றுநோய் என்றால் என்ன?


இது உடற் கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக, அசாதாரண முறையில் பெருக்கமடைவதால் ஏற்படும் வளர்ச்சிகள் அல்லது கட்டிகள் எனக் கொள்ளலாம். இது எமது உடலின் எப்பகுதியிலும் ஏற்பட லாம்.

உலகளாவிய ரீதியில் புற்றுநோயால் பாதிப்படைவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இதேபோல் இலங்கையிலும் இவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இலங்கையின் புள்ளிவிவரம் விளக்கப்படம் - 1இல் தெளிவாக காட்டப்படுகின்றது.





புற்றுநோயாளர்கள் எண்ணிக்கை அதிகரிப்பானது பெண்களில் கூடுதலாக உள்ளதையும் அவதானிக்கலாம்.

ஆண்களில் வாய் மற்றும் தொண்டைப் பகுதியில் அதிக அளவிலும் இரண்டாவதாக நுரையீரலிலும் அதிக அளவில் புற்றுநோய் ஏற்படுகிறது. (விளக்கப்படம் -2)





பெண்களில் மார்பகங்களிலேயே அதிக அளவில் புற்றுநோய் ஏற்படுகின்றது. இரண்டாவதாக கருப்பைக் கழுத்துப் பகுதியிலும் மூன்றாவதாக களப் பகுதியிலும் ஏற்படுகின்றது. (விளக்கப் படம் - 3). இலங்கையில் ஒருவருடத்தில் சுமார் 20,000 புதிய நோயாளிகள் இனம் காணப்படுகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் பிந்திய நிலைகளிலேயே சிகிச்சைக்காக வருகின்றனர்.





உலகளாவிய கணிப்பீடுகளின் அடிப்படையில் 2010 ஆம் ஆண்டளவில் 10.3 மில்லியன் மக்களும் 2030 ஆம் ஆண்டளவில் 12 மில்லியன் மக்கள் புற்று நோயால் மரணிப்பர் என்று எதிர்வு கூறப்படுகின்றது. (விளக்க படம் - 4)

உலகளாவிய ரீதியான இழப்புக்கான காரணிகள்



இவ்வாறு மரணிப்பவர்களில் பெரும்பான்மையானோர் வளர்முக நாடுகளிலேயே எதிர்பார்க்கப்படுகின்றது என்பது மிகவும் வருத்தப்படக் கூடியதே.

புற்றுநோயினால் ஏற்படும் இழப்புக்கள் வளர்முக நாடுகளிலேயே அதிகமாக உள்ளது.




(விளக்க படம் - 5)

புற்று நோயானது எமது பரம்பரை அலகுகள், சூல் மாற்றங்கள் உணவுப் பழக்க வழக்கங்கள் மற்றும் பல காரணிகளில் ஒட்டு மொத்தத் தாக்கங்களில் விளைவாகவே எமது உடலில் ஏற்படுகின்றது. இந்தத் தாக்கச் செயற்பாடுகள் என்ன என்பது தற்போது பெருமளவில் சில உள் அளவில் ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்த அறிவின் வளர்ச்சி புற்றுநோய்க்கான நிர்ப்பீடனம் (VACCINATION) மூலம் இல்லாதொழித்தல், புற்றுநோயை குணமாக்கல் அல்லது அதன் அசௌகரியத்தை கட்டுப்படுத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு வழிசமைத்துள்ளது.

புற்றுநோய் வைத்திய நிபுணர்
என்.ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:**
வீண் பழிகள் வராமலிருக்க எதிலும் எச்சரிக்கையோடு செயற்படுவீர்கள். உறவினர்கள் மூலம், உங்களின் சில வேலைகளை முடிக்க முற்படுவீர்கள். தொழில், வியாபார ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவருக்கு பதில் உதவி செய்வீர்கள். சில பொருள்களை குறைந்த விலையில் வாங்கலாம்.

**இடபம்:**
வீட்டைச் சீரமைப்பதில், அழகாக வைத்திருப்பதில் அக்கறை காட்டுவீர்கள். நண்பர்களுக்காக உங்களின் சேமிப்புப்பணத்தைச் செலவிடலாம். இளவயது நண்பர் ஒருவரைச் சந்தித்து, பழைய கதைகள் பேசி மகிழ்வீர்கள். நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த உறவினர் ஒருவர், உங்களைத் தேடி வரலாம். குடும்பத்துடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம்.

**மிதுனம்:**
பெரிய பிரச்சினையாக இருக்குமோ என நினைத்த காரியம் ஒன்று சுலபமாக முடிந்து விடலாம். முன்னோர் வழிபாடு, ஆலய வழிபாடுகளுக்காக கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம். மற்றவர்களை நம்பி ஒப்படைக்க முடியாத, நீங்களே செய்ய வேண்டிய காரியங்களால் அவதிகளுக்கு ஆள்படலாம். தம்பதியர் பாசம் மேலிடும்.

**கடகம்:**
சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். தந்தை வழியில் மனஸ்தாபம் வராமல் இருக்க, விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. குறைந்த செலவில் முடியும் என, நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாக செலவாகலாம். தொழில் ரீதியாக சிலருக்கு உதவி செய்யும் சூழ்நிலை உருவாகும். கணவன் மனைவி இடையே சச்சரவுகள் உண்டாகலாம்.

**சிங்கம்:**
உங்களின் செயற்பாடுகளைப் பார்த்து மற்றவர்கள் பொறாமைப்படலாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். சிலருக்காக வெளியிடங்களில் நீண்ட நேரம் காத்திருக்கலாம். சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள். பெண்கள் தொடர்பான வகையில் ஆதாயம், அனுகூலம் பெறலாம்.

**கன்னி:**
பலர் பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில் நீங்களும் கலந்து கொள்ளலாம். நண்பர்கள் சிலர் மீதுள்ள கோபத்தை மறைமுகமாகக் வெளிக்காட்டுவீர்கள். புதிய பொருள்கள் வாங்க திட்டம் போடலாம். வீட்டில் நடக்க உள்ள நல்ல நிகழ்ச்சிகளுக்காக ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும்.

**துலாம்:**
உறவினர் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். வாக்குவாதங்களைத் தவிர்த்து, கனிவாகப் பேசி காரியங்கள் சாதிக்க வேண்டும். பெற்ற உதவி ஒன்று நண்பருக்கு மனப்பூர்வமாக நன்றி சொல்வீர்கள். அடுக்கடுக்காக பல வேலைகளை திட்டமிட்டு செய்வீர்கள். சில வேலைகளில் மாற்றம் நேரும்.

**விருச்சிகம்:**
அயலாரிடம் வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். அரசியல்வாதிகள் நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். கடன் மிகுதிகள் வராமல் இழுத்தடிக்கலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம்.

**தனுசு:**
நடந்து முடிந்த சம்பவம் ஒன்றை நினைத்துப் பெருமைப்படுவீர்கள். நண்பர்கள் மூலம் புதிய சில விஷயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். சிரமப்பட்டுச் செய்த வேலை ஒன்றில் கணிசமான ஆதாயம் பெறலாம். உறவினர் ஒருவரின் வீட்டுக்கு பொருள்கள் வாங்கிக் கொண்டு செல்லலாம். நாள் முழுவதும் பரபரப்பாகச் செயற்படலாம்.

**மகரம்:**
மனதில் இனம் புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். குடும்ப உறுப்பினர்களிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். அதிக விலை கொடுக்க நேரிடும் என நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். மற்றவர்களின் சிறப்பான அனுபவம் ஒன்றை அறிந்து நீங்களும் பாடம் கற்றுக் கொள்வீர்கள்.

**கும்பம்:**
வீண் பிடிவாதங்களால் மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். பிள்ளைகளின், அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால் அவதிகளுக்கு ஆளாகலாம். எதிர்பாராமல் சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். கேலிப் பேச்சுக்களை எதிர்கொள்ளலாம்.

**மீனம்:**
எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். அதிக சிரமத்தைக் கொடுக்கும் என நினைத்த காரியம் ஒன்று எளிதாக முடியலாம். மனைவி வழி உறவுகளால் செலவுகள் ஏற்படலாம். நீண்ட நாளைய எண்ணங்கள் நிறைவேறலாம்.

# வட, கிழக்கு நீமன்...
# அரச கரும மொ...
# தமிழ்மொழிக்...
# அரசமைப்பில் வ...

**வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்துள் நீதிம... மொழியே என்பதும் தேவையேற்படின் தமிழ் மொழியுடன்... ஆங்கில மொழி உபயோகிக்கப்படலாம் என்பம் வெள்...**

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் மற்றும் இரு இயக்குநர் சபை அங்கத்தவர்களால் (மனுதாரர்கள்) யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டத்தை யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் 17.11.2010 அன்று கூட்டுவதைத் தடுத்து நிறுத்துமாறு கோரி வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் (பிரதிவாதிகள்) எதிராக 15.11.2010 இல் ஆணையீட்டு எழுத்தாணைக்கான விண்ணப்பம் ஆங்கில மொழியில் தாக்கல் செய்யப்பட்டது.

மேற்படி வழக்கு 30.11.2010 அன்று யாழ். மேல் நீதிமன்றத்தில் கூப்பிடப்பட்டபோது பிரதிவாதிகள் சார்பில் வட மாகாண சபை நிபுணத்துவ சட்ட ஆலோசகரும் முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதியுமான இ.த.விக்னராசா ஆஜராகி அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் 24ஆம் உறுப்புரை அரசியலமைப்பின் 16ஆவது திருத்தத்தின் தேவைப்பாட்டுக்கமைய வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களின் மொழியான தமிழ் மொழியில் மனுதாரர்கள் தமது மனுவைத் தாக்கல் செய்யாமையால் முதனிலையிலேயே மனுதாரர்களின் விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று முதனிலை சட்ட ஆட்சேபனை எழுப்பி வாதிட்டார்.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி சு. பரமராஜா 1990ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க மாகாணங்களின் மேல் நீதிமன்ற (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 8(1) இன் பிரகாரம், அரசியலமைப்பின் நான்காம் அத்தியாயத்தின் (மொழியுரிமைகள்) ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளன அல்லது உடனடியாக மீறப்படவுள்ளன என்பதற்கு முதற்தோற்றமளவிலான சான்று உள்ள தென தோன்றியமையால் அவ்விடயத்தை தீர்மானிக்கப்படுவதற்கென உயர் நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்தியிருந்தார்.

இலங்கை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு சமுகமளிக்குமாறு மனுதாரர்களுக்கும், பிரதிவாதிகளுக்கும், சட்டமா அதிபருக்கும் அறிவித்தல் அனுப்பியது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான நிமால் காமினி அமரதுங்க, சுரேஷ் சந்திரா, சத்தா ஹெட்டிகே ஆகியோரால் இந்த விடயம் தொடர்பான விசாரணை 27.06.2011 அன்று நடைபெற்றபோது பிரதிவாதிகள் சார்பில் வட மாகாண சபை நிபுணத்துவ சட்ட ஆலோசகர் இ.த.விக்னராசா ஆஜராகி பின்வருமாறு வாதுரைத்தார்.

இலங்கையில் நிலவிய சமூகங்களுக்கு இடையிலான முரண்பாடுகளைத் தீர்த்து வைக்கும் கருவியாக அதிகாரப் பரவலை நோக்கமாகக் கொண்டு 1987ஆம் ஆண்டில் அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்துடன் ஆரம்பிக்கப்பட்ட அர்த்தமுள்ள நடவடிக்கை 1988ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட 16ஆவது திருத்தத்துடன் பரிணாம வளர்ச்சி பெற்று யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வட மாகாண மேல் நீதிமன்றம் உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாகாண நீதிமன்றங்களின் நியாயாதிக்க எல்லைகள் பரந்து விரிவடைந்து செயற்படுவது அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வில் இலங்கை நீதித்துறை முன்உதாரணமாக மிளிர்வது போல அரசியலமைப்பின் அத்தியாயம் நாலில் பிரகடனப்படுத்தப்பட்ட மொழி உரிமைகள் அந்தஸ்து தொடர்பில் ஆராய்வது இன்றியமையாததும் மிகவும் பொருத்தமானதுமாகும்.

1972 ஆம் ஆண்டின் அரசியலமைப்பினுள் 1956 ஆம் ஆண்டின் அரச மொழிச் சட்டம் இணைக்கப்பட்டு சிங்கள மொழியானது அரச கரும மொழியாகவும் சட்டவாக்க மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. 1958ஆம் ஆண்டு தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் நிறைவேற்றப்பட்ட போதும் அது 1966ஆம் ஆண்டுவரை ஒழுங்கு விதிகள் எதுவும் இயற்றப்படாமல் செயற்படுத்தப்படவில்லை.

''தமிழ் பேசும் மாகாணங்களில் தமிழை சம அந்தஸ்துடைய அரச கரும மொழிக்கு ஈடான முறையில்'' இந்த ஒழுங்கு விதிகளாவன உருவாக்கும் விளைவை உடையனவாய்த் தமிழ் பேசும் மக்களால் ஏற்கத் தக்க விதத்திலும் அமைந்தன. இச் சட்டமும் ஒழுங்கு விதிகளும் அரசியலமைப்பின் பாகமாகக் கருதப்படாது ''கீழ்நிலை சட்டவாக்கமாகக் கருதப்பட வேண்டும்'' என்று கொள்ளப்படுவதுடன் அரசியலமைப்புக்குள் கூட்டிணைக்கப்பட்டன.

1959ஆம் ஆண்டு நீதிமன்ற அலுவல்கள் மொழிச் சட்டம் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட போதும், 1961 ஆம் ஆண்டிலேயே நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் நீதி அமைச்சருக்கு சிங்கள மொழியை வாதுரைக்கும், பதிவேட்டுக்கும் ஆங்கிலத்துக்குப் பதிலாக எந்தெந்த நீதிமன்றங்களில் உபயோகிக்கலாம் என்று தீர்மானிக்கும் தத்துவத்தை அளித்தது. தமிழ் மொழி உபயோகம் பற்றி எந்த வித குறிப்பும் கொடுக்கப்படவில்லை. இந்தச் சட்டம் அரசியலமைப்பினுள் சேர்த்து எழுதப்படவில்லையாயினும் பிரிவு 11 சிங்கள மொழியை எல்லா நீதிமன்றங்களினதும் நியாய சபைகளினதும் மொழியாக்கியது. எனினும் சட்டவாக்க மன்றத்துக்கு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்பாக எய்தும் வகையில் உறுதியளிக்கின்றது.

### அரசியலமைப்பு அந்தஸ்து

1978ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு



தமிழ் மொழி உரிமைகளுக்கு அத்தியாயம் நான்கு மூலம் அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கியது. அரசியலமைப்பு உறுப்புரை 19 சிங்களத்தையும் தமிழையும் ''தேசிய மொழிகள்'' என்ற அந்தஸ்துக்கு உயர்த்திய போதும் உறுப்புரை 18 சிங்களத்தை அரச கரும மொழியாக ஏற்கனவே இருந்த நிலையைப் பேணிப் பிரகடனப்படுத்தியது. உறுப்புரை 22 இலங்கை முழுவதும் அரச கரும மொழி, நிர்வாக மொழியாக இருக்க வேண்டும் என்றும் ஆயினும் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிலுள்ள பொது நிறுவனங்களில் பொதுப் பதிவேடுகள் பேணப்படுவதற்கும் சகல பரிமாறல்களுக்கும் தமிழ் மொழி நிர்வாக மொழியாக உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் தேவைப்படுத்தப்பட்டது.

முக்கியமாக உறுப்புரை 24 இலங்கை முழுவதும் அரச கரும மொழியான சிங்களம் நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்றும் ஆயினும் வட கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள முதனிலை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கும் நீதிமன்றங்களில் தமிழ் மொழி நீதிமன்ற மொழியாக இருக்க வேண்டும் என்பதுடன் பதிவேடுகள் பேணப்படுவதும் நடவடிக்கை முறைகளும் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும் என்றும் தேவைப்படுத்தியது. உறுப்புரை 25 அரசியலமைப்பின் நாலாம் அத்தியாயத்தில் வழங்கப்பட்டிருக்கும் மொழிப் பாவிப்புக்கு வேண்டிய போதிய வசதிகளை அரசு வழங்க வேண்டும் என தேவைப்படுத்தியுள்ளது.

### தமிழ்மொழியும் அரச கரும மொழிப் பிரகடனமும்

1987ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 13ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 18(2) தமிழ் மொழியும் அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தியதுடன் 18(4) மொழி உரிமைகளை உள்ளடக்கிய அரசியலமைப்பு அத்தியாயம் நாலின் ஏற்பாடுகளை அமுல்படுத்த நியதிச்சட்டத்தின் மூலம் நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் தேவைப்படுத்தியுள்ளது.

1988ஆம்...
வப்பட்ட 1...
21) இல...
நிவாக மெ...
வலு... வ...
லு உள்ள...
ணுதலுக்...
நிவாக மொ...
டு என்பது...
உயோகிக்...
தபட்டது.
பிரதான...
மூலம் உறு...
காமும் தமி...
இலங்கை...
எலா மா...
மொழியாக...
வடக்கு கிழ...
யோகிக்கப்...
நடவடிக்கை...
யிலேயே...
னப்படுத்த...
குறித்த...
சரணை...
நீதிமன்றத்...
வடிக்கை (...
லாத மொழி...
லாம் என்று...
யின் படி அ...
என்பது சம்...
பாட்டுக்கு...
நீதிமன்ற...
பட முடிய...
ஏனென...
உள்ளடக்கி...
வது ஒரு ச...
தோன்றின...
மேலோங்...
வ...
ஆகவே...
துள்ள நீதி...
என்பதும்...
கள மொழ...
கப்படலா...
கௌரவ...
அரச சட்...
அமைச்சர்...
நீதிமன்றத்...
மாக பிரக...
தொடர்பி...
நீதிமன்றத்...
பிரதிவ...
வாதுரைக்...
விக்னராச...
கடனும்,...
ஆவது தி...
ஆண்டுக்...
போது சட்...
-பண்டார...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிமன்றுகளில் மொழியாக யைக் கையாள ல் வரையறை

**1988ஆம் ஆண்டு அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 16ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 22(1) இலங்கை முழுவதும் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழியாகும் என்பதுடன் இலங்கை முழுவதிலும் வடகிழக்கு தவிர்ந்த எல்லா மாகாணங்களிலும் உள்ள பொது நிறுவனங்களில் பதிவேடுகளை பேணுதலும் சகல தொடர்பு பரிமாற்றங்களுக்கும் நிர்வாக மொழியாக சிங்களம் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும் என பிரகடனப்படுத்தப்பட்டது.**

**ந்துள்ள நீதிமன்றங்களின் மொழி தமிழ் மிழ் மொழியுடன் சிங்கள மொழி அல்லது என்பதும் வெள்ளிடைமலை.**

1988ஆம் ஆண்டு அரசியலமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 16ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 22(1) இலங்கை முழுவதும் சிங்களமும் தமிழும் நிர்வாக மொழியாகும் என்பதுடன் இலங்கை முழுவதிலு[illegible] வடகிழக்கு தவிர்ந்த எல்லா மாகாணங்களிலும் உள்ள பொது நிறுவனங்களில் பதிவேடுகளை பேணுதலுக்கும் சகல தொடர்பு பரிமாற்றங்களுக்கும் நிர்வாக மொழியாகச் சிங்களம் உபயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் உபயோகிக்கப்பட வேண்டும் என பிரகடனப்படுத்தப்பட்டது.

பிரதானமாக குறித்த 16ஆவது திருத்தத்தின் மூலம் உறுப்புரை 24(1) இலங்கை முழுவதும் சிங்களமும் தமிழும் நீதிமன்ற மொழியாகும் என்பதுடன் இலங்கை முழுவதிலும் வடக்கு கிழக்கு தவிர்ந்த எல்லா மாகாணங்களிலும் சிங்களமே நீதிமன்ற மொழியாக உபயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியே உபயோகிக்கப்பட வேண்டும் என்றும் பதிவேடுகளும் நடவடிக்கை முறைகளும் அந்த நீதிமன்ற மொழியிலேயே இருக்க வேண்டும் என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது.

குறித்த உறுப்புரை 24(1) புறவிதியின் படி அமைச்சரவை[illegible] அங்கீகாரத்துடன் நீதியமைச்சர் எந்தவொரு நீதிமன்றத்திலும் பதிவேடுகள் பேணப்படவும் நடவடிக்கை முறைகளுக்கும் அந்த நீதிமன்ற மொழியல்லாத மொழியிலும் இருக்க வேண்டும் என அறிவுறுத்தலாம் என்று பகருகின்றது. அதாவது குறித்த புறவிதியின் படி அந்த நீதிமன்ற மொழியல்லாத மொழியிலும் என்பது சம்பந்தப்பட்ட நீதிமன்ற மொழித் தேவைப்பாட்டுக்கு மேலதிகமாகவே அல்லாது சம்பந்தப்பட்ட நீதிமன்ற மொழிக்குப் பதிலாக என வியாக்கியானப்பட முடியாது.

ஏனெனில் உறுப்புரை 25எ மொழி உரிமைகளை உள்ளடக்கிய அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏதாவது ஒரு சட்ட ஏற்பாடுகளுக்கும் இடையே முரண்பாடு தோன்றினால் இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளே மேலோங்கும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

**வடக்கு, கிழக்கில் நீதிமன்ற மொழி தமிழ்மொழியே**

ஆகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களின் மொழி தமிழ் மொழியே என்பதும் தேவையேற்படின் தமிழ் மொழியுடன் சிங்கள மொழி அல்லது ஆங்கில மொழி உபயோகிக்கப்படலாம் என்பதும் வெள்ளிடைமலை.

கௌரவ சட்டமா அதிபர் சார்பில் வாதுரை செய்த அரச சட்டத்தரணி, முன்னர் சேவையாற்றிய நீதி அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகம் அவர்களால் நீதிமன்றத்தில் ஆங்கில மொழிப் பிரயோகம் சம்பந்தமாக பிரகடனப்படுத்திய வர்த்தமானியையும் அது தொடர்பில் தீர்க்கப்பட்ட வழக்கு தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தின் கவனத்துக்குச் சமர்ப்பித்தார்.

பிரதிவாதிகள் சார்பில் அரச சட்டத்தரணியின் வாதுரைக்குப் பதிலளித்த முன்னாள் நீதிபதியான விக்னராசா அவர்கள் குறித்த வர்த்தமானியில் பிரகடனமும், நீதிமன்றத் தீர்ப்பும் அரசியலமைப்பின் 16 ஆவது திருத்தம் நடைமுறைக்கு வந்த 1988ஆம் ஆண்டுக்கு முற்பட்டதென்றும் ஆகவே அவை தற்போது சட்ட வலுவற்றது என்றும் நீதியரசர் சிராணி பண்டாரநாயகா (தற்போதைய பிரதம நீதியரசர்) மத்தும பண்டாரா எதிர் கமநல சேவைகள் உதவி ஆணையாளரும் ஏனையோரும் (2003) 2 ஸ்ரீலங்கா சட்ட அறிக்கை பக்கம் 80 என்ற வழக்கில் சட்டத்தில் வெவ்வேறு பொருள் கொடுக்கக் கூடிய சூழ்நிலை தோன்றும் போது குறித்த சட்டத்தின் நோக்கத்துக்கு ஏற்ப வியாக்கியானம் செய்யப்பட வேண்டுமென்றும் -

பாதிக்கப்பட்ட கட்சிக்காரருக்கு கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் பதிலாக மாகாண மேல் நீதிமன்றத்திலேயே நிவாரணத்தைக் கோரும் உரிமையை வழங்குவதே அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் நோக்கமாகும். ஆகையால் அரசியலமைப்பு உறுப்புரை 154 P (4) இன் கீழ் எழுத்தாணை வழங்கும் நியாயாதிக்கத்தை மேல் நீதிமன்றம் கொண்டுள்ளது என வழங்கிய தீர்ப்பின் மூலம் மாகாணத்திலுள்ள மக்கள் நீதித்துறை அதிகாரத்தை கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்குப் பதிலாக மாகாணத்திலேயுள்ள நீதிமன்றத்திலேயே பெறமுடியும் என்பதை அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் உறுதிப்படுத்தியுள்ளதை நீதியரசர் சிராணி பண்டாரநாயகா வெளிப்படுத்தியுள்ளார் என்றும் -

முகமது இசாக் எதிர் மோரே (1996) 1 ஸ்ரீலங்கா சட்ட அறிக்கை பக்கம் 145 என்ற வழக்கில், பிரச்சினை உருவாகியதும், சகல கட்சிக்காரர் வசிக்கும் மாகாணத்துக்கு வெளியே உள்ள கொழும்பிலுள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நிவாரணம் கோருவதும், சம்பந்தப்பட்ட கட்சிக்காரரின் தாய்மொழி தமிழ் மொழியாக இருக்கும் போது ஒழுக்காற்று விசாரணை ஆங்கில மொழியில் நடத்தப்பட்டமை கட்சிக்காரரின் உளநிலையை பாதித்திருக்கும் செயற்பாடு என்பதை மேன்முறையீட்டு நீதிமன்றம் வலியுறுத்தியமையும் சுட்டிக்காட்டி;

பல்லின மக்கள் வாழும் கொழும்பு மாநகரிலுள்ள உயர்நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆங்கில மொழியில் நடவடிக்கை முறைகளை கையாளுவது போல நாட்டின் மாகாண நீதிமன்றங்களில் மாகாண மக்களின் மொழியுரிமையை அரசியலமைப்பு உத்தரவாதப்படுத்தியமைக்கமைவாக உத்தியோக மொழியே நீதிமன்ற மொழியாகக் கையாளப்பட வேண்டுமென்றும் தேவை ஏற்படின் உறுப்புரை 24(4) இன் தேவைப்பாடு பூர்த்தி செய்யப்படின் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் ஆங்கிலமொழி பெயர்ப்புடன் மூல ஆவணங்களும், பதிவேடுகளும் உத்தியோக மொழியான தமிழ் மொழியில் இருக்க வேண்டுமென வியாக்கியானம் செய்யப்பட்டு யாழ். மேல் நீதிமன்றத்துக்கு கட்டளை வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி வாதுரைத்தார்.

ஆகவே, அரசியலமைப்பின் உறுப்புரை நான்காம் அத்தியாயத்தில் உறுதிப்படுத்தியிருக்கும் மொழி உரிமை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள் உணர்வுகளின் நுட்பத்திலிருந்தும் உளதாம் உண்மைநிலைகளின் உன்னிப்பான மதிப்பீட்டிலிருந்தும் எழுந்துள்ள வலுவான அரச கரும மொழி உரித்து அந்தஸ்தைப் பேணிக்காத்தல், மேம்படுத்தல், உறுதிப்படுத்தல் என்பன தொடர்பில் ஆக்கமுறையான கடமையொன்று பாதிக்கப்பட்ட சமூகத்தில் எமது தாய்த் திரு நாட்டின் ஐக்கியம், இறைமை, பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றுக்குப் பங்களிப்புச் செய்யும் அவசியத்தை சகல பிரஜைகளுக்கும் உணர்த்தும் வகையில் உயர்நீதிமன்றம் வியாக்கியானம் செய்ய வேண்டும் என்று இ.த.விக்னராசா வாதுரைத்தார்.

கொழும்பு உயர்நீதிமன்றம் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் அரச கரும மொழியான தமிழ்மொழி உரித்து பற்றிய வியாக்கியான கட்டளையை விரைவாக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அனுப்பிவைப்பதற்கு வெளிப்படுத்தவது.

**- தமிழ் ஆர்வலன் -**

## நாம் கடவுளைப் படைத்தோமா? கடவுள் நம்மைப் படைத்தாரா?



உன்னிடமிருந்து உன் கடவுளர் வேறுபட்டவர்களாக இருக்க முடியாது. யார் அவர்களைப் படைத்து? அவர்களுக்கு வடிவம் வனப்பும் கொடுத்தது யார்? மனிதன் தானே. கடவுளரைப் படைக்கிறான். சிலைகளாக வடிக்கிறான். தன்னைப் போலக் கண்களோடு மூக்கோடு- மனத்தோடும் தான் படைக்கின்றான்.

பழைய ஏற்பாட்டில் கடவுள் ''நான் வெகு பொறாமைக்காரன்'' என்கிறான். பொறாமைக்காரக் கடவுளைப் படைத்து விட்டிருப்பவர் யாராக இருக்கமுடியும். கடவுள் பொறாமை கொண்டவராக இருக்க முடியாது. அப்படிப் பொறாமைக்காரராக அவர் இருக்கலாம் என்றால் பொறாமை என்பது எப்படித் தவறாக முடியும்? கடவுளே பொறாமைப்படலாம் என்றால் நீ பொறாமைப்படுவதில் என்ன தவறியிருக்க முடியும். பின் பொறாமை கூட ஒரு தெய்வீகம்தான்.

பழைய ஏற்பாட்டில் கடவுள் ''நான் மகா கோபக்காரன் என்னுடைய நெறியைப் பின்பற்றாவிட்டால் உன்னை அழித்துவிடுவேன்; நரகத்துக்கு அனுப்பிவிடுவேன். நான் பொறாமைக்காரன் என்பதால் நீ யாரையும் வணங்கக்கூடாது. என்னால் அதைப் பொறுத்துக்கொள்ள முடியாது'' என்கிறார்.

யார் இப்படியொரு கடவுளைப் படைத்திருக்க முடியும்? எமது பொறாமை, நமது கோபமே இப்படியொரு கடவுளைப் படைத்திருக்கிறது.

ஒரு யூதர் வாழ்வில் பல சிரமங்களைச் சந்தித்த பின் காட்டுக்குப் போய் குரலை உயர்த்தி பிரார்த்திக்கிறார். ''ஓ கடவுளே! கண்களில் நீர்த் திரையிடத் தொடர்கிறார். நான் என்றைக்குமே நல்லதொரு யூதனாக இருந்திருக்கவில்லையா? எந்தப் பாகுபாடும் இன்றித் தானதருமங்கள் செய்யவில்லையா? என்னுடைய குடும்பத்தைக் கௌரவமாக வைத் திருக்கவில்லையா? குடித்தாலும் வெஞ்சினம் உரைத்ததில்லை; பெண்களுக்குப் பின்னால் அலைந்தது இல்லை. பின்னர் ஏன் என்னை இப்படி நடத்துகிறாய்? ஏன்'' கூவுகிறார்.

திடீரென்று ஒரு கரியமேகம் தலைக்குமேல் தோன்றி இடிமுழக்கம் போல ஒரு குரல் கேட்கிறது. ''நீ என்னைக் கேவலப்படுத்துகிறாய்! கடவுள் இப்படிப் பேசுவாரா? கடவுள் உன்னிடமிருந்து மாறுபட்டவராக நிச்சயம் இருக்க முடியாது. நீயே கற்பித்துக் கொண்டவராகத்தான் இருக்கிறார். உன் நிழல் உன் எதிரொலி. வேறு யாரும் அல்ல அவர். அதனால்தான் இத்தனை கடவுளர்கள் இருக்கிறார்கள்.

இந்துக்கள் கடவுளைப் பற்றி ஒரு குறிப்பிட்ட எண்ணம் வைத்திருக்கிறார்கள். அதுவே இந்துக்களின் கடவுளர்கிறது. இந்துவின் மனவோட்டத்தைப் பிரதிபலிக்கிறது.

இந்து சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். என்ன மாதிரியான கடவுளரையெல்லாம் இந்துக்கள் கற்பித்து வைத்திருக்கிறார்கள் தெரியுமா?

காமம் வழியும் கடவுளர். கள்ள உறவுகள், கடவுளரின் உலகில் சர்வ சாதாரணம். மனிதர்களுடைய உலகத்தையும் விட்டு வைக்கவில்லை.

இந்துக் கடவுள்கள் விண்ணுலகத்தைவிட்டு பூவுலகுக்கு வந்து மிகப்பெரிய முனிவர்களின் மனைவியரைக்கூட விட்டு வைக்கவில்லை. தங்களுக்கு இருக்கும் சக்தியைக் கொண்டு அந்த மனைவியரின் கணவர் வடிவிலேயே தோன்றியிருக்கிறார்கள். பாவம் அந்தப் பேதைப் பெண்களுக்கு முகமூடிக்குப்பின்னால் இருப்பது யாரென்பது தெரிந்திருக்க வழியில்லை.

யார் இந்தக் கடவுளர்களையெல்லாம் படைத்திருப்பார்கள்? மனதில் காம வக்கிரங்கள் படர்ந்திருப்பவர்கள்தான் படைத்திருப்பார்கள்.

பிற மதங்களில் இருக்கும் பிறகடவுளர்களும் அப்படித்தான். அதனால்தான் புத்தர் கடவுளைப் பற்றிப் பேசவில்லை. தூக்கத்தில் இருப்பவனிடம் கடவுளரைப் பற்றிப் பேசிப் பயன் என்ன? தூங்கிக் கொண்டே கனவு காண்பவர்கள் கடவுளரைப் படைத்துக் கொண்டார்கள். அவர்களது கனவுகள், கடவுள்கள் எல்லாமே பொய்தான்.

அதனால்தான் புத்தர் கடவுளைப் பற்றிய கவலை எதுவும் இல்லாமல் இருந்திருக்கிறார். அவருடைய முழுக் கவனமும் பிறரை விழிப்படைய வைப்பதிலேயே இருந்திருக்கிறது.

மதம், கடவுள், நாத்திகம், பழைமை, எதிர்ப்பு, புராணங்கள் சரியா? துணிவாகச் சிந்தியுங்கள். உண்மையை உணர்த்தவே மெய்ஞ்ஞானம்.

சுகி.சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **கந்தையா ரஞ்சிதம்மா**



தோற்றம்: 11 . 10 . 1928

மறைவு: 12 . 07 . 2010

திதி: 02.07.2011

அன்பின் உறைவிடமே
பண்பின் இலக்கணமே
ஆண்டு ஒன்றாகி விடினும்
ஆறாதம்மா எம் துயர்.

83/15, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## VACANCY

### POST OF WORKS ENGINEER [CIVIL] GRADE III

Applications are invited by me up to 1st August 2011, from suitably qualified persons for the post of Works Engineer [Civil].

Applications should be on prescribed forms issued by the University. Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments [Non – Academic] of this University on a payment of Rs. 100/- for each application form at the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's counter of this University. Those who wish to obtain the forms and details by post are requested to send a Money Order / Postal Order to the value of Rs. 100/- drawn in favour of the Bursar of this University together with self addressed Rs. 5/- Stamped envelope of 23X10 c.m in size.

The envelope containing duly filled application form must bear "Post of Works Engineer" on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 1st August 2011

**QUALIFICATIONS:**

a. Should possess a B.Sc Engineering Degree specializing in Civil Engineering from a recognized University/HEI

OR

b. Should possess a National Diploma in Technology specializing in Civil Engineering or equivalent, with at least seven (07) years of experience in Civil Engineering works in a recognized establishment.

**Note:** The in-plant training period will not be counted for the period of experience.

**Method of Recruitment :** Selection by a structured interview. Applicants who have scored 40% marks or above at the interview are eligible to be considered for selection.

**Salary Scale:** U-EX1 (IV) Rs. 25,145-3X585-26,900 (EB) 27,485-31X585- 45,620 p.m.

**AGE:** Not more than 45 years. This age limit will not be applicable to those candidates who are employed in the public sector organization.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants Commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits
5. Free medical care

Applicants from Government Departments, State Corporations and Statutory Bodies should apply through the Heads of respective Institutions. Advance copies of applications may be sent in the first instance. However, no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected.

**REGISTRAR.**
University of Jaffna.
30.06.2011 (சி/1474)

## கோழிகள் விற்பனைக்கு

பிறிமா சிவப்பு முட்டையிட ஆரம்பித்துள்ள கோழிகளும், தூக்கி வைக்கக் கூடிய கம்பிக் கூடுகளும் விற்பனைக்குண்டு.

தொடர்பு:0776180675

## வீடு வாடகைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு அருகில், நல்லூர் கோயிலுக்கு அருகில் 4 அறைகள் உடைய முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட வீடு வாகனத் தரிப்பிடத்துடன் வாடகைக்கு உண்டு. நிறுவனங் களுக்கு முன்னுரிமை.

தொடர்பு: 0770770727, 0212255227

## திருமண சேவை

நாட்டுநிலைமை காரணமாக லண்டனுக்கு இடமாறிய எமது திருமண சேவை மீண்டும் எம் மண்ணில் உதயமாகிறது.

எம்மிடம் பல உள் நாட்டு டாக்டர், எஞ்சினியர், பட்டதாரிகள் பல அரச உத்தியோகத்தர் களின் (ஆண், பெண்) குறிப்புக்களும் பல வெளிநாட்டு PR உள்ள (ஆண், பெண்) குறிப்புக்களும் கைவசம் உண்டு. அத்துடன் ஏற்கனவே எம்மிடம் பதிந்து இது வரை திரு மணம் நடை பெறாதவர்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

யாழ்.இந்து கௌரவ குடும்ப 1978 இல் பிறந்த விசாகம் 2 ஆம் பாதம் கிரகபாவம் 30, உயரம் 5 ' 11 "கொம்பியூட்டர் என்ஜினியர் (கனடா வாழ் குடும்பம்)மணமகனுக்கு ஓரளவு படித்த அழகான மணமகள் (ஆதரவற்ற) தேவை. (மணமகன் தற்போது இலங்கையில் தங்கியுள்ளார்)

தொடர்பு: VIJAY 0771307185,0778501013
VANI INTERNATIONAL MARRIAGE BUREAU
GOVT. RED .VE / IND/33

## வீட்டுத்தோட்ட வேலையாள்/ காவலாளி (பகல்) தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் மேற் குறிப்பிட்ட வேலைக்கு 50 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் தேவை.

சம்பளம் பேசித் தீர்க்கலாம்.

தொடர்பு:- 077-1965666 (5373,19-25)

## மணமகள் தேவை

இந்து குடும்பத்தைச் சேர்ந்த தனியார் துறையில் நல்ல வருமானம் உடைய 1962,1965இல் பிறந்தவர்களுக்கு மறு மணத்துக்கு மணமகள்கள் தேவை. .

தொடர்பு:- 0784671111 (2169)

## வேலை வாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கும் ராம் food city க்கு கீழ்க் காணும் பணியாளர் தேவை.

1.பண வசூலிப்பாளர் (cash collector)

2. விநியோக உதவியாளர்

04/07/2011 அன்று மு.ப 11.00 மணிக்கு கீழ்க்காணும் ஆவணங் களுடன் சமூகம் தரவும்.

1. பிறப்பத்தாட்சிப் பத்திரம்.
2. கிராம சேவையாளரின் சிபார்சுக் கடிதம்.
3. சுயவிவரம்.
4. தேசிய அடையாள அட்டைப்பிரதி

(c/1460)

## விற்பனைக்கு

றோஸ் - 100 /=
மொசந்தாஸ், சைப்ரஸ், செவ்வரத்தை, மினி எக்சோறா } 60/=

இன்னும் பல இன மீன்கள், கூடுகள் குருவிகள் பூச்செடிகள்.

யாழ். அக்சுவரியம்,
941, K.K.S வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (5367)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நல்லூர் பாம் செனிரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

CIC இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தது 450/- வியாபாரிக்கு விசேட கழிவு வழங்கப்படும் . நீர்வேலி வடக்கு மாதா கோயில் முன்பு .

தொடர்பு: 0776331914 (5318) (23-25-45)

## காணி விற்பனைக்கு

செம்மணி வீதி, மாவட்ட ஆயுள்வேத வைத்திய சாலைக்கு அண்மையில் 100 மீற்றர் தூரத்தில் செம்மணி வீதி முகப்பாகக் கொண்ட [illegible] 172 பரப்புள்ள காணி [illegible]

தொடர்பு: 075 0120775 071 1276747

(சி/1456) (23-25451)

## கண்ணீர் அஞ்சலி



எமது வைத்தியசாலையில் பணிபுரியும்
திருமதி இந்திரபவன் வரதலக்சுமி
அவர்களின் அன்புத் தாய்
**வள்ளிப்பிள்ளை தம்பிராசா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தி னருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின் றோம்.

அரசினர் ஆயுள்வேத வைத்தியசாலை,
கைதடி. (5358)

பணியாளர் நலன்புரிச் சங்கம்.

## அறிவித்தல்

### வேலணை பிரதேச சபை

### நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர் திருவிழா – 2011

(1) நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய உயர் திருவிழா வானது 01.07.2011 தொடங்கி 16.07.2011 வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இக் காலப்பகுதியில் ஆலய வீதியிலும் வெளிச் சுற்றாடலிலும் புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதி களிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியா பார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் தொடர்புகொண்டு வியாபார அனுமதிப் பத்திரம் பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும்.

(2) உயர் திருவிழா காலத்தில் நயினாதீவில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் பின்னர் பி.ப.4 மணி முதல் இரவு 11 மணி வரையும் பிரதான வீதியிலும் யாத்திரிகர் மடத்துக்கு அப்பாலும், ஆலயத்துக்குத் தெற்கு மதிலுக்கு அருகில் உள்ள வீதியிலும் மேற்கு மதில் எல்லைக்குள்ளும், துவிச் சக்கர வண்டிகள், மோட்டார் வண்டிகள், ஆட்டோக்கள் உட் செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

(3) குறிகாட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலு வலகத்தினால் வாகனத் தரிப்பிட வசதிகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், தற்காலிக இளைப்பாற்று மண்டப வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சபையின் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அலுவலகர்களினால் பணிக்கப்படும் ஒழுங்கு முறைகளைப் பேணுமாறு யாத்திரிகர் கேட்டுக்கொள்ளப்படு கின்றனர்.

(4) வாகனத் தரிப்பிடங்களில் உரிய தரிப்பிடக் கட்டணங் களைச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன உரிமை யாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கௌரத்தினம் தவராசா
செயலாளர், பிரதேசசபை,
வேலணை.

(சி/1478) (39)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### பாதுகாப்புச் சேவை வழங்குவதற்கான விலைமனு கோரல்

யாழ். பல்கலைக்கழகத்தின் பின்வரும் இடங்களுக்கு ஆறு மாத காலத்துக்கு பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கான அரக்கிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

01. ஊடக வளங்கள் பயிற்சி நிலையம்
02. யாழ்ப்பாணத்தில் தற்போது இயங்கி வருகின்ற விவசாய பீடத்தின் பின்வரும் துறைகள்
    I. விவசாய உயிரியல், பயிரியல் துறைகள்.
    II. விவசாய விலங்கியல் துறை
    III. விவசாய இரசாயனவியல் துறை
    IV. விவசாய பொருளியல் துறை
03. இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு (AHS)
04. பட்டப்படிப்புகள் பீடம்
05. அறிவியல் நகர், கிளிநொச்சியில் விவசாய பீடம் அமைய உள்ள இடம்

பொதுசன பாதுகாப்புச் சட்டம் ஒழுங்குகள் அமைச்சில் பதிவு செய்துள்ள குறைந்தது மூன்று வருடங்கள் அனுபவ முள்ள பாதுகாப்புச் சேவை வழங்குநர்கள் மனுக்களைச் சமர்ப் பிக்கலாம். விண்ணப்பப்படிவம் மற்றும் தொடர்புடைய விலை மனு ஆவணங்களையும் மேலதிக விவரங்களையும் 20.07.2011 மதியம் 12 மணிவரை சிரேஷ்ட உதவிப்பதிவாளர் நிர்வாகக் கிளை அலுவல கத்தில் அலுவலக நாள்களில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐநூறு ரூபாவை நிதிக்கிளையில் செலுத்திய பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவை வழங்குவதற் கான விலை மனு" என அடையாள மிடப் பட்டு 20.07.2011 பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடி யதாக பதிவுத்தபாலில் பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், த.பெ.இல. 57, யாழ்ப் பாணம் என்ற முகவரிக்கு அனுப் பப்படலாம் அல்லது பதிவாளர் அலவலகத்தில் உள்ள விலை மனுப்பெட்டியில் இடப்படலாம்.

விலை மனுக்கள் 20.07.2011 அன்று பி.ப. 2.30 மணிக்குப் பரிசீலிக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் ஆவணங்கள் பரிசீலிக்கப்படும் இடமான சபா மண்டபத்துக்கு சமுகமளிக்கலாம். சம்பளச் சபையினால் அங்கி கரிக்கப்பட்ட சம்பளத்துக்கு குறையாத சம்பளம் பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கப்படுமென்ற உத்தரவாதம் வழங்குநரால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு வழங்கப்படவேண்டும். பல் கலைக்கழக கொள்வனவுச் சபையின் முடிவே இறுதி யானது.

பதிவாளர்
30.06.2011

(சி/1442) (22-23-45)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பைன் மார்ற்றன்

மார்ற்றன் வகையில் பைன் மார்ற்றன்களே பெரியவை. இவை காடுகளிலும் மரங்களிலும் வசிப்பதையே மிகவும் விரும்புகின்றன.

அத்துடன் வேட்டையாடுவதிலும் நிபுணத்துவம் வாய்ந்தவை. சில வேளைகளில் தம்மைவிடப் பெரிய விலங்குகளையும் இவை தாக்கிக் கொன்று விடும் ஆற்றல் கொண்டவை. அநேகமாக சுண்டெலிகள், எலிகள் என்பன இவற்றின் உணவாகின்றன.

பகல் வேளைகளிலேயே இவை தமது உணவைத் தேடி வேட் டையாடச் செல்வதோடு இரவு வேளைகளில் உட்குழிவுள்ள மரங் களில் அமைந்துள்ள தமது கூடுகளில் உறங்குகின்றன. பைன் மார்ற் ரன்கள் மிருதுவான கடும் மண்நிறமுடைய உரோமத்தால் மூடப்பட் டுள்ளன.

இவற்றின் குட்டிகள் கண்களை மூடிய நிலையிலேயே பிறக்கின்றன. இதனால் தாயின் பாதுகாப்பு இவற்றிற்கு அவசிய மாகத் தேவைப்படுகின்றது.

இவை வசிக்கும் கூடுகளில் ஏதாவது இடையூறு தோன்றுமாயின் தாய் விலங்கு தனது குட்டிகளை அவற்றின் பிடரியில் கவ்வியபடி புதிய இடத் துக்குக் கொண்டு செல்லும்.

தாயானது தனது குட்டிகளுக்கு ஒரு மாதம் வரை பால் ஊட்டும். அதன் பின் எவ்வாறு வேட்டையாடுவது என்பது தொடர்பாகத் தனது குட்டிகளுக்குக் கற்பிக்கின்றது.

நான்கு மாதங்கள் நிறைந்த பின் குட்டிகளும் நல்ல முறையில் வேட்டையாடக் கூடிய நிலையை அடைந்துவிடுகின்றன.



-ராஜன்

# ஹெட்டல் ஸ்டேவ் தேவாலயம் (Heddal stave church)



நோர்வே நாட்டுக் கட்டடக் கலையில் மரத்துக்கு மிக முக்கிய இடம் இருக்கிறது. இதன் அடிப்படையில் டெலிமார்க் நகரிலுள்ள ஹெட்டல்ஸ்டேவ் தேவாலயம் மரத்தில் வடித்தெடுக்கப்பட்டது. நூற்றாண்டு கண்ட மேற்படி மரத்தேவாலயம் இன்றுவரை உறுதியாகக் காணப்படுகின்றது.

ஜிந்து,
குமரக்கோட்டம்.

# பொது அறிவுகள்...

* வாழ்நாளில் குரைக்காத நாய் எது?
  டிங்கோ
* பறக்கும் போது தூங்கும் பறவை எது?
  ஆல்பட்ராஸ்
* கஸ்தூரி வாசனைத்திரவியம் எடுக்கப் பயன்படும் விலங்கு எது?
  கஸ்தூரிமான்
* குழி தோண்டி முட்டையிடும் பூச்சி எது?
  வெட்டுக்கிளி

ப.கவின்சா,
தரம் 10, மு/பாரதி வித்தியாலயம்

# சிட்டுக்குருவி




அழகிய பறவை சிட்டுக்குருவி
என் மனதைக் கவர்ந்த சிட்டுக்குருவி
சின்னஞ் சிறு சிட்டுக் குருவி
கீச்சிடும் சிட்டுக் குருவி

பூவை நோக்கி ஓடி வரும்
எம்மைப் போல பாடிவரும்
விமானம் போல பறந்துவரும்
எம் நெஞ்சை மயக்கும் சிட்டுக்குருவி

வண்ண நிறங்களில் பறந்துவரும்
பூவைக் கண்டு ஓடிவரும் - நாம்
தாய் இல்லாமல் தவிப்பது போல்
அது பூவில்லாமல் தவித்திடுமே!

ச.யதுகுலன்,
தரம் 7 சி, யாழ்.இந்துக் கல்லூரி.

# பட்டாணிக் கடலை



ஒரு நாள் மூதாட்டி ஒருவர் மண் அடுப்பில் வைத்து சமையல் செய்து கொண்டிருந்தார். அவர் அடுப்பில் வைத்திருந்த தண்ணீர் கொதித்ததால் அதற்குள் சில காய்கறிகளைப் போட்டார்.

அப்போது பட்டாணி அந்தச் சட்டியிலிருந்து வெளியே குதித்து வந்து, ''என்னை வேக வைக்க வேண்டாம். என்னை சமைக்க வேண்டாம்'' என்று கத்தியது.

''மூதாட்டியோ நீ மரியாதையாகப் பழையபடி சட்டிக்குள் போகிறாயா? இல்லை உன்னை நசுக்கட்டுமா?'' என்றாள்.

மூதாட்டியின் உத்தரவை பட்டாணி கேட்கவில்லை. அங்கிருந்து வேகமாக ஓட்டம் பிடித்தது. அப்போது 'நில் நில் ஓடாதே உன்னுடன் நானும் வருகிறேன்' என்று இன்னொரு குரல் கேட்டது. பட்டாணி திரும்பிப் பார்த்தது, அப்படிக் கத்திக் கொண்டு சொன்னது எரிந்து கொண்டிருந்த ஒரு துண்டு நிலக்கரி.

''அடுப்புக்குள் இருந்தால் எனக்கு மூச்சு முட்டுகிறது. அதனால் நானும் உன்னுடன் வெளியுலகைப் பார்க்க வருகிறேன்'' என்றது நிலக்கரி.

''என்ன வெளியுலகைப் பார்க்கப் போகிறாயா? அப்படியென்றால் என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்'' என்றது கீழே கிடந்த வைக்கோல் ஒன்று.

''சரி, வா போகலாம்'' என்று நிலக்கரியும் பட்டாணியும் வைக்கோலைத் தங்களுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டன.

மூன்றும் சேர்ந்து நடந்து சென்று கொண்டிருந்தபோது வீதியின் ஓரிடத்தில் தண்ணீர் ஓடிக் கொண்டிருந்தது.

''இனி நாம் தொடர்ந்து செல்ல முடியாது. அதனால் நான் அடுப்புக்கே போய் விடுகிறேன்'' என்றது நிலக்கரி.

''அப்படியென்றால் நானும் அடுப்பில் எரியும் சட்டிக்குள் போய் விடுவேன்'' என்றது பட்டாணி.

''நண்பர்களே சோர்ந்து விடாதீர்கள். நான் இந்தத் தண்ணீரின் மேல் பாலமாக இருக்கிறேன். நீங்கள் இருவரும் என்மீது ஏறி நடந்து மறுபக்கம் போய்விடுங்கள்'' என்று நம்பிக்கையூட்டியது வைக்கோல்.

முதலில் பட்டாணி, வைக்கோல் மீது ஏறி தண்ணீரின் மறுபக்கத்தை அடைந்தது.

ஆனால் எரிந்து கொண்டிருந்த நிலக்கரி, வைக்கோல் மீது ஏறியதும் அது தீப்பிடித்துக் கொண்டது. இதனால் இரண்டும் சேர்ந்து தண்ணீருக்குள் விழுந்தன.

''ஷ்..ஷ்..ஷ்...''தன் மீது எரிந்து கொண்டிருந்த நெருப்பு அணைந்ததும் நிலக்கரி பெருமூச்சு விட்டது.

அந்த வினோத சத்தத்தைக் கேட்ட பட்டாணி சிரிக்க ஆரம்பித்தது.

தொடர்ந்து அது பலமாகச் சிரித்ததால் வெடித்துச் சிதறி அதிலிருந்த ஒவ்வொரு பட்டாணியும் ஓட ஆரம்பித்தன.

அந்தப் பட்டாணிகள் அனைத்தும் ஒரு தையல்கடையை நோக்கிச் சென்றன. தையல்காரரிடம் தயவு செய்து எங்களை ஒன்றாக வைத்துத் தைத்து விடுங்கள் என்று கேட்டுக் கொண்டன.

தையல்காரரும் பட்டாணிகளின் வேண்டுகோளை ஏற்று ஒரு தடித்த நூலினால் தைத்து விட்டார்.

இதனால் தான் அன்று முதல் பட்டாணியை நாம் உரிப்பதற்கு முன் அதன் மேல் தோலில் நூல் போல் உள்ள பகுதியை உரிக்கவேண்டியிருக்கிறது.

# ஆரோக்கியம்...



[illegible] பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அந்த நிகழ்வில் மாணவர்கள் உடற்பயிற்சியில் ஈடுபடுகின்றனர். (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களைக் கூறுபோட நினைப்போருக்கு தகுந்த பதிலடி கொடுக்க வேண்டும்

## திகாம்பரம்

கொழும்பு, ஜூலை 2

மலையகத் தமிழ் மக்களின் அரசியல் பலத்தையும் தொழிலாளர்களின் தொழிற் சங்க பலத்தையும் கூறுபோடுகின்றவர் களை இனங்கண்டு அவர்களுக்கு எதி ராக மக்கள் செயற்பட வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பி.திகாம்பரம் தெரிவித்தார்.

ஹற்றனில் நடைபெற்ற தொழிலாளர் தேசிய சங்கத்தின் முக்கிய உறுப்பி னர்கள் கலந்துகொண்ட கூட்டமொன் றில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

தேர்தல் காலங்களிலும், தொழிற் சங் கங்களுக்கு அங்கத்தவர்களை இணைத் துக் கொள்கின்ற காலங்களிலும் மலை யகப் பகுதிகளுக்கு திடீரெனச் செல்கின்ற வர்கள் இந்த மக்களை ஏமாற்றி வரு கின்றனர்.

ஆனால், எம்மைப் பொறுத்தவரை யில் மலையகத் தமிழ் மக்களின் வாழ் வியலை அனுபவரீதியாகப் புரிந்து செயற் படுவதால் இந்த மக்களின் நன்மைக்காக அர்ப்பணித்துச் செயற்பட்டு வருகின் றோம். தொழிலாளர் தேசிய சங்கம் இன்று மலையகத்தில் மக்கள் செல்வாக் குள்ள அரசியல் மற்றும் தொழிற் சங்க அமைப்பாக வளர்ந்துள்ளது.

மக்களிடம் நயவஞ்சகமாக வாக்கு களைப் பெற்றுக்கொண்டு மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றவர்களை இனங்கண்டு அவர்களை ஓரங்கட்டு வதற்கு மக்கள் தயாராக வேண்டும்.

அற்பசொற்ப சலுகைகளைக் கொடுத்து தொழிற்சங்கங்களுக்கு அங்கத்துவம் சேர்ப்பதில் எனக்கு உடன்பாடு கிடை யாது. நாம் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற தொழில்ரீதியான பிரச்சினைகளுக்கு உரிய வகையில் தீர்வைப்பெற்றுக் கொடுக்கின்றோம்.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விடயத்தில் போராட்டங்களை முன்னெ டுத்து அழுத்தங்களைக் கொடுத்து வரு கின்றோம். எமது அங்கத்தவர்கள் எதிர் நோக்குகின்ற பொலிஸ் பிரச்சினைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகளைத் தீர்த்து வருகின்றோம். எமக்கு கிடைக் கின்ற நிதியுதவிகள் மூலமாக அபிவி ருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின் றோம்.

இவ்வாறானதொரு நிலையில் அற்ப சொற்ப சலுகைகளைக் கொடுத்து அரசியல்தொழிற்சங்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான தேவைகள் எமக்கு ஏற்படவில்லை. மலையகத்தில் அரசியல் தொழிற்சங்க ரீதியான போட் டிகள் மலையக அமைப்புகளிடத்தில் இருந்தாலும் அவை மக்கள் நலன் சார்ந் ததாக இருக்கின்றன.

எனினும் இவ்வாறான அமைப்பு களைத் தவிர்ந்த எமது சமூகத்துடன் எந்தவிதமான தொடர்புகளும் இல்லாத நபர்கள் எம்மிடம் பூச்சாண்டி காட்டத் தொடங்குவார்களானால் அவர்களுக்குத் தகுந்த பதிலடியை வழங்குவதற்கு எமது இளைஞர்கள் உட்பட ஏனையவர் கள் தயங்கக்கூடாது - என்றார். (ச)

**தொடர்பு கொள்ளவும்**

பொமேரியன் நாய்க்குட்டி, முயல் குட்டி,லவ்பேட்ஸ், பிஞ்சஸ் விற்பனை செய்ய வைத்திருப்போர் தொடர்பு கொள்ளவும்.

யாழ்.அக்குவரியம்
941, K.K.S. ரோட் தட்டா தெருச் சந்தி, யாழ்ப்பாணம்



கொழும்பு திட்டத்தின் 60 ஆண்டு பூர்த்தி விழா நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், சிரேஷ்ட அமைச்சர்களான சரத் அமுனுகம, ஏ.எச்.எம்.பௌசி, கொழும்புத் திட்ட செயலகத்தின் செயலாளர் நாயகம் பட்ரீசியா யூன் மோய் சியா, வெளிநாட்டு தூதுவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச)

# பொதுநலவாய விளையாட்டுப் போட்டிக்கு செலவிடப்பட்ட தொகை ரூ.8585 மில்.

கொழும்பு, ஜூலை 2

பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டிகளை ஹம்பாந்தோட்டையில் நடத்துவதற்கு 8585 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 2018ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை இலங்கையில் நடத்துவதற்கு பல்வேறு வழிகளில் முயற்சிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் விளையாட்டுப் போட்டியை நடத்துவது தொடர்பிலான கைநூல் ஒன்றினை அச்சிட்டு வெளியிடுவதற்காக 46.2 மில்லியன் அமெரிக்க டொலர் செலவிடப்பட்டுள்ளது. பொதுநலவாய நாடுகள் விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்காக 440 பில்லியன் ரூபா செலவாகும் என ஐக்கிய தேசியக் கட்சி நாடா ளுமன்ற உறுப் பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித் துள்ளார். (ச)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில்07.07.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

நல்லூர் பாம் சென்ரர்
19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944

# மரண அறிவித்தல்



## வீரசிங்கம் குமரேசபிள்ளை

(முத்துமாரி ஒலி, ஒளி உரிமையாளர்)

தம்பாட்டி, ஊர்காவற்றுறையைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் குமரேசபிள்ளை 30.06.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்-விசாலாட்சி தம்பதியரின் மூத்தமகனும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-செல்வபூபதி தம்பதியரின் மூத்த மருமகனும் விஜயராணியின் அன்புக் கணவரும் கோகிலா (லண்டன்), பவானி, விஜயகலா, கலைவேந்தன், சசிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (01.07.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தம்பாட்டி விறாப்பிட்டிமுனை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பாட்டி, ஊர்காவற்றுறை.

தகவல்:
குடும்பத்தினர்
(5377)

# கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்

கிண்ணியா, ஜூலை 2

கிண்ணியா வலயக் கல்விப் பணிப் பாளர் எல்.எம். ஹாசிம் தாக்கப்பட்ட தைக் கண்டித்து நேற்று முன்தினம் கிண்ணியா வலயப் பாடசாலைகளின் அதிபர்களும், ஆசிரியர்களும், மாணவர் களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். கிண்ணியா அப்துல் மஜீது வித்தியால யத்துக்கு முன்னால் ஒன்றுகூடிய இவர் கள் அதிகாரி ஒருவரைத் தாக்கிய செய லானது கிண்ணியாவுக்கு அவமானத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும், வலயக் கல்விப் பணிப்பாளரைத் தாக்கியவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டனர். (ச)

**உடன் தேவை**

அச்சகம் ஒன்றில் கணினி வடிவமைப்பாளராக பணியாற்றுவதற்கு ஆள்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம்.
383/16,கோயில் வீதி நல்லூர், யாழ்ப்பாணம்.
0777165589, 0217912885

**கட்டட வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வீடு கட்டுதல், மாடி வீடு கட்டடங்கள் தரமாகவும் நவீன முறையிலும் செய்து கொடுக்கப்படும்.
KASTURI CONSTRUCTION
Tel- 0773836123

**இறைச்சிக்கோழி விற்பனை**

கல்பேட், புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
விஜயகுமார்
குளப்பிட்டி வீதி , ஆனைக்கோட்டை.

**வீடு, கடை வாடகைக்குண்டு**

இல.114, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் 2 அறைகள் பெரிய வரவேற்பறை சமையல் அறை, வாகனத்தரிப்பிட வசதியும் கொண்ட 50' x 20' அளவிலான வீடும் மற்றும் 25' x 15' அளவிலான கடையும் வாடகைக்குண்டு.
குறிப்பு தனித்தனியாக விரும்புபவர்களுக்கும் தனியாக வழங்கலாம் தொடர்பு 0714017802

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04 | 02 |
| ★ | ★ |
| 04 | 06 |
| ★ | ★ |
| 1948 | 2011 |



திருமதி

## செல்வராணி ஜயாத்துரை (வேவி)

மண்ணை விட்டே விரைந்திட்டாய்
எம் மனம் நொந்து தவிக்குதம்மா!
கண்ணை இமை காப்பது போல்
எம் உறவுகளை அனுசரித்தவளே
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (5379) (25-22-45)

பிள்ளைகள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள்.

# 11ஆம் ஆண்டின் நினைவலைகள்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 03 |
| ★ | ★ |
| 06 | 07 |
| ★ | ★ |
| 1933 | 2000 |



## அமரர் கந்தையா மயில்வாகனம்

(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்
- பொலிஸ் பப்பா)

திதி: பிரதமை (02.07.2011)

மண்ணுலகில் பிறந்து மானிடர் யாவரும் விண்ணுலகிற்குச் செல்வது இயற்கையின் நியதி - ஆனால்
அவை என் கண்முன்னே நடக்கும்போது கலங்குதைய்யா என் உள்ளம்.
வாழ்வு என்னும் கொடையை இவ்வுலகில் எனக்குத்தந்து.
என்னைவிட்டு வானுலகம் சென்றுவிட்ட என் அன்புத் தெய்வமே
மறைந்தோடியது ஆண்டு பதினொன்று மறக்கத்தான் முடியவில்லை.
நேற்று நடந்தது போல் நினைத்துப் பார்க்கிறேன் முடியவில்லை.
உங்கள் அன்பும் பாசமும் உங்கள் முகத்தையும் படத்தில்தான் பார்க்கிறேன்.
வாழ்வு பாதிக்கப்பட்டேன் தனிமைப்பட்டேன்.
உள்ளம் சிதைந்து உருக்குலைந்து தவிக்கிறேன்.
விதியை நொந்து நொந்து உங்கள் காலடிக்கு வரும் வரைக்கும்
உங்கள் நினைவுடன் வாழ்கிறேன்.
நிஜமாக இருந்த என் அன்புத் தெய்வமே
இன்று நிழலாக மறைந்தது ஏன்
தனி மரமாக இருக்கும் எனக்கு உங்கள் பாசத்தின் நிழல் தான்
என்னை வழி நடத்துகிறது.

*என்றும் உங்கள் ஆத்மா சாந்திபெற சந்நிதி முருகனை வேண்டுகிறேன்*

பழைய பாலத்தடி,
தொண்டைமானாறு.

திருமதி ம.பரமேஸ்வரி
(மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரை வைத்து நாடகம் வேண்டாம் இனியும் அந்த மக்களை ஏமாற்றாதீர்கள்!

## பிரதமர் மன்மோகனைச் சாடுகிறார் பழ.நெடுமாறன்

சென்னை, ஜூலை 2

ஈழத் தமிழர்களின் குறைகள் நியாயமானவை என்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியிருப்பது அவர் நடத்தும் நாடகங்களில் ஒன்றாகும். எனவே தமிழர்களை இனியும் தொடர்ந்து ஏமாற்ற வேண்டாம் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் சாடியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கைத் தமிழர்களின் குறைகள் நியாயமானவை. அவை தீர்க்கப்பட வேண்டும். அங்கு வாழும் தமிழர்களுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என இந்திய அரசு இலங்கை அரசை நிர்ப்பந்தித்து வருகிறது என பிரதமர் மன்மோகன் சிங் கூறியிருக்கிறார்.

ஆனால் நேற்று முன்தினம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்தியா நிர்ப்பந்திக்கவில்லை என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித் திருக்கிறார். இவற்றில் யார் உண்மை கூறுகின்றனர் என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது. ராஜபக்ஷ தெரிவித்திருக்கும் கருத்தை இந்தியப் பிரதமர் மறுத்திருக்க வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு செய்யவில்லை.

இலங்கையில் போர் உச்சக்கட்டமாக நடைபெற்ற வேளையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என்ற கோரிக் கையை வலியுறுத்தி தமிழக மக்கள் போராடிய போது- போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்று இலங்கை அரசுக்குக் கூறியிருப்பதாக பிரதமர் தெரிவித்தார். ஆனால் ராஜபக்ஷ அதை மறுத் தார். இந்தியா ஒரு போதும் போர் நிறுத்தம் செய்யுமாறு கேட்கவில்லை என்று பகிரங்கமாகக் கூறினார்.



இதேவேளை இலங்கைக்கு ராணுவ ரீதியிலான உதவி எதையும் இந்தியா செய்யவில்லை என்று பிரதமர் கூறினார். ஆனால் இந்தியா செய்த உதவியால் தான் தாம் வெற்றிபெற முடிந்தது என ராஜபக்ஷ போர் முடிந்த பின்னர் கூறினார். இவ்வாறு தங்களைத் தொடர்ந்து ஏமாற்றுவதற்காக பிரதமர் மன்மோகன் சிங் நாடகமாடுவதாக தமிழக மக்கள் கருதுகின்றனர் - இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (வ)

## லோக்பால் சட்டத்தில் மத்திய அரசு இரட்டை வேடம்

### சாடுகிறது பா.ஜ.க.

பெங்களூர், ஜூன் 30:

லோக்பால் சட்ட விவகாரத்தில் மத்திய அரசு இரட்டை வேடம் போடுகிறது என்று பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கையநாயுடு தெரிவித்தார்.

பெங்களூரில் ஓவியக்கலை சங்க வளாகத்தில் புதிதாகக் கட்டியுள்ள கலைஞர்கள் அரங்கை நேற்று முன்தினம் திறந்து வைத்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்:

ஜனலோக்பால் சட்டமசோதா விவகாரத்தில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இரட்டை வேடம் போடுகிறது. இந்த விவகாரம் தொடர்பாக எதிர்க்கட்சிகளின் கருத்தறிய மத்திய அரசு இதுவரை தவறி விட்டது - என்றார் அவர். (வ)

## பிரமுகர் சந்திப்பு...



இந்தியாவுக்கான ஐஸ்லாந்து நாட்டின் தூதர் குத்முந்தர் எரிக்சன் தமிழக முதல்வர் ஜெயலலிதாவை தலைமைச் செயலகத்தில் நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

# ராணுவ பலத்தில் சீனாவை விட பின்தங்கிய நிலையில் இந்தியா

## மன்மோகன் சிங் தகவல்

டில்லி, ஜூலை2

சீனாவின் ஆயுத பலத்துடன் ஒப்பிடுகையில் இந்தியா மிகவும் பின் தங்கியுள்ளது என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கடந்த புதன்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசுகையில்:

சீனாவின் கடற்படை தற்போது அதி நவீனமாக வளர்ச்சியடைந்துள்ளது. அதிக எண்ணிக்கையான விமானம் தாங்கிப் போர்க் கப்பல்களை தம்வசம் கொண்டுள்ளது. எமது நாட்டு ராணுவ ரீதியிலான பலத்துடன் அவர்களை ஒப்பிட முடியாது. அந்தவகையில் பின்தங்கிய நிலையில் உள்ளோம். இப்போது தான் ஒவ்வொன்றாக வளர்ச்சியடையத் தொடங்கியுள்ளோம்.

அந்த வகையில் எமது ராணுவ பலத்தை நவீனப்படுத்தும் நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளது. சுமார் பல வருடங்களுக்குப் பின்னர் முதல் முறையாக ராணுவத்தில் புதிதாக 2 பிரிவுகளை இப்போது தான் உருவாக்கியிருக்கிறோம்.

எல்லைப் பகுதிகள் எமது விமானப்படையின் பாதுகாப்பான கரங்களுக்குள் உள்ளன. எல்லைப் புற சாலைகளை மேம்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு என்பது கடந்த காலங்களை விட குறைவடைந்த நிலையில் தான் உள்ளது. இருப்பினும் அதற்காக நாம் தேவையான செலவுகளை குறைக்கவில்லை. பாதுகாப்பான நிதி ஒதுக்கீடும் எமக்கு மிகவும் அவசியம் என்பதை அரசு மறக்கவில்லை என்றார் பிரதமர்.

## உத்தரகாண்டில் பலத்த மழை: நிலச்சரிவில் சிக்கி 10 பேர் பலி

உத்தரகாண்டில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் நீடித்த பலத்த மழை காரணமாக உத்தரகாண்டில் அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

பல இடங்களில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதால் மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இதனிடையே நிலச்சரிவு அபாய இடங்களில் எச்சரிக்கை விடப்பட்டுள்ளதாக முதலமைச்சர் ரமேஷ் பொக்ரியால் தெரிவித்துள்ளார்.

## கரையோரப் பாதுகாப்பை தீவிரப்படுத்த இலங்கையிடம் இருந்து 80 படகுகள்

### இந்தியா கொள்வனவு செய்யவுள்ளது

டில்லி, ஜூலை2

மும்பையில் இடம்பெற்ற தாக்குதல்களையடுத்து கரையோர ரோந்து கண்காணிப்பு நடவடிக்கைகளை பலப்படுத்தும் நோக்கில் இந்திய கடற்படை இலங்கையிலிருந்து படகுகளை கொள்வனவு செய்யவுள்ளது.

இலங்கையைத் தளமாகக் கொண்ட கப்பல் நிர்மாண நிறுவனம் ஒன்றிடமிருந்தே 80 அதிவேக இடைமறிப்புப் படகுகளை சுமார் 300 கோடி இந்திய ரூபாவுக்கு வாங்கு வதற்கு இந்திய கடற்படை தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய கடற்படை அதிகாரிகள் கூறுகையில்:

மேற்படி படகுகள் இந்திய கடற்படையின் புதிதாக அமைக்கப்பட்ட படைப்பிரிவான சாகர் பிராஹரி பால் மற்றும் அந்தக் கடற்படையின் ஏனைய பிரிவுகளால் பயன்படுத்தப் படவுள்ளதாக இந்திய கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி நிறுவனத்திடமிருந்து இந்தப் படகுகளை வாங்குவதற்கான ஒப்பந்த நடைமுறைகள் இறுதிக்கட்டத்தில் உள்ளன. எனவே விரைவில் ஒப்பந்த நடைமுறைகள் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## சாதிக்பாட்சாவின் மரணம் குறித்து ஆராய டாக்டர்கள் குழுவை அனுப்புகிறது சி.பி.ஐ.

டில்லி, ஜூலை 2

முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் அமைச்சர் ஆ. ராசாவின் நண்பரான சாதிக் பாட்சா மரணம் தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. இதனால் அவரது மரணம் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை வழங்குமாறு டில்லியில் உள்ள அனைத்து இந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனையைச் சேர்ந்த (ஏ.ஐ.ஐ. எம்.எஸ்.) டாக்டர்கள் குழுவை மத்தியப் புலனாய்வுக் கழகம் (சி.பி.ஐ.) அனுப்பி வைக்க உள்ளது.

2ஜி அலைக்கற்றை ஒதுக்கீட்டு ஊழல் தொடர்பாக விசாரணை நடத்தும் சி.பி.ஐ. அமைப்பு, சாதிக் பாட்சாவிடம் சென்னையில் விசாரணை நடத்தியது. கடந்த மார்ச் 16 ஆம் திகதி அவருடைய வீட்டில் சாதிக் பாட்சா மரணமடைந்தார்.

சி.பி.ஐ. விசாரணையால் கடுமையான மன உளைச்சலில் தனது கணவர் இருந்தார் என்றும் அதனால் தற்கொலை செய்து இறந்தார் என்றும் அவருடைய மனைவி கூறியதாக அப்போது தகவல்கள் வெளியாகின.

ஆனால் அந்தத் தற்கொலை குறித்தும் சந்தேகம் நிலவியது. எனவே டில்லி டாக்டர்கள் குழுவைக் கொண்டு இதை விசாரணை செய்யுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது.

## லோக்பால் விவகாரம்: அத்வானியுடன் ஹசாரே சந்திப்பு

டில்லி, ஜூலை.2

லோக்பால் சட்ட விவகாரம் தொடர்பாக சமூக ஆர்வலர் அன்னா ஹசாரே தலைமையிலான குழுவினர் நேற்றுக் காலை பா.ஜ.க. தலைவர் அத்வானியை சந்தித்துப் பேசியுள்ளனர்.

லோக்பால் சட்டம் குறித்து அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்பு தங்களது நிலையை விளக்க அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்துப் பேசுவதற்கு முன்னதாக அண்ணா ஹசாரே தெரிவித்திருந்தார். அதன்படி அனைத்துக் கட்சித் தலைவர்களையும் சந்தித்து அவரது குழுவினர் பேசி வருகின்றனர்.

லோக்பால் வரம்புக்குள் பிரதமர், நீதித்துறையினரைக் கொண்டு வர காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியாவை சந்தித்து விளக்கம் அளித்து அவரை சம்மதிக்க வைப்பேன் என்று ஹசாரே குறிப்பிட்டிருந்தார்.

# 36 மணி நேரத்துக்குள் 17 குழந்தைகள் கல்கத்தா மருத்துவமனையில் உயிரிழப்பு

கல்கத்தா, ஜூலை 2

கல்கத்தாவில் உள்ள பி.சி.ராய் மருத்துவமனையில் கடந்த 36 மணித்தியாலங்களில் 17 குழந்தைகள் உயிரிழந்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. குழந்தைகள் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்து உறவினர்கள் நேற்று மருத்துவமனை முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.


இதுதொடர்பாக பி.சி.ராய் மருத்துவமனை கண்காணிப்பாளர், டி.பால் கூறுகையில்: மரணமடைந்த குழந்தைகள். செப்ரிசீமியா மற்றும் குறைந்த எடை ஆகிய நோய்களால் பாதிக் கப்பட்டிருந்தனர் என்று கூறி னார்.

இதனையடுத்து மேற்படி மருத்துவமனையில் 17 குழந்தைகள் உயிரிழந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணை நடத்த அந்த மாநில முதல்வர் மம்தா பானர்ஜி உத்தர விட்டுள்ளார்.

இதுகுறித்து மேற்கு வங்க முதல் வர் மம்தா பானர்ஜி கூறுகையில்:

இந்த குழந்தைகள் அனைத்தும் நோயின் இறுதிக்கட்டத்தில்தான் மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாக என்னிடம் தெரிவித்தனர். இதுகுறித்து விசாரணை நடத்தி அறிக்கை அளிக்குமாறு உத்தர விட்டுள்ளேன் என தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமய சந்நிதிகளில்



யாழ்ப்பாணம், ஜூலை2

இருபாலை கிழக்கு, கேணிக்குளம்லிங்க விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதலும் இடம்பெறும்.

கும்பாபிஷேக ஆசியுரையை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ. சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ. சுந்தர ராஜக்குருக்கள், செஞ்சொற்செல்லர் ஆறு. திருமுருகன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ற-236)

***

வடமராட்சி , ஜூலை2

பருத்தித்துறை புனித தோமையர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா கடந்த 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 5மணிக்குத் திருச்செபமாலையுடன் நற்கருணை ஆராதனை இடம்பெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு திருச் சொரூப பவனியும் இடம் பெறும். (ற-236)

***

வடமராட்சி, ஜூலை2

வரணி வடக்கு நாச்சிமார் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இன்று சனிக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம் பெறும். (ற-236)

***

வடமராட்சி பருத்தித்துறை திருநாவலூர் மருதந்தெணி மாரியம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி முதல் எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறும். இந்தக் கும்பாபிஷேக நிகழ்வுகள்ஆலயப் பிரதம குரு''கிரியாகிரம ஜோதி'' சிவஸ்ரீ.சிவ. குஞ்சித பாதக் குருக்கள் தலைமையில் நடை பெறும் (ற)

***

யாழ்ப்பாணம், கோட்டை முனீஸ்வரன் ஆலயத்தின் மணவாளக் கோல அலங்காரத் திருவிழா இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி 25 தினங்கள் நடைபெறவுள்ளது.திருவிழாக்காலங்களில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்நபனா அபிஷேகம் இடம் பெற்று மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி உலா வருவார். (ற-236)

***

சாவகச்சேரி நுணாவில் மத்தி கந்தசாமி ஆலயத்தில் அமைந்துள்ள வைரவப் பெருமானுக்கு இன்று சனிக்கிழமை இலட்சார்ச்சனை ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 11ஆம் திகதி திங்கட்கிழமை வைரவப் பெருமானுக்கு அஸ்டோத்திர 108 சங்காபிஷேகம் நடைபெறும்.'பாலகுருமணி' சிவபிரம்மஸ்ரீ க.பரராஜசேகரக் குருக்கள் தலைமையிலான குருமார் இலட்சார்ச்சனையில் கலந்து கொள்வர். (ற-207)

# வாசனா சம்புத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, ஜூலை 2

தேசிய லொத்தர் சபையின் வாசனா சம்பத 875 ஆம் இலக்க அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பில் "Z" என்ற ஆங்கில எழுத்தும் 21/37/39/49 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவு செய்யப்பட்டன. போனஸ் இலக்கமாக 41 தெரிவாகியது.

இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

நான்கு இலக்கங்களும் சரியாக வைத்திருந்த ஒருவருக்கு முதலாம் பரிசாக பத்துலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களும் போனஸ் இலக்கமும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 04 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 323 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா இரண்டாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

இரண்டு இலக்கங்கள் மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 15,920 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 221,332 பேருக்கு ஐந்தாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது.

ஆங்கில இலக்கத்தை மட்டும் சரியாகக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 33,036 பேருக்கு ஆறாம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)


## FREE PROGRAMME ON FASHION JEWELLERY

FREE PROGRAMME ON FASHION JEWELLERY WILL BE CONDUCTED BY MRS. MANJULA SRIRANGADAS ON SATURDAY THE 2 ND JULY AT,

NO: 187/30 UNION LANE,
HOSPITAL ROAD,
JAFFNA.
TIME 2.00 PM

## பணிநிலை வேண்டுகை

இலங்கையின் முதல்தர காப்புறுதிக் கம்பனியான ஜனசக்தி காப்புறுதி கம்பனி தனது கிளிநொச்சிக் கிளையை விஸ்தரிப்பதற்காக பின்வரும் பணிநிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பணிநிலை I - வியாபார அபிவிருத்தி அலுவலர் (அடிப்படை ஊதியம் உண்டு)

பணிநிலை II - வியாபார அபிவிருத்தி உத்தியோகத்தர் (அடிப்படை ஊதியம் உண்டு)

பணிநிலை III - பிரதேச முகவர் எந்தப் பிரதேசமாகவும் இருக்கலாம். பகுதிநேரப் பணியாகவும் மேற்கொள்ளலாம்.

தகைமைகள் - க.பொ.த. சாதாரண தரம் கட்டாயமாக 6 பாடங்கள் (கணிதம் உட்பட) சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

வேறு தகைமைகள் இருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும்.

* விண்ணப்பதாரிகள் தகைமைச் சான்றுகளுடன் 06.07.2011 புதன் கிழமை காலை 9 மணிக்கு கிளி. பழைய வைத்தியசாலை முன்பாக அமைந்துள்ள எமது கிளைக்குச் சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

தொ.பே. 021 2280087
0772136897

கிளிநொச்சிக் கிளை.

## ஜயஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 240 | சீட்டிழுப்புத் திகதி 30.06.2011

வெற்றி இலக்கங்கள்: 18 38 45 63

சுப்பர் இலக்கம்: 12

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 5,000,000/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 71661 | ரூ- 20/= | ரூ- 1,433,220 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 6530 | ரூ- 40/= | ரூ- 261,200 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 5557 | ரூ- 100/= | ரூ- 555,700 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 455 | ரூ- 200/= | ரூ- 91,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 127 | ரூ- 1,500/= | ரூ- 190,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 13 | ரூ- 3,000/= | ரூ- 39,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ- 1,000,000/= | ரூ- 1,000,000 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | | ரூ- 50,00,000/= | |
| மொத்த எண்ணிக்கை | 84344 | | ரூ- 3,570,620/= |

ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,217,530/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்


அபிவிருத்தி லொத்தர் சபை

Website: www.dlb.lk


## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா முருகேசம்பிள்ளை

(பிரபல சித்த ஆயுர்வேத, விஷகடி வைத்தியர், இளைப்பாறிய ஆசிரியர்)



மளவராயர் வீதி,வட்டு வடக்கு, வட்டுக்கோட்டையைப் வசிப்பிடமாகக் கொண்ட **பொன்னையா முருகேசம்பிள்ளை** தமது 94 ஆவது வயதில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா- பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இராமலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் ஜெயலக்ஷ்மியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான தங்கராசா, சிவயோகம், மகாலட்சுமி மற்றும் நேசம்மா, குணவதியம்மா, பஞ்சாட்சரசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலக்ஷ்மிதேவி மற்றும் மகேஸ்வரம்பிள்ளை - வசந்தா, ஜெயரஞ்சிதாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும். குகபாலன், திருமகள், யோகேஸ்வரன், கனகநாதன் ஆகியோரின் மாமனும் மோகனா, வதனா, தனுசன், வேனிகா தில்லைராஜன், சிவகரன், காயத்திரி, தினுசன், கஜிதரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2011) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மளவராயர் வீதி,
வட்டு வடக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

### டாக்டர் பொன்னம்பலம் சிவபாதசுந்தரம்

கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், சங்கத்தானையை வதிவிடமாகவும் தற்போது வவுனியா சின்னப் புதுக்குளத்தில் வசித்து வந்தவருமான டாக்டர் பொ.சிவபாதசுந்தரம் 30.06.2011 வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (அதிபர்)- தெய்வானை தம்பதியரின் மகனும் ஈஸ்வரி அம்மாவின் கணவரும் Dr. பத்மாவின் (பிரான்ஸ்) தந்தையும் வித்தியாசாகரின் மாமனும் செல்வி விபூஷணாவின் பேரனும் காலஞ்சென்றவர்களான பொ.சிவராமலிங்கம் (P.H.I), சோமஸ்கந்தசிவம் (அதிபர்) ஆகியோரின் சகோதரரும் உமாமகேசன் (கணக்காளர்), மகேஸ்வரி, மீனாட்சியம்மா (லண்டன்), சித்ரா (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொடிகாமம்),Dr. குமுதினி (எருக்கலம்பிட்டி), ஆதி (கனடா) ஆகியோரின் சிறியதந்தையும் தங்கராசா, சிவகுருநாதன், பாலசுப்பிரமணியம், பாஸ்கரன், தற்பரானந்தன், இந்திரா ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் வவுனியா சின்னப்புதுக்குளம் பேரன் தவராசன் இல்லத்தில் நடைபெறும். இறுதிக் கிரியை நடைபெறும் தினம் பின்னர் அறிவிக்கப்படும்.

சின்னப் புதுக்குளம், வவுனியா.
TP:0213245802, 0779174425. (சி/1488) (19-25)

தகவல்:
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### சோமசுந்தரம் நாராயணசாமி
(வல்வெட்டித்துறை)



கடந்த 02.06.2011 இல் இறைவனடி சேர்ந்த எமது தந்தையாரின் அந்தியேட்டி கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 02.07.2011 இல் மெல்போனில் (ஆஸ்திரேலியா) நடைபெறுகின்றது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறிவிப்பதுடன், தந்தையாரின் மரணச் செய்தி கேட்டு எம்முடன் நேரடியாகவும், தொலைபேசிமூலமும் தொடர்பு கொண்டு அனுதாபத்தைத் தெரிவித்து ஆறுதலளித்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(சி/1235)

தகவல்:
CAPT. நா.கலைநேசன்
கொழும்பு - 15

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: துதியை

### திருமதி நடராசா தனலட்சுமி

தோற்றம்
07 ★ 06 ★ 1932

மறைவு
24 ★ 06 ★ 2009

அன்பினால் வளர்த்து கல்வியினால்
அறிவூட்டி சந்தோசத்தில் குறைவின்றி
நல் வாழ்வு வாழ வைத்த தெய்வத்தை
நாம் என்றும் நினைத்திருப்போம்
ஓம் சாந்தி

கட்டப்பிராய் லேன்,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

(5351)

என்றும் நினைவுடன்:
திருமதி தர்மலிங்கம் ஜீவா
(மகள்)


இலங்கை முழுவதும் பல நூற்றுக் கணக்கான Phone திருத்துனர்களை உருவாக்கிய பிரபல ஆசிரியரின்

Diploma in Mobile Phone Repairing

Free!
Study Packs
(Faults Solutions)
Schematics
Diagram Cd's
Applications
Software codes
Special Web Site

Hardware
- அறிமுகம் (Spares / ICs / Tools / Faults / Web sites)
- தவறுகளை கண்டுபிடிக்க Trouble Shooting ஒழுங்கு முறைகள்
- Ic/Ribbon/Spares மாற்றுதல் / ஒட்டுதல் போன்ற பயிற்சி (All brand)
- Phone கலற்றும் முறை (சகலவிதமான), Ribbon/Slide / Touch....Etc.
- Hotgun / Multumeter / Power supply / U S cleaner. உபயோகம்
- விசேட Hardware குறிப்புகள்
- Forum மூலம் தீர்வுகாணல் (Jumper System)



Software Setup Installation, Unlocking, Flashing

JAF, SE Tool, NS Pro, Infinity, Pin Finder, Spiderman, MX-Key...Etc. போன்ற Deviceகளை பயன்படுத்தி Unlock, Flash செய்யும் முறை முழுமையான செயன்முறை விளக்கத்துடன் கற்பிக்கப்படும்

4 DAYS COURSE
JULY 11 MON | JULY 12 TUE | JULY 13 WEN | JULY 14 THU
10.00 am
03.00 pm

London Metropolitan College
No: 197 Arasady Road,Jaffna
(Between Kantharmadam Juction & Hindu Ladies College)
Tel: 071 4 241873, 021 222 7230


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு கண்டாலே தெற்காசியாவில் அமைதி ஏற்படும்

## பாக். ராணுவ உயரதிகாரி ஜெனரல் காலித் கூறுகிறார்

இஸ்லாமாபாத், ஜூலை 2

''காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்படாத வரை, தெற்காசியாவில் அமைதி நிலவுவதற்கான வாய்ப்பு இல்லை'' என்று பாகிஸ்தான் ராணுவ உயரதிகாரி ஜெனரல் காலித் ஷமீம் வைனீ தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ராணுவத்தில், முதல் இடத்திலிருக்கும் தலைமைத் தளபதி ஜெனரல் அஷ்பக் பர்வேஸ் கயானிக்கு அடுத்து, இரண்டாவது இடத்தில் இருப்பவர் காலித் ஷமீம் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில், தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடந்த பட்டமளிப்பு விழாவில் பேசிய, முப்படைகளின் கூட்டுத் தளபதி ஜெனரல் காலித் ஷமீம் காஷ்மீர் பிரச்சினையால், தெற்காசியாவில் நிலையற்ற தன்மை உருவாகியுள்ளது.

ஆதலால், இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாம் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ள வேண்டும். அப்படித் தீர்வு கண்டால், அது இந்தப் பிராந்தியத்தில் வசிக்கும் மக்களுக்கு மட்டுமின்றி, உலகளவில் வசிக்கும் ஆசிய நாட்டவர்க்கும் நல்லது. காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாத வரை, தெற்காசியாவில் அமைதி நிலவாது என்றார்.

இஸ்லாமாபாத்தில் கடந்த வாரம், இந்தியா, பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர்கள் இடையே இரண்டு நாள்கள் நடந்த பேச்சு முடிந்து பேட்டியளித்த, இந்திய வெளியுறவுத் துறைச் செயலர் நிருபமா ராவ் தெரிவித்ததாவது:

துப்பாக்கிச் சத்தம் மற்றும் தீவிரவாதிகளின் வன்முறைகளுக்கு இடையே காஷ்மீர் விஷயத்தைப் பேச முடியாது. வன்முறையைக் கைவிட்டு, அமைதியான சூழலில்தான் இப்பிரச்சினையைப் பேச முடியும் எனத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் காலித் ஷமீமின் இவ்வாறு பேசியிருப்பது மாற்றம் ஏற்பட்டுள்ளதை தெளிவுபடுத்துகிறது.

# ஏமன் அதிபரின் கோரிக்கையை நிராகரித்தன எதிர்க்கட்சிகள்

சனா, ஜூலை 2

ஏமனில் ஆட்சி மாற்றம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பேச்சு நடத்தும்படி அமைச்சர்களுக்கு அந்தநாட்டு அதிபர் அலி அப்துல்லா சலே உத்தரவிட்டுள்ளார். அதிபர் சலேயின் இந்த அழைப்பை ஏமன் எதிர்க்கட்சிகள் நிராகரித்துவிட்டன.

ஏமன் நாட்டை 33 ஆண்டு காலம் ஆட்சி செய்தவர் அதிபர் அலி அப்துல்லா சலே. இவரை ஆட்சியில் இருந்து விலகும்படி கடந்து ஐந்து மாதங்களாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களுக்கு சர்வதேச நாடுகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் கடந்த மாதம் 3ஆம் திகதி தலைநகர் சானாவில் உள்ள அப்துல்லா சலேயின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அவர் காயமடைந்து சவுதி அரேபியாவில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அங்கு இவரை ஏமன் வெளியுறவு அமைச்சர் அபுபக்கர் அல் குயிர்பி சந்தித்துப் பேசினார். சந்திப்புக்குப் பின் பேட்டியளித்த அல் குயிர்பி, ''ஆட்சி மாற்றம் தொடர்பாக அரசியல் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் அமைச்சர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பேச்சு நடத்த வேண்டும் என்று அதிபர் அறிவுறுத்தியுள்ளார்'' என்றார்.

இதேவேளை அதிபர் பதவியில் இருந்து சலே விலக வேண்டும் என சவுதி அரேபியா உட்பட ஆறு வளைகுடா நாடுகளும் கோரிக்கை விடுத்துள்ளன. இதனால் அவருக்கு இக்கட்டான சூழ்நிலை உருவாகியுள்ளது.

# சிறுகோள்கள் பூமியில் மோதினால் பேரழிவுக்கு உள்ளாகும் நாடுகள்

லண்டன், ஜூலை 2

விண்வெளியில் உள்ள சிறுகோள்கள் பூமியில் மோதுண்டால் பேரழிவுக்கு உள்ளாகக் கூடிய நாடுகளின் பட்டியலை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

பிரிட்டனின் சவுத் ஹெம்டன் பல்கலைக்கழக நிபுணர்களே இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளனர். சீனா, இந்தோனேசியா, ஜப்பான், இந்தியா, பிலிப்பைன்ஸ், இத்தாலி, பிரிட்டன், பிரேசில், நைஜீரியா, அமெரிக்கா போன்றவையே அந்த நாடுகள்.

இந்தப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நாடுகள் மிகப் பெரும் அழிவுகளைச் சந்திக்கலாமெனவும் அதன்மூலம் அந்த நாடுகள் மீளமுடியாமல் போகுமெனவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

சுமார் 12 மைல்கள் விட்டமுடைய சிறு கோளொன்று பூமியில் மோதுண்டால் இங்குள்ள தாவரங்கள் மற்றும் விலங்குகள் அனைத்தும் முற்றாக அழிவடையுமென ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய ஒரு தாக்குதல் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்ந்ததாகவும் இதன் போதே டைனோசர்கள் முற்றாக அழிந்ததாகவும் அவர்களால் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# பிரான்ஸ் அதிபரைத் தாக்கியவர் கைது

பரீஸ், ஜூலை 2

பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸியை தாக்கிக் கீழே தள்ளியவர் கைது செய்யப்பட்டுள்ளார். .


பிரான்ஸ் அதிபர் நிக்கோலஸ் சர்கோஸி தெற்கு பிரான்சில் உள்ள டொலுயீசில் மேயர்கள் கூட்டத்தில் கலந்துகொண்ட பின், அங்கு நின்று கொண்டிருந்த கூட்டத்தைத் தாண்டிச் செல்கையில் திடீர் என்று ஒருவர் சர்கோஸியின் சட்டையைப் பிடித்து இழுத்தார். இதில் சர்கோஸி நிலைதடுமாறிக் கீழே விழுந்தார்.

இதைப் பார்த்த காவலர்கள் சர்கோஸியைத் தாக்கியவரை கைது செய்தனர். எனினும் தாக்கியதற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை.



லிதுவேனியா நாட்டின் வில்னியஸில் நடந்த ஜனநாயகத்தில் பெண்களின் பங்கை அதிகரிக்கச் செய்யும் சர்வதேச மாநாட்டில் பேசிய பின்லாந்து அதிபர் தர்ஜா ஹா லோனென் கலந்து கொண்டு பேசினார்.

# பின்லேடன் குடும்பத்தை விடுவிக்க கோருகிறார் உமர் பின்லேடன்



இஸ்லாமாபாத், ஜூலை 2

பாகிஸ்தான் அரசின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள ஒசாமா பின்லேடன் குடும்பத்தினரை விடுவிக்க வேண்டும் என்று அவரது மகன் உமர் பின்லேடன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்டார் தலைநகர் டோஹாவில் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது: பாகிஸ்தான் தலைவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். அந்தநாட்டு அரசின் பிடியில் உள்ள பின்லேடனின் குழந்தைகள் மற்றும் குடும்பத்தினரை விடுவிக்க வேண்டும்.

அவர்கள் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். அந்த அப்பாவிக் குழந்தைகளையும் பெண்களையும் பாகிஸ்தான் அரசு பாதுகாக்க வேண்டும் என்றார்.

# பிரிட்டனில் பகிஷ்கரிப்பு

லண்டன், ஜூலை 2

இங்கிலாந்தில் ஒய்வூதியச் சட்டத்தில்திருத்தம், செலவினத்தை குறைத்தலுக்கு பிரதமர் டேவிட் கமரூன் தலைமையிலான அரசு முடிவெடுத்தது. இதனால் வேலையிழப்பு ஏற்படும் என எதிர்ப்புத் தெரிவித்து நாட்டின் முக்கிய நான்கு தொழிற் சங்கங் கள், நேற்று முன்தினம் பகிஷ்கரிப்புக்கு அழைப்பு விடுத் திருந்தன.

இதனால் 12 ஆயிரம் அரச பாடசாலைகள் மூடப்பட்டன. பொதுமக்கள், வர்த்தக சேவை சங்கம், ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர் கழகம் போன்றனவும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன.

## காட்டில் திடீரெனத் தீ!

# ஆபத்தான நிலையில் அமெரிக்க அணுப் பரிசோதனைக் கூடம்

லாஸ் அலாஸ், ஜூலை 2

அமெரிக்காவின் நியூ மெக்சிக்கோவில் உள்ள நியூ அலாஸ் பகுதி, காடு மற்றும் மலை சார்ந்தது. இந்தக் காட்டில் திடீரெனப் பிடித்த தீ, வேகமாகப் பரவி, அப்பகுதியில் உள்ள அணுப் பரிசோதனைக் கூடத்தை நெருங்கி வருகிறது.

அணுப் பரிசோதனைக் கூடத்துக்கு வெளியே, ஆயிரக் கணக்கான டிரம்களில் புளூட்டோனியக் கழிவுகள் வைக்கப்பட்டிருப்பதால், எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

காற்றில் கதிர்வீச்சுக்கள் இருப்பதை பரிசோதித்து அப்பகுதியை பாதுகாக்க அதிகாரிகள் விரைந்து பணியாற்றி வருகின்றனர்.

இது குறித்து அரசு அதிகாரிகள் கூறுகையில்:

''காட்டில் பரவியுள்ள தீயில் இருந்து காற்றில் பறந்து வந்த தீ கங்கு விழுந்ததில், பரிசோதனைக் கூடத்தின் ஒருபகுதி தீப் பிடித்துக் கொண்டது. தீயணைப்பு வீரர்கள் தீயை அணைத்தனர்'' எனத் தெரிவித்தனர்.

## மனித உரிமை மீறல் செயல்களுக்காக

# சிரியா மற்றும் ஈரான் பொலிஸ் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

சிரியாவில் பொலிஸ் படை மற்றும் ஈரான் தேசிய பொலிஸ் ஆகியன மனித உரிமை மீறல் செயல்களுக்கு ஆதரவு அளித்து வந்தன. அவற்றுக்கு எதிராக அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

சிரியாவின் நான்கு பெரிய பாதுகாப்பு படைகளில் ஒன்றான சிரியா அரசியல் பாதுகாப்பு இயக்குநரகம் அந்தநாட்டு உள்துறை அமைச்சகத்தின் துணை அமைப்பாகச் செயல்படுகிறது.

இந்த அமைப்பினர் பெரியளவில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகத் தகவல்கள் எழுந்தன. அதனால் இந்தப் படைப்பிரிவு மற்றும் சிரிய விமானப் படை புலனாய்வு பிரிவு மற்றும் ஈரான் தேசிய பொலிஸ் தலைவர் மற்றும் துணை தலைவர் மீது அமெரிக்கா நிதித்துறை பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவின் தீவிரவாதம் மற்றும் நிதிப் [illegible] னாய்வுப் பிரிவுச் செயலர் டேவிட் [illegible] எஸ்கோகென் கூறியதாவது:

சிரியாவில் மனித உரிமை மீறல் செயல்களுக்கு ஈரான் நாட்டு ராணுவம், பாதுகாப்பு படை ஆதரவு அளித்து வருவது தற்போது வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

இதற்காகவே இருநாட்டுப் பொலிஸ்படை மீதும் தடை கொண்டுவரப்பட்டுள்ளது. வன்முறைக்கு முடிவுகட்டி சிரியா மக்களுக்கு உரிமைகள் கிடைக்க அதிபர் [illegible] அசாத் உறுதி அளிக்க வேண்டும் என்றார்.

# சீனாவில் மிகப் பெரிய எரிவாயுக் குழாய் திறப்பு

பீஜிங், ஜூலை 2

உலகின் மிகப்பெரிய இயற்கை எரிவாயுக் குழாய் சீனாவில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது. சீனாவின் தெற்கு மாகாணங்களையும், துருக் மனிஸ்தான் நாட்டினையும் இணைக்கும் இந்த இயற்கை எரிவாயுக் குழாய் மொத்தம் 8 ஆயிரத்து 700 கிலோமீற்றர் தூரம் கொண்டது.

சீனாவின் தெற்கே ஹாங்காங், கிழக்கே ஷாங்கை, குவாங் கூஷூ ஆகிய மாகாணங்கள் வழியாக துருக்மனிஸ்தான் வரை இயற்கை எரியவாயுக் குழாய் 142.2 பில்லியன் யுவான் செலவில் அமைக்க முடிவு செய்யப்பட்டது.. இந்தக்குழாய் வழியாக ஆண்டு ஒன்றுக்கு 30 மில்லியன் கனஅடி எரி வாயுவை கொண்டு செல்லாம்.

மொத்தம் எட்டு கிளைகளுடன் உள்ள இந்தக் குழாய் இணைப்புகள் ஏறத் தாழ 500 மில்லியன் மக்கள் பயன்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. 5 கிளைகள் அமைக்கும் பணி நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள மூன்று கிளைகள் அமைக்கும் பணி அடுத்த ஆண்டுக்குள் முடிந்து விடும் என சீனா தேசிய பெற்ரோலியக் கோர்பரேசன் துணை பொது மேலாளர் லீயோ-யாங்யோ தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகக் கிண்ண வலைப்பந்தாட்டம் நாளை சிங்கப்பூரில் ஆரம்பமாகிறது

## இலங்கை அணியின் இணைத் தலைவர் தர்சினி

யாழ்ப்பாணம், ஜூலை 2
உலகக் கிண்ண வலைப்பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூரில் ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டியில் இலங்கை உட்படப் 16 நாடுகள் கலந்து கொள்கின்றன.

இந்த நாடுகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் லீக் முறையில் நடைபெறவுள்ளன.

'ஏ' பிரிவில் ஆஸ்திரேலியா, இலங்கை, நெதர்லாந்து, சாமோ ஆகிய நாடுகளும், 'பி' பிரிவில் நியூசிலாந்து, ரினிடாட், பிஜி, வேல்ஸ் ஆகிய நாடுகளும், 'சி' பிரிவில் ஜமெய்க்கா, சிங்கப்பூர் தென் ஆபிரிக்கா, பொஸ்வானா ஆகிய நாடுகளும், 'டி' பிரிவில் இங்கிலாந்து, மாலவி, பாவடாஸ், மலேசியா ஆகிய நாடுகளும் மோதவுள்ளன.

குழுப்போட்டிகளில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் அணிகளும், இரண்டாம் சுற்றில் ஏனைய குழுக்களில் தெரிவு செய்யப்படும் முதல் இரண்டு அணிகளுடன் வெற்றிபெறும் அணிகள் இறுதி ஆட்டங்களில் மோதவுள்ளன.

இந்தப் போட்டிகளின் ஆரம்ப நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 7 மணிக்கு நடைபெறவுள்ளன.

வலைப்பந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் காலை கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றது இலங்கை அணி.

இந்த முறை உலகப்போட்டியில் மோதிக் கொள்ளவுள்ள இலங்கை அணி இணைத் தலைவர்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

முதல் தடவையாக சர்வதேச மட்டத்தில் நடைபெறும் போட்டியொன்றுக்கு நீண்ட கால இடைவெளியின் பின்னர் தர்சினி சிவலிங்கம் என்ற தமிழ் வீராங்கனை அணியின் இணைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (த-86)

# சண்டிலிப்பாய் இந்துவின் வீரர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2
சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியில் வடமாகாணப் போட்டியில் பங்குபற்றிய வலைப்பந்தாட்ட அணி வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

வலைப்பந்தாட்ட அணியின் 15, 17, 19 வயதுப் பிரிவுகளின் மாணவிகள் இந்த நிகழ்வில் கௌரவிக்கப்பட்டதுடன் முதல் முறையாக மாகாண மட்டப் போட்டியில் பங்குபற்றியத் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட 17 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டப் பெண்கள் அணி வீராங்கனைகளும் கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலையின் அதிபர் கு.விமலன் தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் ஆனந்த நடராஜா மற்றும் பாடசாலைகள் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (த-313)

# கிரிக்கெட் போட்டி

சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் 5 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் நாளை ஞாயிற்றுக் கிழமை வல்வெட்டித்துறை ஈக்கிள்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள காலிறுதியாட்டத்தில் வல்வெட்டித்துறை ஈக்கிள்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளன. (த-23)

# விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 2
பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் உள்ள ஞானக் குழந்தைகள் இல்லம் ஸ்ரீ விக்னேஸ்வரா பாலர் பாடசாலையின் 45 ஆவது வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் ஆசிரியர் செல்வி ஜெயந்தினி கனகையா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகர சபை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ச.லோகசிவம் கலந்து கொள்வார். (த-313)



கொழும்பில் இடம்பெற்ற 37 ஆவது தேசிய கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவினருக்கான போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுக்கொண்ட வடமாகாண கூடைப் பந்தாட்ட அணியின் வீராங்கனைகள், யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.கே.ரூபசிங்கம், விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர், யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கத்தின் தலைவரும், பயிற்றுநருமான செ.ரமணன், விளையாட்டு உத்தியோகத் தர்கள், பிரசன்னா, வல்லவக்குமரன் ஆகியோருடன்...

# கரப்பந்தாட்டம் இன்று வவுனியாவில்

டி.எஸ்.ஐ. நிறுவனத்தினால் வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்படும் 12,14,16,18 வயது ஆண், பெண் அணிகளுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை வவுனியாவில் ஆரம்பமாகிறது.

இதில் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே இடம் பெற்ற ஆட்டத்தில் முதல் 4 இடங்களையும் பெற்ற அணிகள் பங்குகொள்ளவுள்ளன. யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே 12 வயதுப்பிரிவினர்களுக்கான போட்டிகள் இடம்பெறவில்லை. இதனால் 12 வயதுப்பிரிவு அணிகள் மாகாண மட்டப்போட்டியில் நேரடியாகக் கலந்துகொள்ளவுள்ளன. (த-23)




# இலக்கங்கள் வழங்கும் நிகழ்வு

வடமாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த மெய்வன்மைப் போட்டியாளர்களுக்கான இலக்கங்கள் சம்பந்தப்பட்ட பாடசாலை ஆசிரியர்களிடம் வலிகாமம் கல்வி வலயத்தில் வைத்து இன்று சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு வழங்கப்படவுள்ளன.

இதன்போது போட்டி சம்பந்தமான விடயங்களும் அறிவிக்கப்பட உள்ளன. எனவே சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களை சமுகமளிக்கும்படி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரன் அறிவித்துள்ளார். இந்தப் போட்டிகள் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 8 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்



### கோவிந்தசாமி லோகநேசன்

(ஓய்வுபெற்ற அதிபர், வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலை)

வதிரி, "பாக்கிய வாசா"வைச் சேர்ந்த கோவிந்தசாமி லோகநேசன் நேற்று (01.07.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.கோவிந்தசாமி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான ஆ.இராசரத்தினம் - சீவரத்தினம் தம்பதியரின் மருமகனும் லோ.ஜீவரேகாவின் அன்புக் கணவரும் சுரேந்திரா யசோதா, லோ. நிமலன், லோ.யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. க. தங்கராசா லோகசக்தி, கோ.லோகதாசன், சீ.சித்தரஞ்சன், லோகராணி, இ.யோகராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற ராஜஸ்ரீகாந்தன் மற்றும் மு.மகுரமணி புஷ்பரேகா, இ. ஸ்ரீதரன், இ. ஸ்ரீகரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் சு. தன்யாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2011) சனிக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆலங்கட்டை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"பாக்கிய வாசா", வதிரி. (5390)
தகவல்: குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 02 |
| 11 | 07 |
| 1947 | 2010 |



### அமரர் பொன்னுத்துரை குணரெத்தினம்

எமைப் பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகளுடன்
என்றும் நாம் வாழலாம்.

50/10, 3 ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதனை படைக்கும் இந்தியா



மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான பார்படோஸ் டெஸ்டில், இந்திய அணி முதல் இன்னிங்சில் 11 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது. வேகப்பந்து வீச்சில் மிரட்டிய இஷாந்த் சர்மா 6 விக்கெட்டுக்கள் வீழ்த்தி அசத்தினார்.

மூன்றுஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்க இந்திய அணி மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ளது. முதல் டெஸ்டில் வென்ற இந்திய அணி, 1-0 என்று முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது டெஸ்ட்பார்படோசில் நடக்கின்றது.

முதல் இன்னிங்சில் இந்திய அணிக்கு லக்ஸ்மன் (85), ரெய்னா (53) கைகொடுக்க, 201 ஓட்டங்கள் எடுத்தது. இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் மேற்கிந்தியத்தீவுகள் அணி, முதல் இன்னிங்சில் 5 விக்கெட்டுக்களுக்கு 98 ஓட்டங்கள் எடுத்திருந்தது. சந்தர்போல் (20), சாமுவேல்ஸ் (21) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

• நேற்று முன்தினம் மூன்றாவது நாள் ஆட்டம், மழை காரணமாக தாமதமாக ஆரம்பமாகியது. மேற்கிந்தியத்தீவுகளின் சந்தர்போல், சாமுவேல்ஸ் இணைந்து இந்திய வீரர்களில் பந்துவீச்சை நிதானமாக எதிர்கொண்டனர். ஆறாவது விக்கெட்டுக்கு 77 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், சந்தர்போல் (37) மிதுன் வேகத் தில் 'போல்டானார்'. இதன் பின்னர் வந்த அணித்தலைவர் சமியை (15), வீழ்த்திய இஷாந்த் சர்மா, சர்வதேச டெஸ்ட் அரங்கில் 100 ஆவது விக்கெட் வீழ்த்தி அசத்தினார்.

தொடர்ந்து அசத்திய இவர் ராம்போல், எட்வர்ட்ஸ் இருவரையும், டக் அவுட்டாக்கினார். மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதல் இன்னிங் சில் 190 ஓட்டங்களுக்கு சுருண்டது. சாமுவேல்ஸ் (78) ஆட்ட மிழக்காமல் இருந்தார். இஷாந்த் சர்மா 6 விக்கெடுக்கள் வீழ்த்தினார்.

முதல் இன்னிங்சில் பெற்ற 11 ஓட்டங்கள் முன்னிலையுடன், இந்திய அணி இர்ண்டாவது இன்னிங்சை தொடக்கியது. தேநீர் இடை வேளைக்கு சற்று முன்பாக இந்திய அணி, இரண்டாவது இன்னிங்சில் விக்கெட் இழப்பின்றி 20 ஓட்டங்கள் எடுத்து, 31 ஓட்டங்கள் முன் னிலை பெற்றிருந்தது. அபினவ் முகுந்த் (8), விஜய் (2) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (15)

# மகளிர் ஆட்டம் முடிவை நோக்கி



விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் ரெனிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் இறுதிச்சுற்றில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா, செக் குடியரசின் பெட்ரா விட்டோவா ஆகியோர் மோது கின் றனர்.

வியாழக்கிழமை நடைபெற்ற மகளிர் ஒற்றையர் அரையிறுதியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6-4, 6-3 என்ற நேர் செட்களில் ஜேர்மனியின் சபைன் லிசிக்கியை வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் இரண்டாவது முறையாக விம்பிள்டன் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார் ஷரபோவா. இதற்கு முன்னர் 2004 ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியில் ஷரபோவா சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

மற்றொரு அரையிறுதிச்சுற்றில் செக் குடியரசின் பெட்ரா விட்டோவா 6-1, 3-6, 6-2 என்ற செற் கணக்கில் பெலாரஸ்ஸின் விக்டோரியா அசரென்காவை வீழ்த்தியதன் மூலம் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

புதன்கிழமை நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிச்சுற்றில் ஸ்பெயினின் ரபேல் நடால் 6-3, 6-3, 5-7, 6-4 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் மார்டி பிஷ்ஷையும், பிரிட்டனின் அன்டி முர்ரே 6-3, 6-4, 6-4 என்ற நேர் செற்களில் ஸ்பெயினின் பெலிஸியானோ லோபசையும் வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறினர்.

வியாழக்கிழமை நடைபெற்ற ஆடவர் இரட்டையர் காலிறுதிச்சுற்றில் அமெரிக்காவின் பாப் பிரையன் - மைக் பிரையன் சகோதரர்கள் ஜோடி 6-3, 6-4, 6-4 என்ற நேர் செட்களில் ஆஸ்திரியாவின் ஜூர்கன் மெல்ஸர் - ஜேர்மனியின் பிலிப் ஜோடியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது. (15)

# சம்பியன் லீக் செப்ரெம்பரில்

மூன்றாவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடருக்கான அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு சம்பியன் சென்னை சூப்ப கிங்ஸ் அணி முதல் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை சந்திக்கின்றது.

இந்தியா, ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட நாடுகளின் உள்ளூர் 'ரி-20' தொடரில் முதல் இரண்டு இடம் பெற்ற அணிகள் மோதும் மூன்றாவது சம்பியன்ஸ் லீக் 'ரி-20' தொடர் எதிர்வரும் செப்டம்பர் 23 முதல் ஒக்டோபர் 9 வரை நடக்கின்றது.

இதில் நான்காவது ஐ.பி.எல் சம்பியன் சென்னை சூப்ப கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் ரெட் பேக்ஸ் உள்ளிட்ட 7 அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மீதமுள்ள மூன்று அணிகள் தகுதிச் சுற்றின் அடிப்படையில் தேர்வாகும்.

தகுதி சுற்றில் பங்கேற்கும் கொல்கத்தா, டிரினிடாட் டுபாகோ உள்ளிட்ட ஆறு அணிகள், இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. லீக் போட்டியின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களைப் பெறும் அணிகள் தவிர, மூன்றாவது அதிகபட்ச புள்ளி பெற்ற ஒரு அணி என்று மொத்தம் 3 அணிகள் சம்பியன்ஸ் லீக் தொடருக்கு தகுதி பெறும். இந்தப் போட்டிகள் எதிர்வரும் செப்டம்பர் 19, 20, 21 ஆம் திகதிகளில் ஹைதராபாத்தில் நடக்கும்.

முக்கிய சுற்றில் மொத்தம் உள்ள 10 அணிகள், இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 'ஏ' பிரிவில் சென்னை, மும்பை, நியூ சவுத் வேல்ஸ் புளூஸ் (ஆஸ்திரேலியா), கேப் கோப்ராஸ் (தென்னாபிரிக்கா) மற்றும் தகுதி சுற்று 'பி' பிரிவில் வெல்லும் அணி என்று மொத்தம் 5 அணிகள் இடம் பெற்றுள்ளன. 'பி' பிரிவில் பெங்களூர், ரெட் பேக்ஸ் (ஆஸ்திரேலியா), வாரியர்ஸ் (இலங்கை) மற்றும் தகுதி சுற்றில் இருந்து இரண்டு அணிகள் உள்ளன.

சென்னை அணி தனது முதல் போட்டியில் (செப் 24), மும்பை இந்தியன்ஸ் அணியை எதிர்கொள்கின்றது. இரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பெறும் அணிகள், ஒக்டோபர் 7, 8 இல் நடக்கும் அரையிறுதி போட்டிக்கு தகுதி பெறும். இந்தத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் ஒக். 9 இல் சென்னையில் நடக்கவுள்ளது.(15)


# சிக்கலில் டோனியின் ஆட்டமிழப்பு

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் அணித்தலைவர் டோனிக்கு தவறான ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டதை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் உறுதி செய்தது.

டோனி, எட்வர்ட்ஸ் பந்துவீச்சில் ஆட்டமிழந்தபோது, அது 'நோ போலாக' இருக்கலாம் என்ற சந்தேகம் போட்டி நடுவருக்கு ஏற்பட்டது. இதையடுத்து அதை உறுதி செய்த அவர் மூன்றாவது நடுவரை அணுகினார்.

ஆனால் 'ரீபிளேயில்' அது 'நோ போல்' இல்லை என்று காட்டப்பட்டதால் மூன்றாவது நடுவர், டோனிக்கு ஆட்டமிழப்புக் கொடுத்தார். ஆனால் இப்போது அது தவறான தீர்ப்பு என்றும், 'ரீபிளேயில்' தவறாக காட்டப்பட்டுள்ளது என்பதும் தெரியவந்துள்ளது. இதை ஐ.சி.சியும் உறுதி செய்துள்ளது.

இந்த விவகாரத்தில் போட்டியை ஒளிபரப்பும் ஐ.எம்.ஜி, தவறுக்கு மன்னிப்பு கோரியுள்ளது. (15)



# விமானத்தில் பறக்கப்போகும் நட்சத்திரங்கள்



இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான சச்சின், டோனி விரைவில் 'சுகோய்' போர் விமானத்தில் பறக்க உள்ளனர். இதற்கு மத்திய பாதுகாப்புதுறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்திய விமானப் படைக்கு சொந்தமான 'சுகோய்' ரக போர் விமானம் மிகவும் சக்தி வாய்ந்தது. மின்னல் வேகத்தில் பறந்து எதிரிகளின் இலக்கை தாக்கும் வல்லமை பெற்றது. மோசமான வானிலையிலும் கூட சிரமம் இல்லாமல் பறக்கும் வசதி கொண்டது. இதில், முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம், தற்போதைய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் உள்ளிட்ட பல வி.ஐ.பிக்கள் பறந்துள்ளனர். இவர்கள் வரிசையில் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனி மற்றும் 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் சேர உள்ளனர்.

ராணுவத்தில் மிகுந்த ஆர்வமுடைய சச்சின் ஏற்கனவே இந்திய விமானப் படையின் கௌரவ 'குரூப்' தலைவராக உள்ளார். இவரும் டோனியும் 'சுகோய்' ரக விமானத்தில் பறக்க விருப்பம் தெரிவித்திருந்தனர். இது தொடர்பான பரிந்துரை விமானப்படை சார்பில் மத்திய பாதுகாப்பு அமைச்சகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது. இவர்களுக்கு அரசிடம் இருந்து சிறப்பு அனுமதி பெற்று தரப்படும் என்று விமானப்படை தளபதி பி.வி.நாயக் ஏற்கனவே உறுதி அளித்திருந்தார்.

தற்போது மத்திய பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒப்புதல் கிடைத்துள்ளது. ஆனால், மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் டோனி விளையாடி வருகிறார். சச்சின் தனிப்பட்ட முறையில் இங்கிலாந்து சென்றுள்ளார். இதனால் இவர்களது 'சுகோய்' அனுபவம் தள்ளிப் போகின்றது.

இது குறித்து விமானப்படையின் உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், இரு கிரிக்கெட் வீரர்களையும் 'சுகோய்' போர் விமானத்தில் அனுப்பும் எங்களது பரிந்துரைக்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. விரைவில் பூனே தளத்தில் இருந்து இவர்கள் பறப்பார்கள். இதற்கான திகதி இன்னும் முடிவு செய்யப்படவில்லை - என்றார். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஸ்ரீ அம்மா பகவான் சரணம் ஸ்ரீ பகவானின் தரிசனமும் வித்யா பூஜையும்

ஸ்ரீ ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கங்களினால் வித்யா மாலை அணிவிக்கப்பட்ட மாணவர்களுக்காக இணையத்தினூடாக ஸ்ரீ பகவான் திவ்ய மங்கள தரிசனம் அளிப்பதற்கு அனுக்கிரகம் செய்துள்ளார். இத்தகைய அரிய சந்தரப்பத்தினைப் பயன்படுத்தி வித்யா மாலை அணிந்த சகலமாணவர்களும் கல்வி முன்னேற்றதுக்காக ஸ்ரீ பகவானின் திவ்ய மங்கள தரிசனத்தை காண அன்புடன் அழைக்கின்றோம்.

காலம்- நாளை (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை

இடம்- யா/ இளங்கலைஞர் மன்ற கலாமண்டபம்.
(சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்)
யா/ சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

நேரம் காலை 8.30 மணி

ஏகத்துவக்கழகம், யாழ்மாவட்டம்.

## "தேர்வடம்" விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்ட தேர்வடம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
வீரபத்திர சுவாமி கோயில்,
பழைய வீதி, கோப்பாய் தெற்கு.
தொலை.இல- 0718475027

## மரண அறிவித்தல்கள்

### ஷண்முகநாதக் குருக்கள் காண்டீப சர்மா
(மணிஐயா)



மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஷண்முகநாதக்குருக்கள் காண்டீப சர்மா நேற்று (01.07.2011) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச் சாமிக்குருக்கள் - நாராயணி அம்மா தம்பதியரினதும் மாவிட்டபுரம் குமாரசாமிக்குருக்கள் - அன்னம்மா (கீரிமலை) தம்பதியரின் பேரனும், காலஞ்சென்ற மஹாராஜஸ்ரீ ஷண்முகநாதக்குருக்கள் மற்றும் நகுலேஸ்வரி அம்மா தம்பதியரினதும் புத்திரனும், இரத்தின சபாபதிக்குருக்கள் (ஆதீன கர்த்தா, மாவைக்கந்தன்), கனக சபாபதி சர்மா, திரிபுரசுந்தரி, சாண்டில்ய சர்மா, வாருணிதேவி, பிரியதர்சினி, பரமேஸ்வரன் சர்மா, ஜெகதீஸ்வரி, வந்தியதேவ சர்மா ஆகியோரின் சகோதரனும், கலாவதி, ஜெயந்தி, சுப்பிரமணிய குருக்கள், செல்வராணி, கைலாசநாதக் குருக்கள், சங்கர்ஐயர், வாகீஸ்வரி, பிரதீப சர்மா, சோபிதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2011) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.30 மணிக்கு மாவை ஆதீன இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புண்ணிய தீர்த்தக்கரையில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அடியார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகாராஜஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள் குடும்பம்.
மாவிட்டபுரம்.

### திருமதி தங்கவேலாயுதம் இலட்சுமி அம்மா
(கல்லூரி வீதி, பருத்தித்துறை)



கல்லூரி வீதி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கவேலாயுதம் இலட்சுமி அம்மா கடந்த(27.06.2011) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகசாமி -சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், குழந்தைவேலு தங்கவேலாயுதம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலுமயிலும் இரத்தினசாமி , கதிரவேலு ஆகியோரின் சகோதரியும் , சரஸ்வதி, புவனேஸ்வரி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தாயும், மற்றும் தேவசிகாமணி, இராமசந்திரன், சண்டிகாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், ஆசைப் பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும், பூட்டப்பிள்ளைகளின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சுப்பர் மட இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

(சி/1237)

## வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 2

க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்துக்கு முன்பாக அமைந்துள்ள சத்தியசாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. இந்தக் கருத்தரங்கில் வணிகக்கல்வி பாடத்துக்கான கருத்தரங்கை கே. பாலகிருஷ்ணன் வழங்கவுள்ளார். இவற்றுடன் பரீட்சைக் குறிப்புகள் அடங்கிய இலவச கையேடுகளும் வழங்கப்படும் என சத்திசாயி சேவா நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-323)

## பாம்பு புகுந்ததால் அலுவலக செயற்பாடுகள் ஸ்தம்பிதம்

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினுள் புகுந்த பாம்பினால் சுமார் ஒரு மணி நேரம் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்தன.

இந்தச் சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன் காலை வேளையில் இடம்பெற்றது.


காலையில் அலுவலகத்தைத் திறந்த ஊழியர்கள் அங்கே பாம்பின் நடமாட்டத்தைஅவதானித்து அதனை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபட்டனர்.

இவர்களிடம்பிடிபடாமல்பாம்பும் அலுவலகக்கட்டடத்தில் உள்ள அனைத்து மேசைகள், அலுமாரிகளுக்குள்மறைந்து மறைந்து கலைக்கும் முயற்சியில்ஈடுபட்டவர்களை களைப்படைய வைத்தது.

சுமார் இரண்டரை மணிநேர போராட்டத்தின் பின்னர் பாம்பு தானாகவே வாசல் வழியாக வெளியேறியது.

(ஓ-207)

## காணவில்லை



நீலியம்பனை, மல்லாகத்தைச் சேர்ந்த 18 வயது மாணவன் **தவராஜசிங்கம் மேருஜன்** அவர்களை 30.06.2011 வியாழன் மாலை முதல் காணவில்லை. கண்டவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தவராஜசிங்கம்- 0773363767, 0774811542

## G.C.E (A/L) 2011

CHEMISTRY, BIOLOGY பாடப் பரப்புகள் முடிக்கவில்லையா? Past Paper செய்யவில்லையா? Royal, Vishaka பயிற்சிகள் வீடு வந்து கற்பித்தல். அழையுங்கள் வித்யா. சுழற்றுங்கள் 0777730838 (Rs 500 Per hour) Tamil - English Medium.

## ஆசிரியர் தேவை

புலமைப்பரிசில் 2011 தோற்றவுள்ள மாணவிக்கு வீட்டில் வந்து கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை

தொடர்பு: 0779867058

## விற்பனைக்கு

வீணை, DVD Player மற்றும் வீட்டுத் தளபாடங்கள் என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0718148150, 0212222444
29/53, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னம்மா இராசையா



புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தில் வசித்தவரும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமாகிய பொன்னம்மா இராசையா நேற்று (01.07.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின்(மில்க்பார், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2011) ஞாயிற்றுக் கிழமை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: சந்திரா.

## மரண அறிவித்தல்

### சிதம்பரநாதர் யோகேந்திரன்

சி. யோகேந்திரன் நேற்று (01.07.2011) வெள்ளிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் கலைவாணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சிதம்பரநாதர்- பத்மாவதி தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற Dr.வேதாரணியம்- பரமேஸ்வரி தம்பதியரின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற லலிதாம்பாள் மற்றும் சண்முகப்பிரியா, பவானந்தன், சபேசன், ரவீந்திரன், சந்திரசேகர் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.07.2011)சனிக்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும், (மு.ப9 -பி.ப9) மீண்டும் ஞாயிற் றுக்கிழமை (03.07.2011) மு.ப 9 இலிருந்து வைக்கப்பட்டு ஈமக் கிரியைகள் பி.ப4 ற்கு நடைபெறும்.

தகவல்:
அன்பு மனைவி கலைவாணி,
108/11c, watarapala Road,
Mount Levinia.

## அந்தியேட்டி அழைப்பு

செல்வன்

### இரத்தினம் இதயராசா (மாமா)



தோற்றம் 1985.06.27

மறைவு 2011.05.16

16.05.2011 அன்று இறையடி சேர்ந்த எமது செல்வப் புதல்வன் செல்வன் இரத்தினம் இதயராசா (மாமா) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (03.07.2011) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கும் முற்பகல் 11 மணிக்கு சபிண்டீகரண நிகழ்வும் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கு மேற்படி நிகழ்வுகளில் பங்குகொள்ள பேரன்புடன் அழைக்கின்றோம்.

* அழைப்பிதழ் கிடைக்காத அன்புள்ளங்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கும்படி பணிவுடன் வேண்டுகின்றோம்.

அன்புடன் திருமதி இரத்தினம் வரதலட்சுமி(அகபதி)-தாய் மற்றும் குடும்பத்தினர்.

(ஒ/1499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தக்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை மீது சுமத்தப்பட்டிருக்கும் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இலங்கை அரசு தீவிர விசாரணைகளை நடத்தவேண்டும் என்று ஐ.நா. உறுப்பு நாடுகள் விரும்புகின்றன.

இலங்கையில் கடந்த காலங்களில் நடத்தப்பட்ட இவ்வாறான விசாரணைகள் பூர்த்திசெய்யப்பட்டதில்லை. விசாரணை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. ஒரு குற்றவாளியாவது தண்டிக்கப்படவும் இல்லை.

**தலையிடும் திட்டம் கைவசம் உள்ளது**

இவ்வாறான நிலைமை மேலும் ஏற்பட்டால், இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிடும். அவ்வாறானதொரு திட்டம் சர்வதேச சமூகத்திடம் உள்ளது. மனித உரிமைகள் சபை மிகவும் சுறுசுறுப்புடன் இந்த விடயத்தை பரிசீலிக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இலங்கையின் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக பிரிட்டனின் சனல் - 4 தொலைக்காட்சி நிலையத்தால் ஆவணத் திரைப்படம் ஒளிபரப்பப்பட்டது முதல் கொழும்பின் மீது அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

சரணடைந்த புலித் தலைவர்களை அரச படையினர் சுட்டுக்கொன்று யுத்தக் குற்றம் புரிந்தனர் என்று ஐ.நா.சபையின் சமீபத்திய அறிக்கை குற்றம்சாட்டியது.

ஆகவே, இந்த நிலையில் யுத்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக இலங்கை அரசு காலத்தை இழுத்தடிக்காது உடன் விசாரணை நடத்தவேண்டும். இல்லையேல், சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படுவதைத் தடுக்க முடியாது - என்றார்.

இதேவேளை -

ஜெனீவாவில் ஐ.நாவின் மனித உரிமைகள் சபையின் 17 ஆவது அமர்வு மே மாதம் 30 ஆம் திகதி ஆரம்பமான போது அந்த அமர்வை ஆரம்பித்து வைத்து நவநீதம்பிள்ளை உரையாற்றி இருந்தார்.

''இலங்கை மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரிக்க வேண்டியது அந்த நாட்டின் கடமையாகும். இந்த விசாரணையைக் கண்காணிக்க சர்வதேச பொறிமுறை ஒன்று அவசியம்'' என்று அங்கு உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டிருந்தார். (ஒ-ஐ-சி)

## கஞ்சாவுடன் கைதானவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

கஞ்சா வைத்திருந்த நபருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

கஞ்சா வைத்திருந்த யாழ்., திருநகரைச் சேர்ந்த மேற்படி நபரை யாழ்., றக்கா வீதியில் வைத்து பொலிஸார் நேற்றுக் கைது செய்து யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கினை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.(ஐ-9)

## பிரதியமைச்சர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாட்டு உபகரணங்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் என்பவற்றையும் கையளித்தார்.

பின்னர் பிற்பகல் 3 மணியளவில் மீண்டும் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதி அமைச்சினால் முன்பள்ளிச் சிறுவர்களின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுச் செயற் திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்களையும் பிரதி அமைச்சர் ஆரம்பித்து வைத்தார்.

பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாஹ் 15 வருடங்களின் பின்னர் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-15)

## பான் கீ மூனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட்டாரமும், இன்னர்சிற்றி பிரஸ் இணையதளமும் இந்தத் தகவலை நேற்றுத் தெரிவித்தன.

இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை, தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்குவதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவை அமைக்கும் அரசின் திட்டம் மற்றும் இலங்கையின் தற்போதைய நிலவரம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக ரணில் விக்கிரமசிங்கவும் பான் கீ-மூனும் கலந்துரையாடுவர் என்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகம் நேற்று மேலும் கூறியது.

(ஒ-சி)

## அமெரிக்காவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு ஒன்று இல்லாததன் காரணமாகவே அரசு காலத்தை இழுத்தடிக்கின்றது. இதனை மேலும் இழுத்தடிக்கவே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அரசு நியமிக்க முனைகிறது என அரசியல் ஆய்வாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த நிலையில், அரசிடம் உண்மையாகவே அரசியல் தீர்வு உள்ளதா, அப்படி இருந்தால் ஏன் காலத்தை இழுத்தடிக்கின்றது, இதனால் அரசுக்கு சர்வதேச அழுத்தங்கள் ஏற்படுமா என கேட்டபோதே விக்கிரமபாகு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் 'உதயனு'க்குத் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படுமாறே அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. அண்மையில் இலங்கை வந்த ரொபட் ஓ பிளேக்கிடம் அரசு இது விடயம் தொடர்பில் இணங்கியது. இந்தியாவும் இதனையே கூறியுள்ளது.

ஆனால், அரசு தற்போது தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று எவரும் இல்லை எனக் கூறுகின்றது. அதனாலேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்து அதனூடாகத் தீர்வு வழங்கப்படும் எனக் கூறி வருகின்றது.

ஏகப் பிரதிநிதிகள் யார் என்பதை தேர்தலே தீர்மானிக்கும். வடக்கு, கிழக்கு மக்கள் கூட்டமைப்பினர்தான் தங்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை தங்களின் வாக்குரிமை மூலம் நிரூபித்துள்ளனர்.

**மஹிந்தாவை ஆட்சியில் அமர்த்திய நாடுகள் இந்தியாவும் அமெரிக்காவுமே**

உண்மையாகவே தீர்வு இருந்தால் கூட்டமைப்பினருடன் பேசி வடக்கு, கிழக்கு மக்களுக்கு அரசு அரசியல் தீர்வை வழங்க முன்வரவேண்டும். இதுவே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

அரசு அப்படியே காலத்தை இழுத்தடிக்க முனையுமானால் அமெரிக்க, இந்திய அரசுகள் மஹிந்த அரசை வீட்டுக்கு அனுப்பும் நாள் வெகு தொலைவில் இல்லை.

ஏனெனில், இந்தியாவும், அமெரிக்காவுமே மஹிந்தவை ஆட்சியில் அமர்த்தியதுடன், யுத்தத்தை முடிப்பதற்கு பெருமளவு பங்களித்தன. எனவே, இலங்கை விடயத்தில் கட்டாயம் அவர்கள் தலையிட வேண்டியதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், இறுதிக்கட்ட யுத்தத்தில் ஒரு இலட்சத்து 50 பேர் கொல்லப்பட்டனர். இதற்கு ஆயுதம் வழங்கிய நாடுகளும் பொறுப்புக் கூறவேண்டும்.

**மஹிந்த என்ற பொம்பை**

தொடர்ந்தும் அரசு இனப்பிரச்சினை தொடர்பில் மௌனம் காக்குமானால், சர்வதேசத்தின் தலையீடு தவிர்க்க முடியாத ஒன்றாகிவிடும்.

இலங்கை அரசை மஹிந்த என்ற பொம்மை ஒன்று ஆட்சி செய்கின்றது என்பது அனைவருக்கும் தெரியும். இதன் காரணமாக அரசு பக்கம் உள்ள இனவாதத்தைத் தூண்டும் அமைச்சர்களின் தாளத்துக்கு மஹிந்த என்ற பொம்மை ஆடுகின்றது.

அவர்களின் அழுத்தத்தாலேயே கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி, தீர்வை வழங்க அரசு தயங்குகின்றது - என்றார். (ஒ-சி)

## 429 தடவைகள் நீதிமன்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

1996ஆம் ஆண்டு முதல் இன்றுவரை குறித்த ஐவரும் சுமார் 429 தடவைகள் நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

கர்ப்பிணியான திருமகள், சிறையில் இருந்தபோது அவருக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. 5 வயது வரை நான்கு சுவர் சிறையில் சிறுபிராயத்தை கழித்த திருமகளின் மகன், 5 வயதில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டான்.

ஒப்படைக்கப்பட்ட சில தினங்களில் மகன் பாடசாலையில் சேர்க்கப்பட்டான் என்ற தகவல் திருமகளுக்குக் கிடைத்தது. ஆனாலும், அன்று தொடக்கம் இன்று வரை மகன் தொடர்பாக வேறெந்த தகவலும் திருமகளின் காதுகளுக்கு எட்டவில்லை. திருமகள் அன்று தொடக்கம் பித்துப் பிடித்தவள் போல நான்கு அறை சிறையில் காலத்தை கடத்தி வருகிறார்.

உற்றார், உறவினர் இருந்தபோதிலும், சிறைச்சாலை வந்து பார்க்கும் அளவுக்கு எவரும் முன்வரவில்லை. அத்துடன், திருமகளின் கணவரும் அதே சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதோடு, அவருடன் கைதான மூவரும் அவருடனேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 வருடங்களாக சிறைக்குள் வாழ்வைக் கழித்துவரும் திருமகள் உட்பட ஐவர் தெஹிவளை குண்டுத் தாக்குதலுக்கு உதவி புரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரகசிய பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் கைதுசெய்யப்பட்டு, 15 வருடங்களாக நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டும், இன்றும் வழக்கு விசாரணை தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஒவ்வொரு தடவையும் நீதிமன்றுக்கு அழைத்துச் செல்லும்போது இன்று நீதி கிடைக்குமா? இன்றாவது விடுவிப்பார்களா? என்ற எதிர்பார்ப்புகளுடன் செல்லும் திருமகளின் மனம் நீதிமன்றித்திலிருந்து வெளியேவரும்போது மரத்துவிடுகிறது.

இவ்வாறே கடந்த 15 வருடங்களாக நிகழ்ந்து வருகின்றது. இவர்களை விடுதலை செய்வதற்கு 15 வருடங்களாக முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனாலும், எனது இளமைப் பருவமும், சந்தோஷமும் சிறைச்சாலையிலேயே முடியும் நிலைமை ஏற்படுவதைத் தடுக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏக்கத்துடன் கேள்வி எழுப்புகிறார் திருமகள். (ஒ-சி)


### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள NP/HW XXXX தொடரிலக்கமுடைய CD 125T, Twin-Deluxe மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

தொடர்பு-0212222444, 0774528818

[illegible]/53, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### மணமகள் தேவை

1975ஆம் ஆண்டு ரேவதி நட்சத்திரம், கிரகபாவம் 27 1/4 உடைய வடமராட்சி இந்து கௌரவ குடும்ப உத்தியோகம் பார்க்கும் B.SC. ஆண் மகனுக்கு மணமகள் தேவை.

விளம்பர இல-4157, C/o உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### உடன் வேலைவாய்ப்பு

நெல்லியடியில் அமைந்துள்ள "நெல்லைசில்க்" நிறுவனத்துக்கு ஆண் விற்பனையாளர்கள் தேவை. நேரடியாக விண்ணப்பதாரிகள் உரிமையாளரை சந்திக்கலாம். சம்பளம் பேசி முடிவுசெய்யப்படும்.

உரிமையாளர், நெல்லைசில்க்.

### இரவு பாதுகாப்பு ஊழியர் தேவை

இரவுப் பாதுகாப்பு சேவைக்கு ஆள்கள் தேவை.
விண்ணப்பதாரிகள் 30-50 வயதுக்குட்பட்டவர்களாகவும்
க.பொ.த (சா/த) கற்றவர்களாகவும்
திடகாத்திமானவர்களாகவும் இருக்கவேண்டும்.
கவர்ச்சியான சம்பளம் தரப்படும். கரவெட்டி பிரதேச செயலக எல்லைக்குள் வசிப்பவர்களாக இருக்கவேண்டும்.
விண்ணப்பத்துடன் கிராம அலுவலரின் சான்றிதழும் நெல்லியடி வாணிபர் கழக அங்கத்தவர் ஒருவரால் சிபார்சு செய்யப்பட்ட கடிதமும் இணைக்கப்படவேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி- 10.07.2011
நவீன சந்தையில் அமைந்துள்ள காரியாலயத்தில் கையளிக்கலாம். அல்லது தபால் மூலம் அனுப்பலாம்.

நெல்லியடி வாணிபர் கழகம்,
கரவெட்டி.

தலைவர்
சி.அகிலதாஸ்.

### 18 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



ஸ்ரீதரன் சிவாஸ்கரன்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ஸ்ரீதரன்-ஜெயலக்சுமி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஸ்ரீதரன் சிவாஸ்கரன் தனது 18 ஆவது பிறந்தநாளை இன்று (02.07.2011) சனிக்கிழமை Viare federico, Palermo, Italy இல் வெகுவிமரிசையாக கொண்டாடுகின்றார். இவரை கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் அருளுடன் பல் கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ஸ்ரீ. ஜெயலக்சுமி (தாய்), ஸ்ரீ.பிரதீபன் (சகோதரன்)
ச.கணேசமூர்த்தி (பெரியமாமா),
ச.சிவலிங்கம் (சின்னமாமா),
ச.கணேசலிங்கம் (ஆசைமாமா)

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்

(சி/1301)

### மக்கள் வங்கியின் பொன்விழா - 2011



ஒப்பற்ற வங்கிச் சேவையில் 50 ஆண்டுகள் மகத்தான சேவைதனைப் பூர்த்திசெய்து, பொன்விழாக் காணும் மக்கள் வங்கிக்கு மகிழ்ச்சிகரமான இந்தத் தருணத்திலே எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெரும் மகிழ்வெய்துகின்றேன்.

"மக்கள் சேவையே மகேசன் சேவை" என்ற வாக்குக்கிணங்க, நெருக்கடி மிகுந்த காலகட்டங்களில்கூட, மக்களோடு மக்களாக ஒன்றிணைந்து, மக்கள் வங்கி ஆற்றிய அரும்பணிகள் போற்றப்படக்கூடியனவாகும்.

இன்றுவரை சிறப்பான சேமிப்புத் திட்டங்களையும் இலகு கடன்களையும் வழங்கி, எமது பிரதேசத்தின் சமூக, பொருளாதார, கலாசார மேம்பாட்டுக்காக மக்கள் வங்கி சிறப்பான சேவை தனை வழங்கி வருகின்றது.

இந்தப் பொன்னான பிறந்தநாள் கோலா கலத்தைக் கொண்டாடும் மக்கள் வங்கி, இதே பொலிவுடனும் பெருமையுடனும் தொடர்ந்து பல நூற்றாண்டுகளைக் கடந்து மக்களுக்கான தனது சேவையை வழங்க [illegible] ஆசி கூறுகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்,
தர்மசாஸ்தா குருகுலம், இணுவில்.

(சி/1500)(34)



**On the Occasion of the Golden Jubilee of People's Bank the Message of the Bishop of Jaffna**

On the Occasion of the Golden Jubilee celebration of the People's Bank we congratulate you for your service to the people of Srilanka towards their economic development and the prosperity of the Country.

Through your several services you have contributed to the uplifted to the poor people and their improvement of their life. Hence on the occasion of your Golden Jubilee I wish the General Manager and all the Staff continued happiness and wlefare.

*Thank you and May God bless you,*

*Rt. Rev. Dr. Thomas Savundaranayagam,*
Bishop of Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரத்துறைப் பதிப்பகம்
தமிழ் சபை, யாழ்ப்பாணம்.



# யாழ்.பொது நூலக சிறுவர் பகுதி அபிவிருத்திப் பணிகள் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை2

யாழ்.பொது நூலகத்தின் சிறுவர்பகுதி சிங்கப்பூர் முறைக்கு மாற்றும் முயற்சியின் திட்டம் பூர்த்தியடைந்துள்ளது என்று யாழ்.பொதுநூலகத்தின் பிரதம நூலகர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி அளவில் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சால் இந்தப் பிரிவைத் திறந்துவைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மேலும் கூறப்பட்டது.

சிங்கப்பூர் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பின் பணிப்பாளர் மார்க்கட் தவரக்கோன் 3 மில்லியன் ரூபா நிதியை இதற்கு ஒதுக்கியுள்ளார்.

(ம-311)

# மீள்குடியேற்ற அமைச்சால் வடக்கில் ஆயிரம் வீடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 2

மீள்குடியேற்ற அமைச்சால் வடக்கு மாகாணத்தில் ஆயிரம் வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அமைச்சு தலா ஒரு லட்சம் ரூபாவை மானியமாகவும் வீட மைப்பு அபிவிருத்தி அதிகார சபை மூலம் 2 லட்சம் ரூபா கடனாகவும் இதற்கு வழங்கவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் 200 வீடுகள் அமைப்பதற்கான விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகள் மூலம் பெறப்படவுள்ளன.

விண்ணப்பங்கள் பெறப்பட்டுத் தகுதியானவர்களின் பெயர், விவரங்களைத் தயாரித்து அனுப்பி வைக்குமாறு மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் சகல பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பணிமனைகளுக்கு அறிவித்துள்ளார்.

(ம-207)

# மூன்று கிலோ போலி நகைகளை அடகுவைத்து ரூ. 1 கோடி மோசடி

## 72 வங்கிக் கிளைகளில்

கொழும்பு, ஜூலை 2

மத்திய மாகாணத்தில் உள்ள 72 வங்கிக் கிளைகளில் மூன்று கிலோவுக்கும் அதிகமான (423 பவுண்) போலி நகைகளை அடகு வைத்து ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தார்கள் எனக் கூறப்படும் மூவரை அளவத்துகொட பொலிஸார் கைதுசெய்துள்ளனர். குறித்த சந்தேகநபர்கள் மத்திய மாகா ணத்தில் தொடர்ச்சியாக இவ்வாறான ஊழல் மோசடிகளில் ஈடுபட்டுவந்துள்ளனர் என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்கள் நேற்று கண்டி பிரதான நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். இதனையடுத்து அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தக் கும்பலின் பின்னணியில் யார், யார் உள்ளனர் என்பவை உட்பட பல்வேறு விடயங்களைக் கண்டறிவதற்கென விசேட பொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(இ-11)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

புதிய பிரிவுகள் ஆரம்பம் -
03.07.2011 (நாளை)
மாணவர்கள், தொழில் புரிவோர் மற்றும் வெளிநாடு செல்ல விரும்புவோருக்கானது.
அடிப்படையில் இருந்து கற்பிக்கப்படும்.
NO.2/2, Maruthadi 1st lane, Nallur, Jaffna.
Tel:- 0750715058.

பௌதிகவியல்/ இணைந்த கணிதம்
தமிழ் - ஆங்கிலம் 2012, 2013 A/L
தனிப்பட்ட முறையில் ஏராளமான பயிற்சிகளுடன் மேற்படி பாடத்திட்டங்கள் குறுகிய காலத்தில் சிறப்பாக முடித்துக் கொடுக்கப்படும்.
பெற்றோர் மட்டும் தொடர்பு.
பிரபல கல்லூரிகளில் கற்பித்த ஆசிரியர்.
தொடர்புகளுக்கு:-0775178727.

சானியா கேபல் கெயர்
இல-262, நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.
நிழல் அல்ல நிஜம்!!
* ஒரே வாரத்தில்:
உங்கள் கருமை நிறம் நீங்கி அழகிய நிரந்தர நிறம்!!
(கழுத்து கருமை, கண்கரு வளையம், கன்னத்தில் வரும் கருமை சிகிச்சைகள் இலவசம்)
* முடி நீர்வு, இளநரை, பொடுகு நீக்குதல், கூந்தலை கருமையாக்குதல்
(முக உரோமம் அகற்றல், புருவம் சீரமைத்தல் இலவசம்)
வழுக்கைத் தலைகளிற்கும் சிகிச்சை மேற்கொள்ளப்படும்.
* உடற்பருமன் கூட்டுதல், குறைத்தல்.
கைத்தசைகள், இடுப்புத் தசைகள் மற்றும் உடலின் தேவையற்ற தசைகளைப் போக்கி உடலை அழகாக்கல். முதுமைத் தோற்றத்தைப் போக்கி முக, உடல் அழகை இளமைப் பொலிவுறச் செய்யும் சிகிச்சைகள்.
NOTE: பக்கவிளைவுகளை ஏற்படுத்தும் போலிச் சிகிச்சை முறைகளையும், நேரம், பணம் வீண் விரயத்தையும் கண்டு ஏமாறாதீர்கள்!!!
"WECARE ALWAYS"
உத்தரவாதமளிக்கப்பட்ட பக்கவிளைவுகளற்ற ஆயுர்வேத சிகிச்சைகள்.
பதிவுகளை முற் கூட்டியே தெரிவிக்க
அழையுங்கள். 0777351954, 0774011129.

# கட்புல குறைபாடு பயிற்சி நெறி

குப்பிளான், ஜூலை 2

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட கட்புல குறைபாடு தொடர்பான பயிற்சி நெறி அளவெட்டி வைத்திய அதிகாரி பணிமனையில் இன்று மு.ப. 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறிக்கு தெல்லிப்பழை வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கட்புலனற்ற மாணவர்களுக்கு கற்பிக்கும் இரண்டு ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன் அறிவித்துள்ளார்.

(ஐ-39)

## மரண அறிவித்தல்

### சின்னையா சிவானந்தம்



தளக்கந்தையைப் பிறப்பிடமாகவும், துன்னாலை மத்தி, கரவெட்டியை வசிப்பிடாகவும் கொண்ட சின்னையா சிவானந்தம் கடந்த (30.06.2011) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் யோகலிங்கம் (யா/ ஞானசாரியார் கல்லூரி), கணேசலிங்கம் (யா/ வண்ணை நாவலர் ம.வி), யோகேஸ்வரி (லண்டன்), கனகேஸ்வரி, அன்னலிங்கம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேவதி (கட்டைவேலி, மெ.மி.த.க), நவரூபி, ஸ்ரீஸ்கந்த (லண்டன்), கமலநாதன் (கோவிற்கடவை சித்திவிநாயகர் மில்), வதனி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (30.06.2011) வியாழக்கிழமை மாலை 3.30 மணியளவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/1311)

தகவல்:
துன்னாலை மத்தி, கரவெட்டி. குடும்பத்தினர்.

Royal College
முன்னோடி வினாக்கள் - 2011
1. Physics 2. Chemistry
3. Biology 4. Combined Maths.
பூபாலசிங்கம் புத்தகசாலை,
யாழ்ப்பாணம்.

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
Advanced Web Development
PHP Apache MySQL Joomla
Call me: 0776577359
Don't MISs IT
Duration: 1 month
Rs.7500/=
MIS
A Professional Training
Mr R.Kumaran B.Sc.

உடன் தேவை
* கணினி தட்டச்சு செய்வதில் முன் அனுபவம் உள்ளவர் அல்லது திறமை உள்ளவர்.
* அச்சக வேலை தெரிந்தவர்.
* கணக்கு பதியக்கூடியவர்நேரில் வரவும்.
கற்சுமி வெளியீடு 166, நாவலர் வீதி, யாழ். 0718474325.




Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
04-07-2011
Batch A : 09.00 AM - 01.00 PM
Batch B : 01.30 PM - 05.30 PM
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், முற்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் உங்களுக்கு ஏற்ற நேர அட்டவணையை தெரிவுசெய்து வீண் விரயத்தைத் தவிர்கவும்.

கணினி விற்பனைக்கு
Full Set Computers
Core 2 Duo Laptop
Dicore 3.06 GHZ
Core i3 Laptop

| | |
|---|---|
| PIV 1.7 GHZ | 15750/= |
| PIV 2.0 GHZ | 16750/= |
| PIV 2.4 GHZ | 18750/= |
| PIV 3.0 GHZ | 21750/= |

Pen Drivers
650 VA UPS
Colour Printers
Laser Printers
Three Years Warranty 7.2 MbpS Dongle 3G
162, Main Street, Jaffna.
737, K.K.S Road Jaffna. (யாழ். இந்துக் கல்லூரி முன்பாக)
TP. NO :- 021-222-4865 - 0750698608
Sky Computer System.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
★ அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் தொழிற்துறைக் கணக்காளராகப் பணியாற்றுவதற்கு
AAT (SriLanka)
Foundation , Intermediate & Final
Medium :- English & தமிழ்
* க.பொ.த (சா.த) பரீட்சையில் 6 சித்திகளுடன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் ஆரம்பம்:- 02.07.2011
Certificate Course in English
Si x Batches have Successfully completed the course. 7 th Batch will commence on 08-07-2011
Day Classes :- Monday & Friday
Weekend Classes :- Saturday & Sunday
SPOKEN SINHALA COURSE
GCE O/L 2011 க்கான சிங்கள வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம்:- 02-07-2011 (Saturday) 11.00am
For Further Details.
Director
Jaffna College Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

Deutsch, Dutch, French, Italian
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு:-ஜேர்மன் மொழி Deutsch புதிய வகுப்புக்கள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.
Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.
GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

விற்பனைக்கு உண்டு
மின்சார இயந்திரத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட கொங்கிறீட் கற்கள் (பல்வேறு அளவுகளில்) மற்றும் வேலித் தூண்கள் (தேவை எனின் வேலித்தூண்கள் நாட்டிக்கொடுக்கப்படும்) விற்பனைக்குண்டு.
விற்பனை முகவர்களும் தேவை.
150, 000 ற்கு மேற்பட்ட கற்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
தொடர்பு: 0774266057

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.07.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கண்ணீர் அஞ்சலி



## லியோ அருள் ஞானராஜ்

(விக்னேஸ்வரா வீதி, கரவெட்டி, நெல்லியடி)

28.06.2011 அன்று காலமான எமது ஆருயிர் நண்பன் லியோ அவர்களின் பிரிவுச்செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

லியோ.....
நீயில்லாத கணங்கள் எப்படி இருக்கும்....?

காலா நீயோர் அந்தகனடா...
கனிவுள்ளோர் மீதே கண்ணம் வைக்கிறாய்.

பண்பு, அமைதி, பணிவு எல்லாவற்றிற்கும்
உன்னையே காட்டுவோம்
இனி நாம் யாரைக் குறிக்க ?

பல்கலை தந்த சொந்தங்களில் நீயுமொருவன்
பசுமை நினைவுகளை எம்முள் விதைத்தவன்
பாழாய்ப் போன நோய் உன்னைப் பற்றிக்கொள்ள
பாதியிலேயே எம்மைப் பரிதவிக்க விட்டாயே...

கடைவாயில் முறுவல் பூக்கும்
காட்சிகள் தான் இனி எம் விழிகளிலே
இதயத்தால் எம்முடன் இணைந்திருக்கும் - உன்னை
இதயநோய் கவ்வியது எப்படியோ?

நீ எம்மைப் விட்டுப் பிரிந்தாலும்
நெஞ்சை விட்டகலாது உன் நினைவுகள்.

இவரது பிரிவால் துயறுரும்
குடும்பத்தினருடன் இணைந்துகொள்ளும்
மொறட்டுவைப் பல்கலைக்கழக
E99/00 பிரிவு நண்பர்கள்.

(5030) (48,20,50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நீங்கா நினைவில்
## 4 ஆம் ஆண்டு

திருமதி
நகுலாவதி தங்கராஜா
(மணி)

(முன்னாள் உத்தியோகத்தர்,
இலங்கை காப்புறுதிக்
கூட்டுத்தாபனம்)

திதி: வளர்பிறை பிரதமை

*பாசத்தின்
பிறப்பிடமாய்:
03.02.1940*

*நேசத்தின்
முடிவிடமாய்:
15.07.2007*

ஊர் அறிய வாழ்ந்தாய்
உலகம் போற்ற வாழ்ந்தாய்
வாழ்க்கையின் அர்த்தத்தை கற்றுத்தந்தாய்
ஆண்டுகள் முப்பத்தேழு கூடி வாழ்ந்தோம்
அதுவே எனது வாழ்க்கையின் பொற்காலம்
ஆண்டுகள் நான்கு ஆனதுவே
முத்தென இருந்த எம்மை தடம்புரட்டியது விதியோ?
அம்பாளின் நிழல் சேர்ந்த நிம்மதியில்
வாழ்கின்றோம் நாம்....
என்றும் வாசலில் உன் வரவுக்காய்...

உங்கள் நினைவில்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


அங்கலின் ரெக்ஸ்ரைல்ஸ்,
55, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.
(48,20,25)

---

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் சரவணமுத்து நடேசபாத இருதயன் அவர்களின்

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
06 . 06 . 1935



மறைவு
13 . 07 . 2010

திதி: 02.07.2011

கண்ணை இமை காப்பது போன்று
தரணியில் எம்மை அன்புடன் பேணி
இன்புறு கல்வியோடு உயர்நிலை எய்த
என்றும் தன்உடல் பொருளாவி யாவும்
உவந்துமே எமக்கு ஈந்து மன்றுளே
ஆடும் ஈசன் மலர்ப்பதம் சேர்ந்ததாலே
என்பெலாம் உருகி உள்ளம் மறுகியே வாடுகின்றோம்
விண்ணிலே இருந்து ஆசி நிறைவுடன் தருவீரப்பா!
அன்பினால் அகலாது என்றும் அஞ்சலித்து ஏற்றுகின்றோம்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
(5360) (38-19-22)

அன்பு மனைவி, மகன், மகள்,
சகோதரிமார்.

---

# 4 ஆம் ஆண்டு நினைவலைகள்




## திருமதி
## கணேஸ்வரி தம்பிராஜா

(சுகந்தா)

*(முன்னாள் அலுவலக உத்தியோகத்தர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)*

திதி: வளர்பிறை பிரதமை

அன்னை
மடியில்:
04.11.1956



ஆண்டவன்
அடியில்:
16.06.2007

எங்கள் வீட்டில் ஒளிவீசிய நிலவொன்று
மறைந்து போனதெங்கே....
பெற்றவரும் கட்டியவரும் உடன்பிறந்தவரும்
உனைக் காணாது தவிக்க...
சிரித்து மகிழ்ந்து இன்சொல் கூறிய
சுற்றத்தாரும் நண்பர்களும் கதறி அழுது புலம்ப...
ஆண்டவன் சோதனையோ யார்தந்த வேதனையோ
புற்றில் இருக்கும் பாம்பை தெய்வமாக நீ கண்டாய்
நயினை அம்மனின் கொடியேற்ற தினத்தில்
உன் உயிரை பாதியிலே பறித்துப் போனதேனோ...
ஆண்டுகள் நான்கு ஆனாலும்
மாறாது எம் துயர்....

'துர்க்கா இல்லம்'
26/5, பிரம்படி லேன், கொக்குவில்.

அழியா நினைவுகளுடன்:
கணவர், தாய், சகோதரர்கள்.

(48,19,25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org